JULY 28, 2020
TUESDAY
VOL: 006/057
RS. 10.00
PROVINCIAL

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror







### ரிஷாட்டிடம்
## 5 மணிநேரம் விசாரணை

■ க. அகரன்



கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்கவின் கட்டளைக்கு அமைவாக, வவுனியா - ஈரற்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள

தொடர்ச்சி P2

### படையினரைப் பாதுகாக்க
## 'பலத்தை தாருங்கள்'

தமது நாட்டுப் படையினருக்கு எதிராக, சர்வதேச சக்திகளால் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவெனத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,

தொடர்ச்சி P2

## 'நடமாடும் வாக்களிப்பு சாத்தியமில்லை'



கொரோனா வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நபர்கள் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், ஜூலை 31ஆம் திகதியன்று, நடமாடும் வாக்களிப்பு நிலையமொன்றை நடத்துவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய,

தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கு, தமிழ், முஸ்லிம் மக்களே
## 'வட்டியில் சிக்கினர்'



■ மகேஸ்வரி விஜயனந்தன்

நிவாரண வட்டி வீதத்தின் கீழ் கடன் பெற்றுத் தருவதாக, இணையங்கள் ஊடாக மிகவும் சூட்சுமமான முறையில் பலரும் ஏமாற்றப்பட்டுள்ளனரெனத் தெரிவித்த பிரதி

தொடர்ச்சி P2




## 'அநுர, ஷானியை அழைக்கமாட்டோம்'

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஷானி அபேசேகர, அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக்க பண்டார ஆகியோரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்

தொடர்ச்சி P2

### ரிஷாட்டின் மனு:
## நீதியரசர் விலகினார்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்யும் குழுவிலிருந்து, நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, தனது சுயவிருப்பத்தின் பேரில், நேற்று (27) விலகிக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## '1997, 1917க்கு அழைக்கவும்'

■ மகேஸ்வரி விஜயனந்தன்

போதைப்பொருள் வர்த்தகம், பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் தொடர்பில், இரகசியத் தகவல்களை வழங்குவதற்காக பொலிஸ் தலைமையகம், 1997, 1917 ஆகிய புதிய தொலைபேசி இலக்கங்கள் இரண்டை

தொடர்ச்சி P2












PAGE 1 தொடர்ச்சிகள்

# 5 மணிநேரம் விசாரணை

குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு, நேற்று (27) சென்றிருந்த ரிஷாட் பதியூதீனிடம், சுமார் 5 மணிநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று (27) காலை 10 மணிக்கு வருகைதந்த ரிஷாட் பதியூதீன், மாலை 3 மணியளவில் அங்கிருந்து வெளியேறினார். அவரிடம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலேயே வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

தனது தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் விசாரணைக்கு அழைப்புகள் விடுக்கப்படுகின்றன. தனக்கெதிரான விசாரணைகளை தேர்தல் நிறைவடையும் வரையிலும் இடைநிறுத்துமாறு, தேர்தல் ஆணைக்குழுவிடம், ரிஷாட் பதியூதீன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அது தொடர்பில், பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குத் தேர்தல் ஆணைக்குழு கொண்டுவந்திருந்தது. எனினும், நீதிமன்ற கட்டளையின் பிரகாரம், ரிஷாட்டுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது.

> **பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குத் தேர்தல் ஆணைக்குழு கொண்டுவந்திருந்தது. எனினும், நீதிமன்ற கட்டளையின் பிரகாரம், ரிஷாட்டுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது**

எனினும், ரிஷாட் பதியூதீன் சார்பில், ஜூலை 24ஆம் திகதியன்று கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, தன்னுடைய தரப்பைச் சேர்ந்தவர், இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஆவார். ஆகையால், வாக்குமூலங்களை அளிப்பதற்காக, தேர்தலுக்குப் பின்னர் பிறிதொரு திகதியை வழங்குமாறு கோரிநின்றார்.

இதையடுத்து, விசாரணைகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில், நீதிமன்றம் வழங்கியிருக்கும் கட்டளையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்க, அன்று (ஜூலை 24) கட்டளையை பிறப்பித்திருந்தார்.

அதனடிப்படையிலேயே, நேற்றையதினம் அழைக்கப்பட்டு, அவரிடம் 5 மணிநேரம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

# 'பலத்தைத் தாருங்கள்'

அந்தச் சக்திகளிடமிருந்து, படையினரைப் பாதுகாப்பதற்குத் தங்களுக்குப் பலத்தைத் தருமாறு கோரிநின்றார்.

தொடம்கஸ்லந்த - ரிதிகம, வாராந்த சந்தையில், நேற்று (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு கோரிநின்றார்.

> **கடந்த அரசாங்கத்தின் பலவீனங்களால், பயங்கரவாதம் தலைத்தூக்கியது, உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது, பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் அதிகரித்தன**

அங்கு தொடர்ந்துரைத்த அவர், "யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், படையினருக்கு எதிராக, சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் அழுத்தங்களுக்குக் கடந்த அரசாங்கம் தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லையெனவும் ஆகையால், சர்வதேச சக்திகளின் சூழ்ச்சிகள் வளர்ச்சிக்கண்டுள்ளனவெனவும் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியிலிருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் அழுத்தம் கடுமையாக இருந்ததாகத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவ்வாறான சந்தர்ப்பங்களில், சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்தே, ஐ.தே.க அரசாங்கம், அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கியதெனவும் கூறினார்.

தங்களுயிர்களைத் துச்சமாக நினைத்து, உயிர்த்துறந்து, நாட்டை மீட்டெடுத்தமையால், இந்நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமையொன்று தப்போது ஏற்பட்டுள்ளதாகவும் தாங்கள் முன்வைத்திருந்த ஒவ்வோர் அடிகளும் பல அடிதூரத்துக்குப் பின்னால் வைக்கப்பட்டுள்ளனவெனவும், அவர் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும், போதைப்பொருள் வர்த்தகம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதெனத் தெரிவித்த அவர், "கடந்த அரசாங்கத்தின் பலவீனங்களால், பயங்கரவாதம் தலைதூக்கியது, உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது, பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் அதிகரித்தன. போதைப்பொருள் விற்பனை சடுதியாக அதிகரித்தது" எனவும் கூறினார்.

# 'நடமாடும் வாக்களிப்பு சாத்தியமில்லை'

அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போதைக்கு இல்லையெனவும் கூறினார்.

அந்த வாக்காளர்களுக்காக, தபால்மூல வாக்களிப்பு போன்ற வாக்களிப்பை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது எனத் தெரிவித்த அவர், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில், நேற்று (27) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, மேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, "மக்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்ட பகுதிகளில், நடமாடும் வாக்குச் சாவடிகள் பயன்படுத்துவதற்கு ஆணைக்குழு இன்னும் தீர்மானிக்கவில்லை" என தேர்தல் செயலகப் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள், இன்னும் இரண்டொரு நாள்கள் இடம்பெறுமெனவும் அதன் பின்னரே, நடமாடும் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

"தனிமைப்படுத்தலில் இருக்கும்போது வாக்காளர்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்படும்" எனவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

> **சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்போருக்கு, ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று மாலை 5 மணிமுதல் 5.30 வரையிலும் வாக்களிப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுப்பதற்கான விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவென, ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார் ள்ளார்**

அத்துடன், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்போருக்கு, ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று மாலை 5 மணிமுதல் 5.30 வரையிலும் வாக்களிப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுப்பதற்கான விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவென, ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.



# 'வட்டியில் சிக்கினர்'

பொலிஸ்மா அதிபரும் மக்கள் தொடர்பு, தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அதிகாரியுமான லால் செனவிரத்ன, இந்த மோசடியில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களே அதிகளவில் சிக்கிக்கொண்டுள்ளனர் என்றார்.

பொலிஸ் தலைமையகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், அவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட ஐவர், போலியான ஆவணங்கள், உபகரணங்களுடன் கொழும்பு-5, கிருலப்பனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனரென்றார்.

வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் ஊடாகவே, இவ்வாறான ஏமாற்று வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், சந்தேகநபர்களுடன், இந்த வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக, பயன்படுத்தப்பட்ட வான், மடிகணினிகள் - 11, லெமினெட் இயந்திரங்கள் - 2, வாகன அனுமதிப் பத்திரத்துக்கு முத்திரைக்காகக் பயன்படுத்தப்படும் - 925 அட்டைகள், இறப்பர் முத்திரைகள், போலியான வாகன அனுமதிப் பத்திரங்கள் - 61, சர்வதேச வாகன அனுமதிப்பத்திரங்கள் ஆகியன பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

> **பேஸ்புக் ஊடாக அவற்றைப் பதிவேற்றம் செய்தே, இவ்வாறான மோசடிகளில் மேற்படி நபர்கள் ஈடுபட்டுள்ளனர் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளன**

கொரோனா வைரஸ் காரணமாக, 2.7 சதவீத நிவாரண வட்டி வீதத்தில், கடன் பெற்றுக்கொடுக்கப்படுமென, ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் கடித தலைப்பைப் பயன்படுத்தி, அதற்கான ஆவணங்களைத் தயாரித்து, பேஸ்புக் ஊடாக அவற்றைப் பதிவேற்றம் செய்தே, இவ்வாறான மோசடிகளில் மேற்படி நபர்கள் ஈடுபட்டுள்ளனர் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளதெனத் தெரிவித்த அவர், மேலதிக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றார்.



# நீதியரசர் விலகினார்

உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில், ஏதோவொரு காரணத்தை முன்வைத்து அல்லது வேறேதாவது பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி, போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, தன்னைக் கைதுசெய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எனவே, அதனை தடுத்து, இடைகால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரியே, ரிஷாட் பதியூதீன் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, அக்குழுவிலிருந்து விலகிக்கொண்டமையால், நீதியரசர்கள் அடங்கிய மற்றுமொரு குழாம் முன்னிலையில், அந்த மனுவை, ஓகஸ்ட் 7ஆம் திகதியன்று ஆராய்வதற்கு, உயர்நீதிமன்றம் நேற்று (27) தீர்மானித்தது.

இந்த அடிப்படை உரிமை மனு, எல்.டீ.பீ தெஹிதெனிய, யசந்த கோதாகொட, பிரியந்த ஜயவர்தன ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில், நேற்று (27) அழைக்கப்பட்டது.

இதன்போது, "தனிப்பட்ட காரணங்களுக்காக, இந்த நீதியரசர் குழாமிலிருந்து நான் விலகிக்கொள்கின்றேன்" என திறந்த நீதிமன்றத்துக்கு அறிவித்த நீதியசர் பிரியந்த ஜயவர்தன, பிறிதொரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், அந்த மனுவை ஆராயுமாறும் அறிவித்தார்.

இதையடுத்தே, அந்த மனு மீதான மேலதிக ஆராய்வுக்காக, விசாரணைகள் ஓகஸ்ட் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

# '1997, 1917க்கு அழைக்கவும்'



அறிமுகப்படுத்தியுள்ளதெனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனாரத்ன, இன்றிலிருந்து (28), பொதுமக்கள், இந்தப் புதிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, தகவல்களை வழங்க முடியுமெனவும் கூறினார். பொலிஸ் தலைமையகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், 1997 எனும் இலக்கத்தின் ஊடாக, விஷப் போதைப்பொருள் வர்த்தகம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்படல், பாதாளக்குழுக்களின் செயற்பாடு, பாரிய மோசடி, கப்பம் பெறுதல், மக்களின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துதல் போன்றவை தொடர்பான தகவல்களை வழங்க முடியுமென்றார்.

அதேபோல், 1917 என்ற இலக்கத்தின் ஊடாக, சட்டவிரோத சொத்து சேகரிப்பு, பாதாளக்குழுக்களின் உறுப்பினர்கள், சட்டவிரோத பணம் சேகரிப்பு என்பவை தொடர்பிலும் அறிவிக்க முடியுமெனவும், ஜாலிய கூறினார்.

இந்தத் தகவல்கள் குற்றப்புலனாய்வு விசாரணை திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பிரிவு மூலம் நிர்வகிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

# 'அநுர, ஷானியை அழைக்கமாட்டோம்'

செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்து, விசாரணை நிறைவடையும் வரையிலும் அரசியல் பழி வாங்கல்கள் தொடர்பில் தேடியறிவதற்காக, நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைக்கமாட்டோமென, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது. மூவரினாலும் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட்- மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், நேற்று (27) ஆராயப்பட்டது. அதன்போதே, ஆணைக்குழு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஏ.எச்.எம்.டீ. நவாஸ் (தலைவர்), சோஹித ராஜகருணா ஆகியோர் முன்னிலையில், இந்த மனு, நேற்று ஆராயப்பட்டது.

## நெல் விலை வீழ்ச்சிக்கு
# 'அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயமே காரணம்'

அரிசிக்கான கட்டுப்பாடு விலையை நிர்ணயித்தமையே, நெல் விலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளதென, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் நேற்று (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், "இன்று நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன, அரிசி ஆலை மாஃபியா என, கடந்த காலங்களில் ஒரு குழுவினர் சத்தம் போட்டனர். அவர்கள் யார் என்று நினைவிருக்கிறதா?" எனக் கேள்வி எழுப்பினார்.



இவ்வாறு சத்தம் போட்டதால், அரசாங்கத்தால் அரசிக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க வேண்டியேற்பட்டது. அரசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்ததைத் தொடர்ந்து, நெல்லின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்கு, அரசி ஆலை மாஃபியாக்கள் என சத்தம் போட்டவர்களே பொறுப்புக்கூற வேண்டும்.

அரசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதால், நெல்லின் விலை வீழ்ச்சியடையும் இதுவே உண்மையான நிலை. இப்போது நாடு முழுவதும் அறுவடை நேரம். ஆனால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது" எனவும் தெரிவித்தார்.

## ஐக்கிய தேசிய கட்சிக்கு
# '2023வரை ரணிலே தலைவர்: சூழ்ச்சியில் சிக்கினார் சஜித்'

■ எஸ்.கணேசன்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2023 வரை நீடிப்பார் என்றும் அதற்கு முன்னர் மாற்றம் வேண்டுமெனில், கட்சி சம்மேளனத்தைக்கூட்டி கட்சி யாப்பின் பிரகாரமே மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென, ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமைப்பதவியை ஏற்பதற்கு தயாரென, நவீன் திஸாநாயக்க விடுத்திருந்த அறிவிப்புத் தொடர்பில் வஜீர அபேவர்தன கடும் ஆட்சேபனையை வெளியிட்டிருந்தார். இந்நிலையில், நுவரெலியாவில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, இவ்விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த நவீன் திஸாநாயக்க, "வஜிர அபேவர்தன எனக்கு எதிராகக் கடுமையான முறையில் விமர்சனங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. தனது கருத்தையே அவர் வெளியிட்டிருந்தார். கருத்து வெளியிடும் சுதந்திரம் அனைவருக்கும் இருக்கின்றது என்றார். இதுதான் ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள ஜனநாயகப் பண்பாகும்" என்றார்.



ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமையில்;

# ‘தசாப்த ஆட்சி நடத்துவோம்’

‘நல்லாட்சி அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தங்கள், முன்னுக்குப் பின் முரணானவையெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்ச, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன், ஒரு தசாப்த ஆட்சியை நடத்துவோம்’ என்றார்.



கம்பஹா - பியகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், “நல்லாட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தமானது, ஜனாதிபதிக்கு காட்சட்டை இருக்கும்போது; அதற்குரிய மேலாடையை பிரதமருக்கு வழங்கியது போலாகும் என்றார்.

எனவே, திருத்தம் என்ற பெயரில் அரசமைப்பானது திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், இவ்வாறான நிலைமையை மாற்றியமைத்து, நாட்டைச் சகல துறைகளிலும் வலுவாக்கவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

மக்கள் ஆணையால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படும்போது, மத்திய வங்கியின் நிதிச் சபைக்கான உறுப்பினர்களைக்கூட அவரால் தெரிவுசெய்ய முடியாமல் இருப்பது வேடிக்கையானது. இவ்வாறு, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்துவிட்டு, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்க முயன்றனர் என்றார்.

இதேவேளை, ‘நாட்டில் சமஷ்டி முறை அமல்படுத்தப்பட்டிருந்தால், கொரோனா அச்சுறுத்தல் காலத்தில், நாட்டில் கொரோனா ஒழிப்பு முறைகள் வடக்கு, கிழக்கில் ஒரு முறையிலும் தெற்கில் வேறொரு முறையிலும் முன்னெடுக்கப்பட்டிருக்கும்’ என்றார்.

கொரோனா வைரஸ் காரணமாக, இலங்கையில் உயிழந்தோரின் சதவீதம் குறைவாகவே காணப்படுகிறது. பாலூட்டும் தாய்மார்களின் சதவீதம் அதிகம் என்பதால், பிள்ளைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி வலுவான நிலையில் உள்ளதெனத் தெரிவித்த அவர், வலுவான சமுதாயத்தைக் கொண்ட நாட்டை, வெளிநாட்டு பால்மா வகைகளைக் கொண்டு வலுவிழக்கச் செய்ய முயல்வதாகக் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான முயற்சிகளை முறியடித்து, நாட்டைப் பலப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் பலத்தை வழங்க வேண்டும் என்றார்.

மக்களுக்கு என்னவானாலும் பரவாயில்லை;

# ‘அரசாங்கத்துக்கு தேர்தலே தேவை’

## ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

இஸட். ஷாஜஹான்



‘மீண்டும் கொரோனா வைரஸ் தலைதூக்க ஆரம்பித்துள்ள நிலையில், அரசாங்கம் மூன்று தினங்களுக்கான தேர்தல் பிரசாங்களை நிறுத்தியதை மாத்திரமே செய்ததென, ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சாடினார்.

நீர்கொழும்பு - பெரியமுல்ல, ரஹ்மானாபாத் பிரதேசத்தில், நேற்று முன்தினம் (26) நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், மொட்டுக் கட்சியின் ஆதரவாளர்கள் மாத்திரம் காப்பாற்றப்பட்டால் போதும்; ஏனைய இரண்டு கோடியே 20 இலட்சம் மக்களுக்கு என்னவானாலும் பரவாயில்லை என்றே அரசாங்கம் கருதுகின்றது என்றார். “திருடர்களைப் பிடிப்பதற்காகவே புதிய அரசாங்கத்தை அமைத்தோம். ஆயினும், ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க, அர்ஜுன மஹேந்திரன் உள்ளிட்ட குழுவினர், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டனர். இதன்காரணமாக, தொடர்ச்சியாக நடைபெற்ற எல்லாத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்தது. இதற்கு, ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக் கூறவேண்டும்” என்றார். அத்துடன், நல்லாட்சி அரசாங்கத்தின் போது எமது ஆதரவாளர்களுக்கு நன்மைகள் கிடைக்கவில்லை. 17 இலட்சம் வாக்காளர்களைக்கொண்ட கம்பஹா மாவட்டத்தின் பெறுமதியை, ரணில் அறியவில்லை என்று கூறிய பொன்சேகா, கம்பஹா மாவட்டத்தை வெற்றிகொள்ளாமல், தேர்தலில் தேசிய வெற்றியை அடைய முடியாது என்றார்.

மீண்டும் கொரோனா தலைதூக்க ஆரம்பித்துள்ள நிலையில், படையினர், சுகாதாரத் துறையினர் ஆகியோர், கொரோனாவிலிருந்து மக்களைப் பாதுகாக்கக் கடுமையாக உழைக்கின்றனர். ஆயினும், அரசாங்கத்துக்கு தேர்தலே தேவையாகவுள்ளது என்றும் அவர் கூறினார்.

# ‘கொரோனா இரண்டாவது அலைக்கு சாத்தியமில்லை’



நாட்டில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்படுவதற்கான சாத்தியமில்லை எனத் தெரிவித்த தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய அதிகாரி சுதத் சமரவீர, எனினும், கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுடைய முதலாவது நோயாளி இனங்காணப்பட்டவுடன், அவருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவித்த அவர், அவர்கள் சுய தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவுடன், மீண்டும் அவர்களது வீடுகளில் மேலும் சில தினங்களுக்கு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டவுடன், தொற்றாளர்களை வைத்தியசாலையில் அனுமதித்து அவர்கள் முழுமையாகக் குணமடையும் வரை சிகிச்சையளித்து வருவதாகத் தெரிவித்த அவர், தொற்றாளர்களிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாடுகளில் இவ்வாறான முறை பின்பற்றப்படுவதில்லை எனத் தெரிவித்த அவர், நூற்றுக்கு நூறு சதவீதம் கொரோனா பரவல் முடிவுக்குக் கொண்டுவரப்படாமல், வெளிநாடுகளில் மக்கள் நடமாடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதனாலேயே, கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பதாகவும் கூறினார்.

இராஜசபை மண்டபம் இடிப்பு;

# பொலிஸ் மா அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு



குருநாகலில் அமைந்துள்ள புவனேகபாஹு மன்னன் காலத்துக்குரிய இராஜசபை மண்டபம் இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில், வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கை, பதில் பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில், இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் பற்றிய விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், அந்த விவகாரம் தொடர்பான விசாரணைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கட்டடம் தகர்க்கப்பட்டமை தொடர்பில், குருநாகல் நகரசபைத் தவிசாளர் உள்ளிட்ட சுமார் 20 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன், மேலும் சிலரிடம் வாக்குமூலம் பெறுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து, எதிர்வரும் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதுடன், நீதிமன்ற உத்தரவு காரணமாக, மேற்படி கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் தாமதமாகியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

# அராலி பிரச்சினைக்கு பிரதமரால் தீர்வு

யாழ்ப்பாணம்- அராலி, ஒடைக்கரைக்குளம் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நிதியை விடுவிக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். - வட்டுக்கோட்டை கமக்காரர் அமைப்பினர், பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே, அவரால் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஒடைக்கரைக்குளம் தடுப்புச் சுவர் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்குமாறு கோரி, பிரதமருக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. இதனைப் பரிசீலனை செய்த பிரதமர், மேற்படி பணிக்கான நிதியை விடுவிக்குமாறு, சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் கோரிக்கைக்கு அமைய, அராலி ஒடைக்கரை குளத்துக்குத் தடுப்புச் சுவர் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 6.705 மில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

தடுப்புச் சுவர் நிர்மாணப் பணிகளை, ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

‘நாடாளுமன்ற வித்தி’

# செய்திமடல் வெளியீடு



நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள், நடைமுறைகள், சம்பிரதாயங்கள் பற்றிய செய்திமடல் ஒன்று, நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று (27) வெளியிடப்பட்டது.

மேற்படி செய்தி மடலை, டிஜிட்டல் முறையில் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தலைமையில் நடைபெற்றதுடன், ‘நாடாளுமன்ற வித்தி’ என்ற பெயரில் இந்தச் செய்தி மடல் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாள் தொகுதியின் பிரதானியுமான நீல் இத்தவல கலந்துகொண்டார். நாடாளுமன்ற நூலகத்திலுள்ள 10 இலட்சத்து மூன்று ஆவணங்கள், டிஜிட்டல் முறையில் வடிவமைக்கப்பட்டு, மேற்படி மடலில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், நாடாளுமன்றக் குழுக்களின் கூட்டங்களை டிஜிட்டல் தொழில்நுட்பம் வாயிலாக நடத்துவதும் 8ஆவது நாடாளுமன்றத்தின் விசேட அமர்வுகள் பற்றிய குறிப்புகளும், இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், செங்கோலின் சிறப்புத்தன்மை, நாடாளுமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றும் முறைமை, ஹன்சாட் குறிப்புகள் பற்றிய தெரிவுகள் என்பனவும், மேற்படி செய்தி மடலில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஐ.தே.கவில் இணைவதற்கு எதிர்பார்க்க வேண்டாம்’



‘நாட்டில் இரண்டு ஐக்கிய தேசிய கட்சிகள் இல்லை என்று தெரிவித்துள்ள அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவுக்கு எதிராக வாக்களித்துவிட்டு, மீண்டும் ஐ.தே.கவில் இணைவதற்கு எதிர்பார்க்க வேண்டாமெனவும் தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில, நேற்று முன்தினம் (26) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், நாட்டில் ஒரேயொரு ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே இருப்பதாக, நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. ஐ.தே.கவுக்கு வாக்களிப்பதென்றால், எமக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் என்றார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரானவர்களே, எமக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க அல்லாத ஏனைய அரசியல் அணிகள் அனைத்தும், ஐ.தே.கவுக்கு எதிரானவை. எனவே, ஐ.தே.கவுக்கு எதிராக வாக்களித்துவிட்டு, மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் தெரிவித்தார்.



## அமீர் அலியுடன் இணைவு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.பதுர்தீன், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலியுடன் இணைந்துகொண்டார்.

வாழைச்சேனை - செம்மண்ணோடை பகுதியில், நேற்று முன்தினம் (26) இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்தே, பிரதேச சபை உறுப்பினர் அமீர் அலிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்துகொண்டார்.

இவர், கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக, சுயேச்சைக் குழுவில் மீராவோடை மேற்கு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பிள்ளையானின் விளக்கமறியல் ஒக்டோபர் 19 வரை நீடிப்பு

■ வா.கிருஸ்ணா, ரீ.எல்.ஜவ்பர்கான்

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) விளக்கமறியல், தொடர்ந்தும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில், பிள்ளையான் உள்ளிட்ட சந்தேகநபர்கள், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று (27) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி வரையில் இவ்வழக்கை ஒத்திவைப்பதாக, நீதிபதி அறிவித்தார்.

2005.12.25 திகதியன்று, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக, பிள்ளையான் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிவநேசதுரை சந்திரகாந்தன், ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் படகுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் வேட்பாளரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இணையத்தில் பண மோசடி; ஐவர் கைது

இணையத்தின் ஊடாக, வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்களுக்குச் சலுகை வட்டி வீதத்தின் ஊடாகக் கடன் வழங்குவதாகக் கூறிப் பண மோசடியில் ஈடுபட்ட 5 பேர், கிருலப்பனை பொலிஸாரால், நேற்று (27) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிட்டபத்தர, நாரஹேன்பிட்டி, வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30, 39, 38, 46 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடன் வழங்குவது தொடர்பில், வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு தொலைபேசியூடாக அறிவித்து, அவர்களுடைய வங்கி விவரங்களைப் பெற்று, அதனூடாக ஒருவரின் கணக்கில் இருந்து 5 இலட்சம் ரூபாய் வீதம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய வங்கிக் கணக்கில் இருந்து பணம் மோசடி செய்யப்பட்டதாக, பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே, குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**“ சந்தேகநபர்களிடம் இருந்து மடிகணினி, வங்கி அட்டைகள், லெமினேட் இயந்திரம், போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 61, சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 5 என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன**

இதன்போது, சந்தேகநபர்களிடம் இருந்து மடிகணினி, வங்கி அட்டைகள், லெமினேட் இயந்திரம், போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 61, சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 5 என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், சந்தேகநபர்கள் பயன்படுத்திய கார், வேனும், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கிருலப்பனை பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

## நாட்டின் சில பகுதிகளில் இன்று முதல் மழை?

நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில், இன்று (28) மாலையிலிருந்து அடுத்த சில நாள்களுக்கு, மழையுடனான வானிலை சற்று அதிகரிக்குமென, வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று (27) எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், மத்திய மாகாணங்களில், பல தடவைகள் மழை பெய்யும் எனவும் வடமேல் மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யுமெனவும், திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஊவா மாகாணத்திலும் திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும், சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனவும், வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

**“ கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள், இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்**

இதேவேளை, இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள், இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நடத்தவிருந்த போராட்டம் தடுத்து நிறுத்தம்

■ பேரின்பராஜா சபேஷ்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பினர், மட்டக்களப்பு - செங்கலடியில் நேற்று (27) காலை நடத்தவிருந்த போராட்டம், நீதிமன்றத் தடையுத்தரவால், பொலிஸார் தடுத்து நிறுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பினர் இணைந்து, செங்கலடியில் நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

யாழப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவிருந்தன.

தற்போது தேர்தலுக்கான களநிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், தமிழ்த் தேசியத்துக்கும் தமிழர்களின் பிரச்சினைக்கு ஆதரவாகவும் செயற்படுவோரைத் தெரிவுசெய்யவும், காணாமல்ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை சர்வதேசச் சமூகத்தின் கவனத்துக்குத் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லும் வகையிலும், இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவிருந்தன.

இதற்காக, வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களில் இருந்து வருகைதந்த காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஒன்றுகூடிய நிலையில், அங்குவந்த பொலிஸார், குறித்த போராட்டத்தை நடத்தமுடியாது எனத் தெரிவித்தனர். அத்துடன், ஏறாவூர் நீதவான் நீதிமன்றம் ஊடாகப் பெறப்பட்ட தடையுத்தரவைக் காட்டிய ஏறாவூர் பொலிஸார், போராட்டத்தை நடத்த முடியாதென்றனர்.

இருப்பினும், போராட்டம் நடத்துவது தொடரில், சில தினங்களுக்கு முன்பாகவே சுகாதாரப் பிரிவினருக்கும் பொலிஸாருக்கும் தாம், இது தொடர்பில் அறிவித்திருந்ததாகவும் ஆனால், பொலிஸார் திட்டமிட்டுத் தமது போராட்டத்தை முடக்கியுள்ளதாகவும், காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

### என் மீதான விசாரணைகள்

# ‘அப்பட்டமான அரசியல் பழிவாங்கல்கள்’



உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் தன்னைச் சம்பந்தப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் அனைத்தும், அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் என்று, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களக் கிளையில், நேற்று (27) நடைபெற்ற விசாரணையின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “விமல் வீரவன்ச போன்ற இனவாதிகளும் மதவாதிகளும், சஹ்ரானின் தாக்குதலுடன் என்னைத் தொடர்புபடுத்தி, எப்படியாவது கூண்டிலடைக்க வேண்டுமெனச் சதி செய்து வருகின்றனர்” என்றார்.

“கடந்த அரசாங்கத்தின் போதா இந்தத் தாக்குதலுடன் என்னைச் சம்பந்தப்படுத்திக் குற்றச்சாட்டுகள் எழுந்தபோது, தற்போதிருக்கும் பொலிஸ் மா அதிபரே, பொலிஸ் விசேட குழுவொன்றை நியமித்து, இது தொடர்பில் விசாரிக்குமாறு தனது அதிகாரிகளைப் பணித்திருந்தார். இது தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கும் அவகாசம் வழங்கி, பகிரங்க அழைப்பொன்றையும் விடுத்தார்.

“ரிஷாட் பதியுதீன் தொடர்பில் ஏதாவது குற்றச்சாட்டுகள் இருந்தால், பொலிஸில் முறையிடுங்கள் என்று, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஊடாக, 07 நாள்கள் வரையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

“அதன் பிறகு, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, அதுரலியே ரத்தன தேரர், எஸ்.பீ.திஸாநாயக்க உட்பட பலர், என் மீதான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அனைத்துக் குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்பட்டன. பின்னர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும், இப்போதிருக்கும் அதே பொலிஸ் மா அதிபரே, எழுத்துமூல விசாரணை அறிக்கையை அனுப்பி வைத்தார். ரிஷாட்டுக்கு, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடனோ வேறு எந்தப் பயங்கரவாதச் சம்பவத்துடனோ, எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என அதில் அறிவித்திருந்தார். அது நாடாளுமன்றத்தில் அறிக்கையாகவும் வெளிவந்தது.

“அவ்வாறிருந்தும், 15 மாதங்களின் பின்னர், தேர்தல் நெருங்குகின்றவேளை, என்னை இலக்கு வைத்து விசாரணைக்கு அழைத்தனர். எனக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இல்லையென, அனைவருக்கும் நன்கு தெரியும்” என்றார்.

## ‘எம்சிசி ஒப்பந்தம் கைசாத்திடப்படாது’



எம்சிசி ஒப்பந்தம் தொடர்பான கருத்தாடல்களை, நாட்டிலிருந்து முழுமையாக நீக்கிவிட நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரன, அந்த ஒப்பதந்தத்தில் அரசாங்கம் ஒருபோதும் கைசாத்திடப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அம்பலாங்கொடை ஹேமாலி ஹோட்டலில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், எம்சிசி ஒப்பந்தம் தொடர்பாக ஆராய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட நிபுணர் குழுவொன்று நிறுவப்பட்டிருந்தெனவும் அந்தக் குழுவால், மேற்படி ஒப்பந்தம் நாட்டுக்குப் பாதகமானதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அந்த ஒப்பதந்தத்தில் அரசாங்கம் ஒருபோதும் கைசாத்திடாதெனவும் தெரிவித்தார்.

அதன்படி, விரைவில் அது தொடர்பான யோசனையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அந்தப் பேச்சுக்களை நாட்டிலிருந்து முழுமையாக இல்லாது செய்வதாகவும் எதிர்க்கட்சிகளும் ஜே.வி.பியினரும், தங்களுக்கு வேறு காரணங்கள் இல்லாததாலேயே எம்சிசி ஒப்பந்தத்தை முதன்மைப்படுத்தி பேசுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

காலியில் 9 தேர்தல் தொகுதிகளில், 7 தொகுதிகளை பொதுஜன பெரமுனவே வெற்றிகொள்ளுமெனத் தெரிவித்த அவர், காலியிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள், மொட்டுக்கு வாக்களிக்கத் தீர்மானித்து உள்ளதால், ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்டதை விட அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்வோம் என்றும் தெரிவித்தார்.

### நட்டஈடு கோரி

# சுமந்திரனுக்கு எதிராக வழக்குத் தொடுக்க ஆயத்தம்

■ என்.ராஜ்

சைவ சமயத்தவர்கள் யாரும், சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாமெனத் தெரிவித்த மறவன்புலவு சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தன், 1,000 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி, சுமந்திரனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறினார்.

மறவன்புலவு பகுதியில், சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்ததினால் அமைக்கப்பட்டுவரும் புதிய கோவிலின் கருவறைக்குள், சுமந்திரனின் சுவரொட்டிகள் நேற்று முன்தினம் இரவு ஒட்டப்பட்டிருந்தன.

தேர்தல் விதிமுறைகளை மீறி, கோவிலின் கருவறைக்குள் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை தொடர்பில், மறவன்புலவு சச்சிதானந்ததால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.



இதன் அடிப்படையில், சாவகச்சேரி பொலிஸாரால், சுவரொட்டிகள் அகற்றப்பட்டன.

இந்நிலையில், இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சைவசமயத்தை இழிவுபடுத்தும் செயற்பாட்டில் சுமந்திரன் ஈடுபடுகின்றாரெனவும் சைவக் கோவில்களுக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் முகமாக, அவருடைய தேர்தல் சுவரொட்டிகளைச் சைவக் கோவில்களின் கருவறைக்குள் ஒட்டியிருக்கின்றாரெனவும், கருவறை என்பது, சைவர்களுடைய நம்பிக்கைக்குரிய இடமெனவும் கூறினார்.

“தேர்தல் விதிமுறைகளையும் மீறி, மக்களுடைய நம்பிக்கையையும் உடைத்து, மேலாதிக்கத்தை உயர்த்தும் முகமாகவே கோவில் கருவறையிலேயே தேர்தல் சுவரொட்டிகளை 26ஆம் திகதி இரவு ஒட்டியிருக்கிறார். இதை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவரிடம் 1,000 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன்” எனவும், அவர் கூறினார். அத்துடன், இந்த வீட்டுக்குப் பொறுப்பான கட்சித் தலைவருக்கு எதிராகவும் சாவகச்சேரி தொகுதி வீட்டுக்குப் பொறுப்பானவருக்கு எதிராகவும் வழக்கு பதிவு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் இரு பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன், கே.எல்.ரீ.யுதாஜித்

மட்டக்களப்பில், இம்முறை பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன என்று, மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலாளருமான கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இதற்கமைவாக, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியன, பிரதான வாக்கெண்ணும் நிலையங்களாக அமையப்பெறவுள்ளன.

## பணம், கஞ்சாவுடன் இருவர் கைது

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி - செல்வாநகர் பகுதியில், மூன்று இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் ஒரு கிலோகிராம் கேரள கஞ்சாவுடன், நேற்று (27) முற்பகல் 11 மணியளவில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையச் செயற்பட்ட பொலிஸார், செல்வாநகரை சேர்ந்த ஒருவர் உட்பட இருவரைக் கைது செய்துள்ளனர்.



# ‘வேலை வழங்குவதாக தவறான பரப்புரைகள்’

■ எம்.றொசாந்த்



“வடக்கு, கிழக்கில் வேலைவாய்ப்பு வழங்குவதாக, தவறான தகவல்களை வழங்கும் அரசாங்கத்தின் ஆதரவுக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடும் வேட்பாளர்களில் சிலரும் இளையோரிடம் விண்ணப்பப்படிவங்களை வழங்கி, விவரங்களைச் சேகரிக்கின்றனர்” என, தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழில் நேற்று முன்தினம் (26) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தவறான தகவல்களை வழங்கி, இளையோரின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முயல்கிறார்கள். அது தொடர்பில் எமது வேட்பாளர்கள் தெளிவூட்டல்களை வழங்கி வருகின்றனர்.

“வடக்கு, கிழக்கில் அரசாங்கச் சார்புக் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடுவோர், தமிழ் இளையோர்களைத் தமது பக்கம் ஈர்ப்பதற்காக, உங்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று தவறான தகவல்களை வழங்குகின்றனர். அத்தோடு, சிலர் விண்ணப்பப் படிவங்களை வழங்கி, தேசிய அடையாள அட்டை உள்ளிட்டவற்றின் விவரங்களைப் பெற்று வருகின்றனர்.

“அது அப்படி நடக்க முடியாது. திடீரென்று ஒரு வேலைவாய்ப்பை வழங்க முடியாது. நாடாளுமன்றம் உருவாகியதன் பின்னர், அது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவித்ததன் பின்னரே வேலைவாய்ப்புகளைப் பெற முடியும்.

“தேர்தல் காலத்தையொட்டியோ, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காகவோ வேலைவாய்ப்புகளை வழங்க முடியாது. இது தொடர்பில், எமது வேட்பாளர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் தமிழ் இளையோர்களிடம் எடுத்துரைத்து வருகின்றார்கள்” என்றார்.

### அந்தஸ்தை இழந்தமையால்தான்

# ‘நாம் மாற்று அணி ஆகியுள்ளோம்’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



“கூட்டமைப்பினர், கொள்கை வழியில் பயணிக்காது, சுயநல வழியைப் பின்பற்றப்போய், தமிழ் மக்களின் முதல் அணி என்கின்ற அந்தஸ்தை இழந்தமையால்தான் நாம் மாற்று அணி ஆகியுள்ளோம்” என, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசார கூட்டம், மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில், மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர். குமரேஸ் தலைமையில் நேற்று முன்தினம் (26) மாலை நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே, அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “முதலமைச்சராகப் பதவி ஏற்று, பொதுமக்களைச் சந்தித்து, எமது மக்களுக்கு எதிராக நடைபெற்றது இனப்படுகொலை தான் என்று அதனை பகுத்து அறிந்துகொண்டபோது, எத்தகைய ஒரு பெரும் பொறுப்பு என் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என்பதை, அப்போது உணர்ந்து கொண்டேன்.

“அந்தக் கடப்பாட்டை உணர்ந்து, கூட்டமைப்பு நடக்க முற்படவில்லை என்பது, எனக்கு மன வருத்தத்தைத் தந்தது.

“எத்தனை இடர் வந்தாலும், எமது உரிமைகள் விடயத்தில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புகளையோ,காட்டிக்கொடுப்புகளையோ நாம் செய்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம்.

“அதனால் தான் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போது, இனப்படுகொலைத் தீர்மானத்தைக் கைவிடவோ, பொறுப்புக்கூறல் விடயத்தில் விட்டுக் கொடுப்புகளைச் செய்யவோ நான் தயாராக இருக்கவில்லை.

“தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், பிரச்சினைகளை அப்படியே விட்டு விட்டு, தமது சுய இலாப சிந்தனைகளில் இருந்தார். இப்பொழுதும் அப்படித்தான் இருக்கின்றார்கள்.

“கொள்கைகள் என்பது வெறும் வாய்ப்பேசு பொருளாக மாறி இருந்தன. நானும் சந்தர்ப்பவாதியாக மாறி, அரசாங்கத்துடன் இணைந்து அவர்களுக்கு ஏற்ப தாளம் போட்டிருந்தால் எமது மாகாண சபைக்கு, பல மடங்கு நிதியை ஒதுக்கி இருப்பார்கள்.

“பல செயற்றிட்டங்களை வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க அனுமதி வழங்கி இருப்பார்கள். ஆனால், அவ்வாறு செய்திருந்தால், தமிழ் மக்களின் பல தசாப்த கால உரிமைப் போராட்டங்களுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பேன். பெரும் துரோகத்தை இழைத்திருப்பேன். எனவே, அத்தகைய தவறை நான் செய்யவில்லை” என்றார்.

# ‘உரிமையை வென்றெடுப்போம்’

■ எம்.எம்.அஹமட் அனாம்



“மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தியையும் கல்வியையும் எமது உரிமையையும் வென்றெடுப்போம் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, தன்னோடு சேர்ந்து வேலை செய்யுங்கள் என்றும் அழைப்பு விடுத்தார்.

அத்தோடு, பிறரின் கதைகளைக் கேட்டு அரசியல் செய்யும் நோக்கம் தனக்குக் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

வாழைச்சேனையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், “அமீர் அலி, ஆள்களின் கதை கேட்கிறார் என்று தேர்தல்கள் வரும்போது ஒரு கதை வலம் வருவது வழமை. ஆனால், அது தவறானதாகும். நான் அரசியல்வாதி என்றவகையில் என்னிடம் படித்தவர், பாமரர், பணக்காரன் என்று அனைவரும் வருவார்கள். அதில் சிலர் அவர்களுக்குப் பிடிக்காதவர்களைப்பற்றி பல குற்றச்சாட்டுகளை முன்வைப்பார்கள்; அது வழமை. அவ்வாறான குற்றச்சாட்டுகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை.

“என்னைப்பற்றி விமர்சனம் செய்பவர்கள் இரண்டு வகைப்படுவர். ஒன்று என்னிடம் அதிகமான உதவிகளைப் பெற்றுக் கொண்டு, எதிர்க்கட்சிகளிடம் அனுபவிப்பதற்காகச் சென்றவர்கள். இரண்டாவது சாரார், நான் அரசியலுக்கு வந்ததில் இருந்து, எனக்கு ஒரு தரமேனும் வாக்களிக்காதவர்களாக இருப்பார்கள்.

“என்னைச் சந்திப்பதற்கு யாரும் முகவர்களை நாடி வரவேண்டிய தேவையில்லை. நான் ஊரில் நிற்கும் நாள்களில், நேரில் வந்து சந்திக்கலாம். அவசரத் தேவையென்றால் அலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டு கதைக்கலாம்.

“எனவே, என்னிடம் வராமல், என்னைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல், எங்கோ அமீர் அலி அப்படிப் பேசினார் என்று கதைத்துக் கொண்டு இருக்காமல், என்னோடு சேர்ந்து வேலை செய்யுங்கள்” என்றார்.

# ‘தமிழ் மக்களுக்கு சம உரிமை வேண்டும்’

### த.தே.கூ மாத்திரமே குரலெழுப்புகிறது

■ பேரின்பராஜா சபேஷ்



நாட்டிலே, தமிழ் மக்களுக்கு சம உரிமை வேண்டுமெனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாத்திரமே நாடாளுமன்றத்தில் குரலெழுப்பி வருகிறது எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் இராசமாணிக்கம் சாணக்கியன், “இந்த நாடு, தமிழனுக்குச் சொந்தமானது என்பதை வேறுஎவருமே வலியுறுத்தவில்லை” என்றார்.

செங்கலடி பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், “மட்டக்களப்பு மாவட்டத்திலும் பெரும்பான்மை இனத்தவர்களின் பரம்பலை அதிகரித்து, தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கான முயற்சியின் முதற்படியாகவே 55 இடங்கள், தொல்பொருள் ஆய்வு எனக் கூறுகின்றனர்.

“கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைத் தவிர, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் நாடாளுமன்றத்திலும் மாகாண சபையிலும் பெரும்பான்மை பிரதிநிதித்துவம் காணப்படுகிறது.

“கிழக்கில் 1881ஆம் ஆண்டு, ஒரு சதவீதமான சிங்களவர்களே வாழ்ந்தார்கள். நாடு சுதந்திரமடைந்தபோது அவர்களது மக்கள் தொகை 9 சதவீதமாகக் காணப்பட்டது. 2020ஆம் ஆண்டு, கிழக்கு மண்ணில் பெரும்பான்மை இனத்தவர்களின் சனத்தொகை 20 சதவீதத்தைத் தாண்டியுள்ளது.

“இந்தப் தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பௌத்த மதகுருவொருவரும் போட்டியிடுகிறார். இது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.

“வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்பது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாறிமாறி வரும் அரசாங்கங்களுடன் இணைந்து, இஸ்லாமியர்கள் கடந்த அசாதாரண சூழ்நிலையின் போது, மிகவும் பலம்வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

“கிழக்கு மாகாணத்தில், இஸ்லாமியர்களின் கை ஓங்கிக்கொண்டிருக்கிறது என, 2019 ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னர் அரசாங்கம் உணர்ந்துள்ளது. இஸ்லாமியர்களின் பலத்தைக் குறைப்பதற்கு என்ன வழி உள்ளது எனப் பெரும்பான்மை இனத்தவர்கள் சிந்தித்து எடுத்த ஒரே வழி, தொல்பொருள் ஆய்வுக்கான செயலணி.

“தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களின் தமிழ் பெயர்கள் மாற்றப்பட்டு, புதிய சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

“இது தொடர்பாக, பெரும்பான்மையினக் கட்சிகளில் போட்டியிடுபவர்களோ, அரசாங்கக் கட்சிகளின் முகவர்களாகச் செயற்படுபவர்களோ தட்டிக்கேட்க மாட்டார்கள். வெல்லாவெளி - வெத்துச்சேனை மக்களுக்காகக் குரல் கொடுத்த காரணத்தால் அந்தப் பிரதேசத்துக்குச் செல்ல எனக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

“அடுத்த 10 ஆண்டுகளில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையின பிரதிநிதித்துவத்தை எவ்வாறு உருவாக்கலாம் என அரசாங்கம் சிந்தித்து, திட்டங்களை வகுத்து வருகிறது. இன்று தொல்பொருள் ஆய்வு செய்யப்படும் இடங்களில் வருங்காலங்களில் விகாரைகள் அமைக்கப்பட்டு, பெரும்பான்மையின குடியேற்றங்கள் நடைபெறலாம்.

“இது சிங்களவருக்கான நாடு, தமிழர்கள் வந்தேறு குடிகள் எனக் கைகளை உயர்த்திக் கூறுங்கள்; வீதிகளைக் கட்டடங்களைத் தருகிறோம் எனக் கூறும் நிலையை மொட்டுக் கட்சியில் போட்டியிடுபவர்களும் அவர்களின் முகவர்களான படகு கட்சியும் உருவாக்கப் போகிறார்கள்.

“இந்நாட்டில் இறுதித் தமிழன் வாழும் வரை இந்த நாடு தமிழ் மக்களுக்குச் சொந்தமானது என்பதை தமிழ்த் தேசிய கூட்டமை ப்பு எப்போதும் வலியுறுத்தும்” என்றார்.



# போராட்ட வீரர்களைத் தூற்றும் 'சிவி' கூட்டணி...

தமிழ் மக்களின் அரசியலில் தமிழீழ விடுதலைப் போராட்டமும், அப்போராட்டத்துக்காய்க் களமாடிய வீரர்களின் தியாகமும் இரண்டறக் கலந்திருப்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் வாக்குக் கேட்டுப்போகும் அரசியல்வாதிகளுக்கும் இது தெரியும். அதனால்தான், தமிழீழப் போராட்டத்தை எப்படியாவது தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்கிக்கொள்கின்றனர். நிலைமை இப்படியிருக்கையில், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், முன்னாள் போராளிகள் கட்சியைக் கடுமையாக விமர்சித்திருப்பது கண்டிக்கத்தக்கது. "கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வெற்றிபெற வைப்பதற்காக ஆட்சியாளர்களால் எந்தவித நிபந்தனைகளும் இன்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் தயவில் வெளிப்படையாகவே இயங்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியானது, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் வெளிப்படையாகக் கைகோர்த்திருப்பதென்பது, தேர்தல் முடிவடைந்த பின்னர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது மஹிந்த - கோட்டா அரசில் இணைவதற்காக, முன்கூட்டியே உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டிருப்பதையே கட்டியம் கூறி நிற்கிறது" என, சி.வி. விக்னேஸ்வரன் சாடியிருக்கிறார். தமிழீழப் போராட்டத்தையும் அவ்வமைப்பின் வீரர்களையும் வைத்து வாக்குப் பிச்சைகேட்டுக் கொண்டிருக்கும் சிவாஜிலிங்கமும் அனந்தியும் இருந்த மேடையில், அதே போராட்ட வீரர்களைக் கொச்சைப்படுத்திப் பேசும்போது, சிரித்துக்கொண்டு அவர்கள் இருந்தமையை எவ்வாறு நியாயப்படுத்த முடியும். தங்களுடன் இருந்தால் அவர்கள் போராளிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இருந்தால் அவர்கள் துரோகிகள். இதுதான் விக்னேஸ்வரன் கூட்டணியின் கையாலாகாத்தனம்.

இதே ஜனநாயகப் போராளிகள் கட்சி, வன்னியில் இயங்கிக்கொண்டிருக்கையில் ஏறெடுத்தும் பார்க்காத விக்னேஸ்வரன் கூட்டணி உறுப்பினர்கள், இப்போது அப்போராளிகள் பற்றிப் பேசுவதற்கு எதுவித அருகதையுமற்றவர்கள். போராட்டத்தையும் போராட்ட வீரர்களையும் தம் வாக்கு வேட்டைக்காக மாத்திரம் பயன்படுத்துவதில் காட்டும் அக்கறையை, அப்போராளிகளின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிச் சிந்திப்பதிலும் காட்ட வேண்டும். அதைவிடுத்து, அப்போராளிகளைத் 'துரோகி' முத்திரை குத்துவது மிகக் கேவலமானது. இத்தகைய கேவலங்கெட்டதனத்துக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர். இத்தகைய இழிசெயலுக்கு ஒத்தூதுபவர்களையும் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். இனிமேலாவது, போராளிகளின் தியாகங்களைக் கொச்சைப்படுத்தாமல், தம் அரசியலைச் செய்வதை ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பூக்கள் தோறும் துடிப்புடன் பறந்து, தேன் எனும் மதுவைத் தேடும் தேனீக்கள் மூலம் பல்லாயிரம் விருட்சங்கள் பரவிவளர்கின்றன. மகரந்தச் சேர்க்கையால் பூக்களூடாக மரங்கள் பரந்து நிற்கின்றன.

மனிதா! நீவிர் எத்தனை மரங்களை நாட்டினீர்? அவைகள் உருவாக, உங்கள் பங்கு என்ன? அவைகளை அழித்து, காசுசேர்க்கச் சட்டவிரோதமாகச் செயற்படும் கும்பல்கள் பல இருக்கின்றன.

காடுகளில் தீ பரவுவதற்குப் பல காரணங்கள் இருப்பினும் சிகரெட்டைப் பற்றிவிட்டு, வீசும் அடிக்கட்டைகூட, தீ பரவலுக்குக் காரணமாகி விடுகின்றது. அதுமட்டுமல்ல, காடுகளின் அருகில் வாழும் மனிதர்கள், வழிப்போக்கர்களால் எரிக்கப்படும் குப்பைகள், காய்ந்த வயலில் தீ மூட்டப்படுவதால் விபரீதமாகி விடுகின்றன. பகுத்தறிவை மறைக்கும் அடாவடித்தனங்களால் உலகம் உருகிக்கொண்டிருக்கிறது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அறிந்தவன், தெரிந்தவன், ஊரவன் பார்ப்பது அறிவீனம்

**காரை துர்க்கா**

பொதுவாக ஒரு தொழிலை, ஒருவர் மேற்கொள்வதாயின் அது தொடர்பிலான கல்வி அறிவு, ஆளுமை போன்றவை முதன்மையானவை. உதாரணமாக, மருத்துவராகப் பணியாற்றுவதாயின் அது தொடர்பிலான மருத்துவக் கற்கை நெறியைப் பயின்று பூர்த்தி செய்திருப்பதுடன் நோயாளிகள், தாதியருடன் நீடித்த சமூக உறவைப் பேணும் வகையிலான ஆளுமையைக் கொண்டிருக்க வேண்டும்.

அண்ணளவாக 40 ஆண்டுகளுக்கு முன்பு, சட்டவல்லுநர்களே நமதுநாட்டில் அரசியல் செய்தார்கள். ஆனால் இன்று, கல்வித் துறை சார்ந்த புலமை இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, எல்லோரும் செய்யக் கூடிய தொழிலாக அரசியல் மாறி விட்டது.

இலங்கை நாடாளுமன்றில் உள்ள மொத்த ஆசனங்களில் 196 ஆசனங்களே, மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்காக உள்ளன. மிகுதியாக உள்ள 29 ஆசனங்கள், துறை சார்ந்த வல்லுநர்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டவை. ஆனால் இன்று, இந்த 29 ஆசனங்களில் கணிசமானவை கூட, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பங்கீடு செய்யப்படுகின்ற நிலைவரங்கள் உள்ளன.

இந்நிலையில், வழமைக்கு மாறாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிக கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியில் உள்ளன. இந்த நாடாளுமன்றப் பதவிகளால், நாடு ஆள முடியாது என்றே, 80களில் தமிழினம் ஆயுதம் ஏந்தியது; அல்லது, ஆயுதம் ஏந்துவதற்கு உந்தப்பட்டது.

ஆனால், ஆயுத பலம் மௌனிக்கப்பட்டு விட்ட இன்றைய சூழலில், தெற்கில் எந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும், இனப்பிணக்குத் தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கட்டாயம் தேவைப்படுகின்றது. ஆனாலும், அந்தப் பதவி, தமிழ் மக்களுக்கு கூட்டாகத் தேவையே தவிர, தனியன்களாக அல்ல என்பதைத் தமிழ்க் கட்சிகள் உணராமையே, தமிழ் மக்களது ஆதங்கம் ஆகும்.

கொடும் போர், தமிழ் மக்களது பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் குடும்பங்களையும் மனங்களையும் சீரழித்து விட்டது. இவ்வாறாகத் தமிழ்க் கட்சிகளிடையே பொதுநோக்கம் கருதிய ஒற்றுமை, சீரழிந்தும் சிதைந்தும் போக, சிங்களப் பெருந்தேசியக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் தேர்தல் கடை விரித்துள்ளன.

1948ஆம் ஆண்டு தொடக்கம், ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் மாறிமாறி, தமிழ் மக்களுக்கு நெருக்கடி கொடுத்து வந்திருந்தன. தமிழ் மக்களுக்குக் கூடுதல் நெருக்கடி யார் கொடுக்கின்றார்களோ, அவர்களைச் சிங்கள மக்கள் தெரிவு செய்து, ஆட்சி பீடத்துக்கு அனுப்பி அழகு பார்த்தார்கள்.

அதனது தொடர்ச்சியாக, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சியினதும் ராஜபக்ஷக்கள் தலைமையிலான பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினதும் நிழல்கட்சிகளே ஆகும்.

எவர் எதைச் சொன்னாலும், தமிழ் மக்கள் இன்று அனுபவித்து வருகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும், இன்றுவரை ஆட்சியில் இருந்த பேரினவாதக் கட்சிகளே காரணம் ஆகும். அவர்கள், ஒற்றையாட்சியும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையும் என்ற மேலாண்மையிலிருந்து ஒருபோதும் படி இறங்கி வரப்போவதில்லை.

இதற்கிடையே, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கடந்த வாரம் வெளியிட்டது. அதில் கூட, பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு உள்ளது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பது, ஏனைய மதங்களுக்கு இரண்டாம் நிலை என்பதையே சுட்டி நிற்கின்றது.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியோ, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியோ, ராஜபக்ஷக்கள் தலைமையிலான பொதுஜன பெரமுனவோ, சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோ, ஒற்றை ஆட்சியையும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்ற நிலையிலிருந்து, அவர்களாக விரும்பினாலும் விலக முடியாத நிலைவரமே ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

பேரினவாதக் கட்சிகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அபிவிருத்தியையே பேசுபொருளாகப் பேசுகின்றனர். ஏனெனில், அவர்கள் தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பில் கதைப்பது, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல. வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் போருக்குப் பின்னரான கடந்த 11 ஆண்டுகளில் கண்ட அபிவிருத்தி என்பது கடுகளவே.

ஆனால், அந்த அபிவிருத்தி ஏற்படாமைக்குக் கூட, கூட்டமைப்பே காரணம் எனக் கூச்சல் கூக்குரல் இடுவதே கண்டனத்துக்கு உரியது ஆகும். கூட்டமைப்பு, தமிழ் மக்களது உரிமை சார்ந்த விடயங்களுக்கே, அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டு வந்துள்ளது; வருகின்றது. ஆனால், அதற்காக அபிவிருத்திக்குக் குறுக்கே நிற்க வேண்டிய தேவை, கூட்டமைப்புக்கு ஒருபோதும் இல்லை.

ஆயுதப் போராட்டம், 2009ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை, அமைச்சராக, பிரதி அமைச்சராக, இராஜாங்க அமைச்சராக வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பேரினவாதம், தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பலர் பதவி வகித்து உள்ளனர். ஆனால், அவர்களால் அபிவிருத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடிந்ததா, பெயர் குறிப்பிட்டுக் கூறும்படியாக, தொழிற்சாலைகளை நிர்மாணிக்க முடிந்ததா, ஏன், முன்னர் இயங்கு நிலையிலிருந்த தொழிற்சாலைகளை, மீள இயங்க வைக்க முடிந்தா?

தமிழர் பிரதேசங்களில், தமிழ் மக்களது கடற்றொழிலுக்குத் தடையாக இருக்கின்ற சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையின மீனவர்களை வெளியேற்ற முடிந்ததா?

தமிழர் பிரதேசங்களில், தமிழ் மக்களது பூர்வீகக் காணிகளைக் கபளீகரம் செய்து, அவர்களது கண் முன்னே நெல்மணிளை அறுவடை செய்து, தங்களது பொருளாதாரத்தை உயர்த்துகின்ற பெரும்பான்மையின விவசாயிகளிடமிருந்து எம் காணிகளை மீட்க முடிந்ததா? இப்படியே பட்டியலை நீட்டிக் கொண்டு போகலாம்.

ஒரு தேசிய இனத்தை அழிக்க வேண்டுமெனின், அதனது நிலம், மொழி, பொருளாதாரம், பண்பாடு என்பவற்றைச் சிதைக்க வேண்டும். அந்தவகையில், தமிழ் மக்களது பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து தன்னிறைவு நோக்கி நகருவதை, எக்காலத்திலும் பேரினவாதம் விரும்பப் போவதில்லை.

விடுதலைக்காகப் போராடும் இனம், வாய்க்கும் வயிற்றுக்கும் நேரத்தைச் செலவிட்டால், அடுத்த விடயங்கள் தொடர்பில் சிந்திக்க மாட்டார்கள் என்ற சித்தாந்தம், அடக்குமுறையாளர்களிடம் எப்போதும் உண்டு. அது பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கும் பொருந்தும்.

இந்நிலையில், உரிமையுடன் கூடிய அபிவிருத்தி, அபிவிருத்தியுடன் கூடிய உரிமை என்ற அழ(மு)கிய கோசங்களுடன் பல பேரினவாதக் கட்சிகளின் தமிழ் வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கில் பவனி வருகின்றார்கள்.

இது ஒருவிதத்தில் சரி எனப்பட்டாலும், எங்களது உரிமைகள் கிடைக்கின்ற போது, எங்களது பொருளாதாரம் தொடர்பில் நாங்களே திட்டமிடலாம் அல்லவா, நாங்களே செயற்படுத்தலாம் அல்லவா?

எனவே, பேரினவாதக் கட்சிகளில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போட்டியிடுபவர்கள் அங்குள்ள தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களைக் காட்டிலும் வல்லவர்களாக இருக்கலாம்; நல்லவர்களாக இருக்கலாம்; எங்களது ஊரைச் சேர்ந்தவராக இருக்கலாம்; எங்களுக்குத் தெரிந்தவராக இருக்கலாம்; எங்களை அறிந்தவராக இருக்கலாம்.

ஆனால், அதற்காக அவருக்கு வாக்களிக்க முன், ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டும். ஏனெனில், அவர்களுக்குத் தமிழ் மக்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்காலும் அவர் தெரிவு செய்யப்படாது விட்டாலும், இது, அவர்களது கட்சி, தேசிய ரீதியில் பெறும் ஒட்டு மொத்த வாக்கையும் அதிகரிக்க உதவும். இது அந்தக் கட்சியினது தேசியப் பட்டியல் அங்கத்தவர்களை அதிகரிக்கும்.

அடுத்து, தேசியக் கட்சிகள் தங்களது நலன் சார்ந்து, தேசிய ரீதியில் நாடாளுமன்றில் முடிவுகள் எடுக்கின்ற வேளையில், அதில் இருக்கின்ற நம்மவர், அதற்கு மனதளவில் உடன்படாவிட்டாலும், தான் சார்ந்த கட்சி என்ற அடிப்படையில் உடன்பட வேண்டி வரும்.

இதற்கு மேலதிகமாக, தமிழினத்துடன் இன்றுவரை வீணே, தேவையற்று மல்லுக்கட்டி வருகின்ற கட்சியில், நாம் இதுவரை இருந்து சாதித்தது என்ன, இனிச் சாதிக்கப் போவது என்ன, சாதிக்க விரும்பினாலும் பேரினவாதம் சற்றேனும் அனுமதிக்குமா?

இது வரையிலான காலமும், அரசியல் தீர்வுத்திட்டங்கள் தோல்வி அடைவதற்குக் காரணம், தமிழ்க் கட்சிகள் அல்ல. மாறாக, தமிழர்களது உரிமைகளை இம்மியளவேனும் தரமறுக்கும், சிங்களப் பேரினவாதக் கட்சிகளே ஆகும்.

ஆனால், இனிவரும் காலங்களிலும் தமிழர் தரப்பும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தீர்வு காணும் பொருட்டு, அவர்களுடனேயே பேச்சுகளில் ஈடுபட வேண்டும். இதுவே யதார்த்தம்; இதுவே களநிலைவரம்.

அதற்கு நாம் எம்மை வளப்படுத்த வேண்டும்; வலுப்படுத்த வேண்டும். மாறாக, எமக்குத் துன்பம் தந்தவர்களையே நாம் வலுப்படுத்தலாமா? சற்றுச் சிந்திப்போம்; சலிக்காமல் எம்மவர்களுக்கு வாக்களிப்போம்.

## கடிதங்கள்

### வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட மூதூர் மூன்றாம் கட்டை மலையடிவாரத்திலிருந்து கிண்ணியா சூரங்கல் வரை செல்கின்ற பிரதான உள்ளக இணைப்பு வீதியைப் புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் உரிய பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால், மிகமோசமாகச் சேதமடைந்து, வீதி நெடுகிலும் பள்ளமும் படுகுழிகளுமாக, வீதி சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால், இவ்வீதியூடாகச் சென்றுவரும் பொதுமக்களும் வாகன ஓட்டுநர்களும் பெரிதும் சிரமப்படுகின்றனர். அத்துடன், விபத்துகள் நேர்ந்துவிடுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம் காணப்படுகின்றன.

மாரிகாலத்தில் இவ்வீதி சேறும் சகதியுமாக மாறுகின்றது. இதனால், அக்காலங்களில் இந்தவீதி ஊடாகப் பயணிக்கவே முடியாத அவலநிலை தொடர்கின்றது. இவ்வீதியில் பதினைந்தாம் வாய்க்கால் வரை, நெல் வயலுக்குச் சென்றுவர வேண்டிய விவசாயிகளும் தமது விவசாய உபகரணங்களை எடுத்துவருவதற்கும் விளைபொருள்களை எடுத்துச் செல்வதற்கும் வீதி சேதமடைந்து காணப்படுவதால் சிரமப்படுகின்றனர்.

அத்துடன் வீதியூடாகவே அதிக கனரக வாகனங்கள் மண் ஏற்றிக்கொண்டு பயணிப்பதால், இந்தவீதி பயன்பாட்டுக்கு உதவாதவகையில் மேலும் சேதமடைந்து சென்றுகொண்டிருக்கின்றது. இத்தகைய இடர்களைக் கருத்திற்கொண்டு இவ்வீதியைப் புனரமைக்க வேண்டுமென்பதே பொதுமக்களின் கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

–எஸ்.எல். நௌபர்



# ‘அபிவிருத்தியை அரசியலும் அரசியலை உரிமையும் நகர்த்த வேண்டும்’

**அதிரதன்**

தமிழர் விடுதலைக் கூட்டணி, மாற்று அரசியலை முன்வைக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி தகுந்தவர்களை, தகுதியுள்ளவர்களை இந்தத் தேர்தலில் போட்டியிட வைத்திருக்கிறது. எந்த அணியுடனும் போட்டியிடும் வல்லமை, எமது அணிக்கு இருக்கின்றது. நிச்சயமாக, ஓர் ஆசனத்தை மட்டக்களப்பில் கைப்பற்றும் என, மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் முன்னேற்றக் கட்சி சார்பில், தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

‘தமிழ் மிரர்’ பத்திரிகைக்கு வழங்கிய விசேட நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவரது செவ்வியில் விவரம் வருமாறு:

**கே**: உங்களது தந்தை, தமிழ் அரசியலில் முக்கிய பங்குக்குரியவர்; உங்களது அரசியல் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?

நான் 14 வயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையாக்கப்பட்டு, வெளிநாட்டுக்குச் சென்றவன். போர் முடிந்த சூழலில், நாட்டுக்குத் திரும்பிய வேளை, பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த மக்களுக்குப் பொருளாதார மீட்சி வேண்டும் என்ற வகையில் தான், தேசிய அரசியல் மூலமாகப் பல மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை காரணமாகத்தான், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தேன்.

முக்கியமாக கே. டபிள்யூ தேவநாயகம், ஐக்கிய தேசிய கட்சியின் மூலமாகவும் ராஜன் செல்வநாயகம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஊடாகவும் மட்டக்களப்பில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்வைத்தார்கள் என்ற வகையில், அந்த வழிகாட்டலில் நானும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மூலமாகச் செயற்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மத்தியில், மாற்றத்தைக் கொண்டுவரலாம் என்ற எண்ணத்தில் செயற்பட்டேன்.

ஆனால், நான் உணர்ந்த சில விடயங்கள் என்னவென்றால், இலங்கையில் தேசிய கட்சி என்று எதுவும் இல்லை. அது, சிங்களத் தேசிய கட்சிகளாகவும் தமிழ்த் தேசிய கட்சிகளாகவும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அவர்களது தேசிய சிந்தனையுடைய கட்சிகளாகவுமே இருக்கின்றன. எனவேதான், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலில் போட்டியிடவில்லை. என்னுடைய நிலைப்பாடானது, இணக்கப்பாட்டு அரசியலே மக்களுக்குத் தேவையாக இருக்கிறது என்பதாகும். தேவை ஏற்படுகின்ற போது, இணக்கப்பாட்டு அரசியலுக்குச் சென்று, எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். எமது அரசியல் அபிலாசைகளைக் காலப்போக்கில், சாதகமான சூழ்நிலை ஏற்படும் காலங்களில் தீர்வைக் காணவேண்டும் என்பதுதான், என்னுடைய அரசியல் பாதையாக இருக்கின்றது.

ஒரேயொரு மாற்றம் என்னவென்றால், சிங்களக் கட்சிகளில் நாம் போட்டியிடுவதை விட, எமது தமிழ்க் கட்சியின் ஊடாக வெற்றி பெற்று, பேரம் பேசி, நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அதன் அடிப்படையில்தான், மக்கள் முன்னேற்றக் கட்சி என்ற கட்சியை ஆரம்பித்து, அந்தக் கட்சியின் ஊடாகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறேன்.

**கே**: யுத்த மௌனிப்பின் பின்னரான சமகால அரசியல் சூழ்நிலையில், தமிழர்களது அபிலாசைகள் தொடர்பாக, உங்கள் தந்தையின் பாதையில் செல்வீர்களா, மாற்றுப் பாதையைத் தெரிந்துள்ளீர்களா?

அபிலாசைகள் என்ற விடயத்தில், தந்தையின் காலத்திலிருந்து ஒரு மாற்றுப் பாதை இருக்கின்றது. 1976ஆம் ஆண்டிலிருந்து, தமிழீழம் அமைய வேண்டும் என்ற கருத்திலிருந்துதான், என்னுடைய தந்தையார் உட்படப் பலர் இருந்தார்கள். ஆனால், இலங்கை-இந்திய ஒப்பந்தத்திலிருந்து ஒரு மாற்றம் ஏற்பட்டது. தமிழ்த் தேசியம் என்ற விடயத்தில், எல்லோருமே தடம் மாறிய தமிழ்த் தேசிய சிந்தனையாளர்கள் தான்.

ஏனென்றால், இலங்கையினுடைய அரசமைப்பின் 5ஆம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில், சத்தியப்பிரமாணம் எடுத்துத் தான் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அது, தமிழர்களுடைய அபிலாசைகளாகக் கருதப்படுகின்ற தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய மூன்றுக்கும் மாறாகவே சொல்கிறது. இவற்றுக்கு மாறாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டு, நாங்கள் தமிழ்த் தேசியத்தைத் தடம் மாறாமல் காப்பாற்றுகின்றோம் என்று பறை சாற்றுவது போலித்தனமாகும்.

விடுதலைப் புலிகளையும் பிரபாகரன் அவர்களையும் விட்டுவெளியில் பார்த்தால், கிட்டத்தட்ட அனைத்துத் தலைவர்களும் போராட்ட இயக்கங்களும் இலங்கையினுடைய இறையாண்மையை ஏற்றுக் கொண்டுதான் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். அதை உண்மையாக ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பதற்கு, வேறு ஒரு வாக்குவாதத்துக்குச் செல்ல வேண்டும்.

என்னுடைய நிலைப்பாடு, தந்தையாருடைய நிலைப்பாடுதான்; இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்து, ஓரிரு தசாப்தங்கள் தமிழர்களைப் பலப்படுத்த வேண்டும். இந்த வழியில், நீண்ட நாளைய குறிக்கோளை அடையாலாம். வெறுமனே குறிக்கோளை எண்ணிக் கொண்டால், இருக்கின்ற இருப்பும் இல்லாமல் போய்விடும் என்பதுதான், எங்களுக்குள் இருக்கின்ற ஆதங்கமும் எண்ணமும் ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்டகாலத்தில், எமக்குத் தீர்வு வந்தால், இருந்தவையெல்லாம் பழையபடி வந்துவிடும் என்பதாகத்தான் இருந்தது. ஆனால், 60 வருடங்கள் சென்றும் எந்தத் தீர்வும் வரவில்லை என்பதுதான், எங்களுடைய அரசியல் அனுபவம். எனவே, தீர்வு வரும் என்ற எண்ணத்தில், எங்களுடைய மக்களின் அடிப்படைத் தேவைகளையும் இன்றைய சவால்களையும் நாங்கள் ஒதுக்கிவைத்துவிட்டு அரசியல் செய்யமுடியாது.

1976களில், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தொண்டமான் இணைந்துவிட்டு, “தமிழீழம் இன்றைக்குச் சாத்தியமில்லாததொரு விடயம்; நான், என்னுடைய மக்களது விடயங்களைப் பார்க்க வேண்டும்” என்று கூறிவிட்டுப் போனார். அதேபோல், நாங்கள் இன்றைக்கு, எங்களுடைய அரசியல் குறிக்கோள் எப்படியும் இருக்கட்டும், எங்களுடைய மக்களது வாழ்வாதாரத் தேவைகளைப் புறந்தள்ளிவிட்டு, அரசியல் பேசத் தயாரில்லை. மக்களுடைய எதிர்காலத்தைப் பலப்படுத்திக் கொண்டுதான், எங்களுடைய அரசியலை முன்னெடுக்க முடியும். அந்த விடயத்தில், எனக்கும் எனது தந்தையாருக்கும் வேறுபாடு இருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

**ஒருபோதும் உரிமை அரசியலிலிருந்து தமிழர்கள் விடுபட வேண்டும் என்று கூறவில்லை. உரிமையை வைத்து அரசியல் செய்திருக்கின்றார்கள்**

**சுயநிர்ணய உரிமையை இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் பெறமுடியாது. ஏன், எதிர்ப்பு அரசியலின் மூலமாகக்கூட பெறமுடியாது. பூகோள அரசியல், நகர்வுகள் மூலமாக மட்டுமே பெறமுடியும்**

**சிங்களக் கட்சிகளில் நாம் போட்டியிடுவதை விட, எமது தமிழ்க் கட்சியின் ஊடாக வெற்றி பெற்று, பேரம் பேசி, நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு**



**கே**: தமிழர்களது அரசியல் தீர்வு தொடர்பாக, நீங்கள் எத்தகைய தீர்மானங்களை எடுத்துள்ளீர்கள்?

ஒன்றிணைந்த வடகிழக்குத் தான் என்னுடைய நிலைப்பாடு; தமிழர்களுடைய தாயகமாக வடக்கு, கிழக்கு இருக்கின்றது. சிங்கள தேசமும் 1958ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விசேட திருத்தத்தின் ஊடாகத் தமிழ் மொழி, வடகிழக்கினுடைய நிர்வாக மொழியாகவும் அரச கரும மொழியாகவும் இருக்கும் என்று பிரகடனப்படுத்தப்பட்டது. அந்தச் சட்டச் சீர் திருத்தத்திலேயே குறிப்பிடப்படுவது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி உத்தியோகபூர்வ மொழியாகவும் ஏனைய மாகாணங்களில் சிங்கள மொழியும் இருக்கும் என்பதுதான் அந்தச் சட்டத்தினுடைய கூற்று. அதிலிருந்து எடுக்கக்கூடிய விடயம் என்னவென்றால், வடக்கு, கிழக்கில் தனிச்சிங்களத்தைக் கொண்டுவர முடியாது; இது தமிழர்களின் தாயகம் என்பதையும் அன்றைய சிங்களவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இந்த நிலையிலிருந்து பார்க்கும் போது, சிங்கள தேசமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு வரைக்கும் ஏற்றுக் கொண்டுதான் இருக்கிறது. அதனை வெளியிலே அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தமிழர்களென்று தனித்துவமாக இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொண்டே இருக்கிறது.

எனவே, முதல்கடமை தாயகத்தை ஒரு செழுமையான நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அதன்பின்னர்தான் தேசியத்தையும் சுய நிர்ணயத்தையும் பற்றிச் சிந்திக்கலாம் என்பது எனது கருத்து

**கே**: உரிமை அரசியலில் இருந்து கொண்டு அரசியல் செய்வதே, தமிழர்களின் வரலாறு; உங்களது கருத்து என்ன?

உரிமை அரசியல் என்று கூறுவதைவிட, உரிமையை வைத்துக்கொண்டு அரசியல் செய்கிறார்கள் என்பதுதான் உண்மை. அவர்கள், மக்களிடம் உண்மையை எடுத்துக் கூறவில்லை. 1948ஆம் ஆண்டிலிருந்து, உரிமைக்காகத் தமிழர்கள் பல வழிமுறைகளைத் தேடிவிட்டோம். எல்லாக் குறைகளையும் தமிழ் அரசியல்வாதிகள் மீது சுமத்தமுடியாது. சிங்களத் தேசமும் சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழர்களுக்கு உகந்த தீர்வைக் கொடுத்திருந்தால், தனிநாடு கேட்டு ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்காது.

ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர், நாங்கள் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்து, சாணக்கியமான அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளவேண்டும். வெறுமனே உரிமை, உரிமைக்கு உரித்தானவர்கள், அபிவிருத்திக்கு உரித்தானவர்கள் என்று எவரையும் கூறமுடியாது.

நல்ல அரசியல் தலைமைத்துவம் உரிமையை எடுத்துக் கொள்கின்ற விடயத்தில், உதாரணமாக, கல்முனை பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவது அப்பிரதேச மக்களின் உரிமை; அந்த உரிமையை இணக்கப்பாட்டு அரசியலின் மூலமாக மட்டும் தான் பெறமுடியும். அதேநேரத்தில், சுயநிர்ணய உரிமையை எடுத்துக் கொண்டால் அதுவும் தமிழர்களின் உரிமைதான். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் அதை இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் பெறமுடியாது. ஏன், எதிர்ப்பு அரசியலின் மூலமாகக்கூட பெறமுடியாது. பூகோள அரசியல், சர்வதேச அரசியல் நகர்வுகள் மூலமாக மட்டுமே பெறமுடியும்.

**கே**: அபிவிருத்தி அரசியலையே தமிழர்கள் இப்போதைய நிலையில் கைக்கொள்ளவேண்டுமென்ற கருத்துக்கு உடன்படுவீர்களா?

அபிவிருத்தியும் அரசியலும் என்றுதான் கொள்ள வேண்டும். அபிவிருத்தி மக்களின் தேவை. அபிவிருத்திக்கான திட்டங்களைச் சரியானமுறையில் வகுக்க வேண்டும். அபிவிருத்தி அரசியல் வேறு; உரிமைக்கான அரசியல் வேறு என்று பார்க்க முடியாது.

மக்களின் தேவை அபிவிருத்தி என்றால், அதை அரசியல் நகர்த்த வேண்டும். மக்களுக்கு உரிமை என்ற தேவை இருக்கின்றது. இன்று இருக்கின்ற தேவை என்னவென்றால், இணக்கப்பாட்டு அரசியல்; எதிர்ப்பு அரசியல் என்று பார்க்கும் போது, எதிர்ப்பு அரசியலில் மட்டும் எங்களது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. அதேநேரத்தில், எதிர்க்க வேண்டிய விடயங்கள் வருகின்ற போது, இணக்கப்பாட்டோடு அரசியலைச் செய்து கொண்டு, எதிர்க்க முடியும்.

**கே**: கடந்த கால அரசியல் நகர்வுகளிலிருந்து தமிழர்கள் கற்றுக் கொண்ட பாடம் என்று எவற்றைச் சொல்வீர்கள்?

தமிழர்கள் தமது நகர்வைக் குறுகிய காலப்பகுதிகளில் வகுக்க வேண்டும். முக்கியமாக, ஒவ்வொரு ஐந்து வருடங்களும் ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் என்று அந்தக் காலத்துக்கு ஏற்றவகையில், தமிழ் அரசியல் தலைவர்கள் நகர்த்த வேண்டும். முக்கிய பாடம் என்னவென்றால், தமிழர்களிடம் தமிழ்த் தேசிய அரசியல் சிந்தனையாளர்கள், ஒருமித்த பலத்தைத் தாருங்கள் என்று அரசியலை நகர்த்தி வந்தார்கள். தமிழர்கள் உணர வேண்டிய ஒரு பாடம் என்னவென்றால், சிங்கள இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் இருந்து வந்திருக்கின்றன.

தமிழ் மக்களை மட்டும், மாற்று அரசியல் கருத்துகள் இல்லாமல், ஒரே குடைக்குள் மட்டும் இருங்கள் என்று கூறுவது, தமிழ் மக்களுக்கு ஒரு பாதகத்தைக் கொடுக்கும். தமிழ் மக்களின் தேவைக்காக, அரசியலுக்காக மாற்றுச் சிந்தனையுடையதாக ஒரு தேசிய இனம், தமது விடுதலைக்காகப் பல வகைகளைக் கையாண்டு, தோல்வியடைந்த நிலையில் இருந்துமீள, மாற்றுச் சிந்தனைகளுக்கு வழிவகுக்க வேண்டும்.

வடமாகாணத்தில் மாற்று சிந்தனைகள் இருக்கின்றன. மாற்றுச் சிந்தனைகளுக்கென்று ஒரு சாராரும் அதி தீவிர பிரிவினைவாதச் சிந்தனையுடன் ஒரு சாராரும் நாங்கள் தான் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று ஒருசாராரும் இருந்து கொண்டு அரசியல் செய்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில், மாற்றுச் சிந்தனைகள் இருக்கின்றன. அதைப் பிரதிபலிக்கும் வகையில் அரசியல் வளரவேண்டும்; வளரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

**கே**: பொருளாதாரத் துறைசார்ந்தவர் என்ற வகையில், உங்களது திட்டங்கள் என்ன?

அடிப்படையாக எமது பொருளாதாரத்தை வளர்க்க வேண்டுமாக இருந்தால் வெறுமனே அரச கட்டமைப்புகளுக்கூடாக மாத்திரம் வளர்க்க முடியாது. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டக்களப்புக்கென்று தொழில்பேட்டைகள் உருவாக்கப்பட வேண்டும். தொழில்பேட்டைகளுக்கு அரசு செய்ய வேண்டியது என்னவென்றால் அதற்கான இடங்களை அடையாளப்படுத்தி, இடங்களைக் கொடுத்து பொது வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மட்டும் தான். முதலீட்டாளர்களை மட்டக்களப்புக்கு அழைப்புக் கொடுத்து, அவர்கள் மூலமாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது தான் இன்றைய யதார்த்தம். அதை முன்னெடுப்பதற்கான திட்டம் எம்மிடமிருக்கின்றது.

இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைப் பார்த்தால் மட்டக்களப்பு கரையோரப் பிரதேசத்தில் மாத்திரம் தான் நவீன வசதிகள் கொண்ட மீன்பிடித் துறைமுகங்கள் இல்லை. அதற்குக் காரணம் என்ன என்பதனை நன்கு உணர்ந்தவர்களாக விவசாயத்துறையை, மீன்பிடித்துறையை, தொழில் வளத்தை உருவாக்குவதுஅவசியம். மட்டக்களப்புக்கு வரும் 90 சதவீதமான நீர், வாவிக்கும் கடலுக்கும் சென்றடைகிறது. இந்த நீரைச் சரியான நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம், எமது மாவட்டத்தின் முதுகெலும்பாக இருக்கின்ற நெற்செய்கையை மாற்றமுடியும். முக்கியமாக 02 இலட்சத்து 38ஆயிரம் ஏக்கர் நிலத்தில், வெறுமனே 80 ஆயிரம் ஏக்கர் நிலம் தான் நீர்ப்பாசனத்துக்கு உட்பட்டிருக்கிறது, 400 குளங்களில் 200 குளங்கள்தான் குளங்களாக இருக்கின்றன. எனவே, மட்டக்களப்புக்கென்று ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும். கிரான்புல்கட்டு, கண்டியனாற்றுக் குளம் என்று பல திட்டங்கள், தேர்தல் காலங்களில் கூறப்பட்டு மறக்கப்படுகின்ற விடயங்களாக இருக்கின்றன. அதை நிறைவேற்றும் ஆணையைத்தான் நான் மக்களிடம் கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.

**கே**: தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர்களின் அரசியலில் விமர்சனங்களுடன் உள்ள நிலையில் அதைத் தேர்வு செய்ததற்குக் காரணம்?

அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் விமர்சனம் இருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியை அப்பழுக்கற்ற கட்சியாகத்தான் பார்க்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ‘சூரியன்’ சின்னம், பாரம்பரிய சின்னமாக இருந்து வந்திருக்கின்றது. அரசியல் தலைவர்கள் அவர்களது அடையாளத்தை வைத்து, கட்சியின் பாரம்பரியத்தைப் பார்க்க முடியாது.

ஒட்டு மொத்தமாக, தமிழ்த் தேசிய சிந்தனையையோ, தமிழரசுக் கட்சியையோ தூக்கி எறிய முடியாது என்பதுதான் அரசியல் யதார்த்தம். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பலரும் பேசுகின்றோம். நாங்கள் ஒரு தொலை நோக்கத்துடன் பயணிக்கின்றோம். அது பற்றி, தேர்தலுக்குப்பின் கூறமுடியும்.

**கே**: உரிமை அரசியலில் இருந்து தமிழர்களை விடுவிக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?

ஒருபோதும் உரிமை அரசியலிலிருந்து தமிழர்கள் விடுபட வேண்டும் என்று கூறவில்லை. உரிமையை வைத்து அரசியல் செய்திருக்கின்றார்கள். உரிமை அரசியல் செய்யவில்லை என்றுதான் கூற வேண்டும். முக்கியமாக, கடந்த 10 வருடங்களில், உரிமையை வைத்து நாடகம் ஆடினார்களே தவிர, உரிமை அரசியலை முன்னெடுக்கவில்லை.

**கே**: மட்டக்களப்பு அரசியலரங்கில் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக அறிகிறோம்?

பதில்:- இன்றைய நிலையில் நாங்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் ஒரு பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும். முக்கியமாகத் தலைமை வேட்பாளர்கள் வருகை தந்தால், எமது நிலைப்பாட்டை வெளிப்படையாகக் கூற முடியும். இன்றுவரை யாரும் பகிரங்க விவாதத்துக்குத் தயாராக இல்லை என்றே ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். எமது நிலைப்பாடுகளை, அரசியல் நிலைப்பாடுகளை மக்கள் முன் பகிர்ந்து தெளிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும். இந்தப் பகிரங்க அழைப்பை தலைவர்களிடம் மீண்டும் மீண்டும் விடுகிறேன்.



சொர்ணகுமார் சொரூபன்

உரிமையை அனுபவிப்பதற்கு நம்முடைய

# ‘இருப்பை உறுதி செய்யவேண்டும்’

நாம் இந்த மண்ணில் இல்லாவிட்டால், இத்தனை காலமும் உயிர்களை இழந்து, உடமைகளை இழந்து, முன்னெடுத்திருந்த போராட்டம், அர்த்தமற்றதாகப் போய்விடும். இதனடிப்படையில் எமது உரிமையை அனுபவிப்பதற்கு, எமது இருப்பை உறுதி செய்ய வேண்டிய தேவையுள்ளது. இருப்பை உறுதி செய்ய வேண்டுமானால், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் யாழ். தேர்தல் மாவட்டத்தில், கைச் சின்னத்தில் 1ஆம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். தமிழ்மிரருக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:

**கே:** தேசிய கட்சி என்ற ரீதியில், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பில் எவ்வாறான நகர்வுகளை மேற்கொள்ள உள்ளீர்கள்?

ஆரம்பத்திலிருந்து, என்னைத் தேசிய கட்சி என்று பிரதிநிதித்துவப்படுத்தியதில்லை. தமிழ் மக்களை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறேன். அதனடிப்படையில், மக்களின் உரிமைகளை, தேவைகளைக் கட்சியில் பிரதிநிதித்துவப்படுத்தி, எதிர்காலத்தில் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி, மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுப்பது எனது நோக்கமாகும்.

தமிழ் மக்களின் தீர்வு சார்ந்த விடயமாக இருக்கட்டும்; அபிவிருத்தி சார்ந்த விடயமாக இருக்கட்டும் நிச்சயமாகத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகத் தேவையானதைப் பெற்றுக்கொடுப்பதோடு, அதைப் பல மடங்கு அதிகமாகப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபடுவதோடு, தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் ஒரு சில விடயங்களுக்கு எதிராக அழுத்தங்களைக் கொடுப்பேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதிக்கு நாம் வாக்களிக்கவில்லை. அதற்கான காரணமாக, கடந்த காலத்தில் இடம்பெற்றவையை மறக்க முடியவில்லை; மன்னிக்க முடியவில்லை என்கின்றோம். இது நியாயமான காரணமாகவிருந்தது. ஆனாலும் அடுத்த ஐந்து வருடங்களுக்கு இதனை மாற்ற இயலாது. இனியும் நாம், “சிங்களஅரசு சிங்களஅரசு” என்று கூற முடியாது. நாம் வாக்களிக்காத பட்சத்தில், அது சிங்கள அரசுதான். அதனைத் தமிழ்மக்களுக்குச் சார்பான அரசாக மாற்ற வேண்டியது, எங்களுடைய கடமை. அதனடிப்படையில் நான், தமிழ் மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் செல்ல இருக்கிறேன்.



**கே:** தமிழர் பிரதேசங்களில் அடையாளங்கள், மரபுரிமைகள் அழிக்கப்படுவதற்கான, மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதை இப்பிரதேசத்தை சேர்ந்தவர் என்ற ரீதியில் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

இவ்விடயத்தை வைத்துக்கொண்டு பலர் இருபுறமும் அரசியல் செய்கின்றனர். நான் ஏற்கெனவே கூறியது போன்று, தீர்வாகட்டும், அபிவிருத்தியாகட்டும் மக்களின் அபிலாசைகளைக் கொண்டு, இவ்வரசில் இருப்போம் என்று கூறியுள்ளேன். அதனடிப்படையில் தமிழ் மக்களுக்கெதிராக வரும் செயற்பாடுகளுக்கும் எமது கண்டனங்களையும் அழுத்தங்களையும் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

குறிப்பாக, கிழக்குக்கான செயலணி உருவாக்கப்பட்டதற்கு தமிழர் பிரதிநிதிகளை உள்வாங்காததற்குக் கண்டனங்களையும் அழுத்தங்களையும் வழங்கி இருந்தோம். அதற்கான ஏற்பாடும் இடம்பெற்றது. தொடர்ந்து திருக்கோணேஸ்வரம், நல்லூர் தங்களுடைய இடங்கள் என, ஒரு பௌத்த குரு கூறியுள்ளார். இது எங்களுடைய அடையாளங்களைப் பறிக்கும் செயற்பாடாகக் கருத முடியும்.

இந்த விடயத்தில் முதன்முதலாக கண்டனம் தெரிவித்தது நான்தான். என்னை “ஆளுங்கட்சி ஆளுங்கட்சி” என்று கூறினாலும், இன்று மக்கள் பிரதிநிதி என்ற வகையில், எனது கண்டனத்தைத் தெரிவித்தேன். கண்டனத்தோடு மட்டும் நின்று விடாது, ஜனாதிபதி, பிரதமரிடம் இவ்விடயத்தை எடுத்துச்சென்றேன். அந்தப் பௌத்த குருவின் கருத்தானது, அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். அது செயலணியின் கருத்தோ, அரசாங்கத்தின் கருத்தோ என்று ஆகாது என ஜனாதிபதி அறிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயத்தை, அவர்களுடன் இணைந்திருந்து சொல்லும் போது கேட்கிறார்கள். ஆனால், வெளியில் இருந்து சொல்லும் போது, பல விடயங்களைச் சிந்திக்க வேண்டியுள்ளது. இந்த விடயங்களைப் பொறுத்தவரையில், வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற அனைத்துமே இன்று இடம்பெறவில்லை. கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் இடம்பெற்றது. சர்வதேச கண்காணிப்பு காலத்திலும் இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது, நல்லாட்சி அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்துக் கொண்டு தான் இருந்தது. இது தொடரத்தான் போகின்றது. அதற்கான அழுத்தங்களை உள்ளுக்குள்ளே இருந்து கொடுக்க வேண்டும்.

**கே:** அபிவிருத்தி தொடர்பில் உங்களுடைய செயற்பாட்டுத்திட்டம் எவ்வாறானதாக உள்ளது?

தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கடந்த நான்கரை வருடங்களில் 6,597 திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளேன். குறிப்பாக, நான்கு இலட்சம் பயனாளிகளுக்கான வேலைத்திட்டங்களைச் செய்ய முடிந்தது. இதனை இன்னும் பல மடங்கு செயற்படுத்த வேண்டும் என்பதற்காக, இம்முறை தேசிய பட்டியல் வேண்டாம் என்று கூறி, மக்கள் தெரிவு செய்த பிரதிநிதியாக அரசாங்கத்தின் முன்னிலையில் போய்நின்று, எமது மக்களுக்குரிய தேவைகளையும் அபிலாசைகளையும் பெற்றுக் கொள்வதற்காக தேர்தலில் நிற்கின்றேன்.

அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு வெறுமனே வீதியைச் செப்பனிடுவது பற்றி நான் பேசவில்லை. நான் பார்க்கும் அபிவிருத்தியானது நாம் இழந்த அனைத்தையும் மீளப்பெறுவதாகும். விவசாயம், மீன்பிடி, கல்வி ஆகியவற்றில் நாங்கள் இருந்த இடம் எங்கு, தற்போதுள்ள இடம் எங்கு? அனைத்திலும் கடைசியில் உள்ளோம். வறுமையில் கிளிநொச்சி மாவட்டம் இரண்டாம் நிலையிலுள்ளது. நம் மக்கள் வாழ்வாதார-த்துக்காகக் கஷ்டப்படுகின்றனர்; வேலை வாய்ப்பின்றிக் காணப்படுகின்றனர். 90 சதவீதமான கிராமங்களில் 90 சதவீதமான மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலுள்ளன. எமது இருப்பு இல்லாமல் போவதை, நம் கண்ணூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். அனைத்தும் இழக்கப்பட்டு சனத்தொகை சதவீதத்திலும் வீழ்ச்சியடைந்து, வாக்காளர் சதவீதம் குறைவடைந்து, இதனால் எமது பிரதேசத்துக்குக் கிடைக்க வேண்டிய நிதி குறைவடைந்து செல்கின்றது. இத்தனை காலமும் உயிர்களை இழந்து, உடமைகளை இழந்து போராட்டத்தைச் செய்ததற்கு அர்த்தமற்றதாகப் போய்விடும். நாம் இந்த மண்ணில் இல்லாவிட்டால். இதனடிப்படையில் எமது உரிமையை அனுபவிப்பதற்கு எமது இருப்பை உறுதி செய்ய வேண்டிய தேவையுள்ளது. இருப்பை உறுதி செய்ய வேண்டுமானால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். நாம் இழந்த தகுதிகளை மீளப்பெற வேண்டும். சிதைவடைந்த தொழிற்றுறைகள் மீளெழ வேண்டும். கல்வியை முதல் நிலைக்கு வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். இளைஞர்களைப் போதைவஸ்துப் பிரச்சினையிலிருந்து மீட்க வேண்டும். இளம் சமுதாயத்தைப் பொருளாதாரப் பாதையில் வழி நடத்த வேண்டும். சுயதொழில் முயற்சியாளர் அனைவரையும் ஊக்குவிக்க வேண்டும். இதனடிப்படையில் ‘என் கனவு யாழ்’ என்ற தொனிப்பொருளில், எங்களுடைய அடுத்த ஐந்து வருடத்துக்கான கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இது எதிர்காலத்துக்கான திட்டமாக அமையும். அதில், ‘யாழ்’ என்று சொல்லுவது, யாழ். தேர்தல் மாவட்டத்தையாகும். நாம் வாழ, உகந்த பிரதேசமாக இந்த மண்ணை மாற்றுவோம்.

> **தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, பின்தங்கி இருக்கின்றது**

> **போராடியவர்கள் கூட, இருப்புடன் சேர்ந்த உரிமைகளைப் பெற வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். இருப்பு இருந்தால் தான், உரிமையை அனுபவிக்க முடியும். அரசியல் தலைமைகள் கடைசியாக இருப்பையும் காக்கவில்லை, உரிமையையும் பெற்றுக் கொள்ளவில்லை**

**கே:** வடக்கு மாகாணம் இந்நிலைக்கு வருவதற்கு, என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

இதற்குக் காரணம் நம்மவர்களின் செயற்பாடு. அதாவது, எதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் ஏற்பட்ட தவறு. நம் அரசியல் பிரதிநிதிகள் உரிமை உரிமை என்ற கோஷத்தை மட்டும் முன்னெடுத்துச் சென்றனர். அவ்வாறு செல்வதில் பிழை என்று நான் கூறவில்லை. உரிமையுடன் சேர்ந்த நம் இருப்புகளைப் பாதுகாப்பதற்கான தேவைகளையும் செய்ய வேண்டும்.

நான் நினைக்கிறேன், போராடியவர்கள் கூட, இருப்புடன் சேர்ந்த உரிமைகளைப் பெற வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். இருப்பு இருந்தால் தான், உரிமையை அனுபவிக்க முடியும் என்பது உலகறிந்த விடயம். அரசியல் தலைமைகள் கடைசியாக இருப்பையும் காக்கவில்லை, உரிமையையும் பெற்றுக் கொள்ளவில்லை. தமிழ்த் தலைமைகளில் ஒரு சிலர் விட்ட பிழையால், இன்று தமிழ் மக்கள் இந்நிலையில் உள்ளனர்.

கடந்த நான்கரை வருடங்களை உதாரணமாக எடுத்தால், அனைத்தையும் பெற்றுத் தருகிறோம் என்று கூறியவர்கள், “தீர்வு இன்று வரும் நாளை வரும்” என்று கூறினார்கள். ஆனால், அனைத்துப் பண்டிகைகளும் வந்து சென்று விட்டன; தீர்வு வரவில்லை. ‘கம்பெரலியா’ என்ற ஆறுதல் பரிசைப் பெற்றுக்கொண்டு, வாயடைத்து விட்டார்கள். மக்களின் வாழ்க்கைத் தரத்தையோ வாழ்வாதாரத்தையோ மேம்படுத்துவதற்கான எந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கவில்லை. எமது மாவட்டத்தை வறுமையிலிருந்து மீட்டெடுப்பது எவ்வாறானதென்பதை தமிழ்ப் பிரதிநிதிகள் சிந்திக்கவில்லை.

இன்று உரிமை, அபிவிருத்தி என்று கூறத்தொடங்கியுள்ளனர். இதற்கு மக்கள் தான் காரணம். மக்கள் அவர்களை அவ்வாறு பேச வைத்துள்ளனர். வடக்கு மாகாண சபை ஐந்து வருடம் செயற்பட்டது. அதில் என்ன வேலை செய்தார்கள் என்று கூறமுடியமா? ஆகவே, இவர்கள் தமிழ்மக்களின் இருப்பைக் காக்க மறந்ததாலே மாகாணத்துக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

உரிமை, அபிவிருத்தி இரண்டும் முக்கியம்; இவ்விரண்டையும் சமாந்தரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இன்று அபிவிருத்தி என்ற இடைவெளியை நிரப்புகின்ற போது, உரிமையுடைய பல பிரச்சினைகளுக்கான தீர்வுகளாகவும் அமையும். ஏனெனில், அபிவிருத்தி என்பதும் எமது உரிமைதான். இன்று எமது பிரதேசத்தில் வீதி சரியில்லை என்றாலும், குடிநீர் இல்லாவிட்டாலும், விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றில் இலாபம் கிடைக்காவிட்டாலும் மற்றைய மாகாணத்தை ஒப்பிட்டு, அங்குள்ளது போன்று எமக்கில்லை என்று கூறுகின்றோம். அந்த வகையில், இவையும் உரிமைகளுக்குள் அடங்குகின்றன. எமது பிரதேசத்தில் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வந்து, இழந்தவற்றை மீளப் பெறும் போது, உரிமை தொடர்பில் எங்கு யாப்பு மாற்றம் வேண்டும் என்ற தெளிவு கிடைக்கும். ஆகவே, அனைத்து விடயங்களுக்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

**கே:** காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில், ஆட்சி, அதிகாரத்திலுள்ளவர்கள் ‘இல்லை’ என்ற கருத்தை முன்வைத்து வரும் நிலையில், இது தொடர்பில் உங்கள் எதிர்கால நடவடிக்கை என்ன?

உண்மையில் இவ்விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனெனில் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தக் கூடியவர்களில் ஒருவர் தான் காணாமல் போயிருக்கிறார். பிள்ளை, கணவன், தந்தை இவ்வாறு காணாமல் போயுள்ள இந்த இழப்பை எவ்விதத்திலும் எதைக்கொடுத்தும் ஈடுசெய்ய முடியாது. எதை முன்னிறுத்தியும் அவர்களைச் சமாதானப்படுத்த முடியாது. இதனை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன்.

யுத்தம் முடிவடைந்த பின்னர், 2010ஆம் ஆண்டு தான், நான் அரசியலுக்கு வந்தேன். எனது அரசியல் பிரவேசத்துக்கான காரணம், பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதாகவிருந்தது. மேற்படி விடயத்தில், நான் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத ஒருவன். இவ்விடயத்தில் யார் பக்கமும் நிற்காதவன்; மக்கள் பக்கம் உள்ளவன். மக்களில் ஒருவனாக உள்ளேன். என்னால் முடிந்ததை மக்களுக்குச் செய்வதற்காகவே வந்தேன். அவ்வடிப்படையில் காணாமல் போனவர்களைத் திருப்பிப் பெற்றுத்தர முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. குறிப்பாக, கடந்த நான்கரை வருடங்களில் நல்லாட்சி அரசாங்கத்தில் இவ்விடயத்துக்குப் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பாலே அது முடியவில்லை. சர்வதேச அங்கிகாரத்தாலும் முடியவில்லை.

பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு, என்னால் முடிந்த ஓர் ஆறுதலாக, ஒரு மருந்தாக அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி, அவர்களை மீளவும் இச்சமூகத்தோடு இணைப்பதற்கு என்னால் முடிந்த முயற்சிகளைச் செய்து கொண்டு தான் இருக்கின்றேன். இவ்வாறு பாதிக்கப்பட்ட தரப்புகளை வைத்து, அரசியல் இலாபம் தேடுபவர்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, இம்மக்களும் நம்மக்கள் தான் என்பதைத் தெளிவுபடுத்தி, அவர்களைச் சமூகத்தில் இணைக்கும் செயற்பாட்டைச் செய்ய வேண்டும். இவர்கள் எங்களுக்காகப் போராடியவர்கள். இவர்களுக்கு முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், அரசியல்கைதிகள், மாற்றுத்திறனாளிகள் எனப் பெயர் வைத்து, அவர்களை மேடைக்கு மேடை சுட்டிக்காட்டி, தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காகப் பிச்சை எடுக்கிறோம்.

இன்று அந்நிலைமையை மாற்றி, அவர்களுக்கான அடுத்த கட்ட நகர்வைச் செய்வது தான், எனது நோக்கம். நான் பொய் கூறி, நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களைக் கூற விரும்பவில்லை. ஏனெனில், மக்கள் நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களைக் கேட்டு கேட்டு, கடந்த காலங்களில் ஏமாற்றமடைந்துள்ளனர். இவ்வரசின் மூலம், எவற்றை இந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியுமோ, அதைப் பெற்றுக் கொடுத்து, இந்த மக்களை அடுத்த கட்டம் நோக்கிப் பயணிக்க வைக்க முடியும்.

**கே:** இவ்விடயத்தில் நாள்களை எண்ணி எண்ணி வீதிகளில் போராடும் குடும்பங்களுக்கு ஆறுதலாக எத்திட்டங்களும் இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை. இதில் நீங்கள் எவற்றைச் செய்யவுள்ளீர்கள்?

அந்தவகையில், அவர்களுக்கான ஒரு வாழ்வாதாரத் திட்டம் உருவாக்கப்படும். அவர்களின் இழப்பை நிச்சயமாக என்னால் ஈடுசெய்ய முடியாது. ஆனால் அவர்களின் பிள்ளைகளில் ஒருவனாக இருந்து, அவர்களுக்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவேன். முக்கியமாக, ஜனாதிபதி செயலணியை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன். இச்செயலணியில் இரண்டு முக்கிய அம்சங்கள் உருவாக்கப்படும். ஒன்று, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான ஒரு தீர்வு; இரண்டாவது, ஏற்பட்டுள்ள அபிவிருத்தி இடைவெளியை நிரப்புவதற்கான செயற்றிட்டம். இவ்விரண்டையும் செய்யும் போதுதான், சம்பந்தப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சென்றடையும்.

**கே:** தமிழ் மக்கள் மீதான அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில், உங்கள் எதிர்கால நடவடிக்கை என்ன?

தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு, யாப்பு மாற்றம் ஊடான தீர்வு ஒன்று எட்டப்படும் என ஜனாதிபதியே தெரிவித்துள்ளார். அதேநேரத்தில், அபிவிருத்தி என்ற விடயத்திலும் அக்கறை செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்திருக்கிறார். குறிப்பாக, தமிழர் பிரதேசங்களில் பல அபிவிருத்திகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, எங்களுடைய மாகாணம் பின்தங்கி இருக்கின்றது. இரண்டையும் சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது. இரண்டிலும் எமது பங்களிப்பு இருக்கும். யாப்பு மாற்றம் சாத்தியமானதாக இருக்கும் பட்சத்தில், எங்களுடைய பங்களிப்பு அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே இருக்கும். அதற்கிடையில் நம்மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி, எமது இருப்பை உறுதி செய்வதற்காக நாம் செயற்படுவோம்.

**கே:** கடந்த காலத் தேர்தலில் தேசிய கட்சியின் முன்னிலை பிரதிநிதித்துவமாகப் போட்டியிட்டீர்கள். ஆனால், தற்போது நிலைமை மாறியுள்ளதே? இதற்குக் காரணம்?

நான் எப்போதுமே என்னைத் தேசிய கட்சியின் பிரதிநிதித்துவப்படுத்திக் கூறியதில்லை. மக்களின் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் எனது கட்சிக் கூடாக அரசிடம் பிரதிநிதிப்படுத்துகிறேன். இதன் மூலம், மக்கள் எங்களை நடுநிலைவாதிகளாகப் பார்த்து அரசாங்கத்திடமிருந்து அபிலாசைகளை, தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாக எம்மைப் பார்க்கின்றனர். கட்சி சார்ந்து, தனி நபர் சார்ந்து வாய்ப்புகள் அமையப் போவதில்லை. மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்பவர்களுக்கு வெற்றி வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.

**கே:** விவசாயிகள் மீதான உங்கள் பார்வை அதிகமாக இருந்தது. அவர்களுக்கான எதிர்கால மேம்படுத்தல் நடவடிக்கைகள் என்ன?

பிரதி விவசாய அமைச்சராக இருந்த காலகட்டத்தில் பல திட்டங்களைச் செயற்படுத்தி இருக்கிறேன். அதற்கு முன்னதாகவே விவசாயத்தின் மீதான எனது பங்களிப்பு, கணிசமாக அமைந்திருந்தது. வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 40 சதவீதமானவர்கள் விவசாயத்தையும் கடற்றொழிலையும் நம்பியுள்ளவர்கள். இந்த இரண்டு துறைகளையும் மேம்படுத்தும் போது, அது சார்ந்த குடும்பங்கள் வாழ்வாதார ரீதியில் முன்னேற்றம் அடைகின்றன. அவர்களின் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். இதனால், எமது பிரதேசம் மீண்டும் கல்வியில் உயர்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விவசாயத்தில் பெரும்புரட்சியை ஏற்படுத்தியது என்று கூறலாம். அதைத் தொடர்ந்து, மறுபடியும் ஒரு விவசாயப் புரட்சியை எமது பிரதேசத்தில் ஏற்படுத்த வேண்டும். விவசாயப் புரட்சி மட்டுமல்ல கடற்தொழில் புரட்சியையும் ஏற்படுத்த வேண்டும். பிரதி விவசாய அமைச்சராக இருந்த காலகட்டத்தில், இந்த ஐந்து மாத காலப்பகுதியில் பல திட்டங்களைச் செய்துள்ளேன். தொடர்ந்து ஐந்து வருடங்கள் இருந்தால், இத்திட்டங்களையெல்லாம் செம்மையாகவும் வினைத்திறனுடனும் செயற்படுத்த முடியும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 28 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

JULY 28, 2020
TUESDAY
VOL: 006/057
RS. 10.00
UPCOUNTRY ★★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk

# தமிழ் Mirror







## மத்திய அதிவேக வீதி அபிவிருத்திப் பணிகளை 'துரிதப்படுத்தவும்'



மத்திய அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2

அனைவருக்கும் தொழில்வாய்ப்பை வழங்க

# மலையகத்துக்கு புதிய திட்டம்



**மலையக இளைஞர் – யுவதிகளுக்காக, வருடத்துக்கு தலா 2 கைத்தொழிற்சாலைகள் நிர்மாணிப்பு**

பெருந்தோட்டப் பகுதிகளில் வேலைவாய்ப்பின்றியிருக்கும் இளைஞர் - யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக, மலையகப் பகுதிகளில், வருடமொன்றுக்கு இரண்டு கைத்தொழிற்சாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட வேட்பாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். தொடர்ச்சி P2






## எட்டுக் கடைகள் உடைப்பு; ஒரு கடையில் கொள்ளை

மஸ்கெலியா நகரிலுள்ள எட்டு வர்த்தக நிலையங்கள், நேற்று (27) அதிகாலை 1 மணியளவில் உடைக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றில் ஒரு வர்த்தக நிலையத்தில் மட்டும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2

## ஐ.தே.கவின் தலைவராக 'ரணில் 2023வரை நீடிப்பார்'



எஸ்.கணேசன்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2023 வரை நீடிப்பார் என்றும் அதற்கு முன்னர் மாற்றம் வேண்டுமெனில், கட்சி சம்மேளனத்தைக்கூட்டி கட்சி யாப்பின் பிரகாரமே மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும், ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். தொடர்ச்சி P2












PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘துரிதப்படுத்தவும்’

நட்டஈடு வழங்கும் பணிகளில் காணப்படும் நெருக்கடிகள் காரணமாக, குருநாகல் வரையான வீதிக்கட்டமைப்பை நிர்மாணிக்கும் பணிகளில் தடை ஏற்பட்டுள்ளதெனவும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு உடனடியாக வீதி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்குமாறும், ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

**சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கு தவனைக் கட்டணங்களை செலுத்துவதற்காக ஆறு மாத சலுகைக் காலம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம்**

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரசார கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக குருநாகல் மாவட்டத்துக்கு சென்றிருந்த ஜனாதிபதி, அங்கு மாவத்துகம பகுதியை மேற்பார்வை செய்த பின்னரே, இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கு தவனைக் கட்டணங்களை செலுத்துவதற்காக ஆறு மாத சலுகைக் காலம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.



# மலையகத்துக்கு புதிய திட்டம்

இதன்மூலம், ஒரு கைத்தொழிற்சாலைக்கு 25 ஆயிரம் பேர் உள்ளீர்க்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் அதற்கான அனுமதியை, தற்போதைய அரசாங்கம் வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறிய அவர், பெருந்தோட்டப் பகுதிகளில் உரிய வேலைவாய்ப்பு இன்மை காரணமாக, மலையக இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புகளைப் பெற்று, கொழும்பு போன்ற புறநகர்ப் பிரதேசங்களுக்குச் சென்று, சொல்லொனாத் துயரங்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலைமையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கவே, இந்தத் கைத்தொழிற்சாலைகள் நிறுவப்பட ஏற்பாடாகியுள்ளன” என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில், பிரபல வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, இணக்கப்பாடும் காணப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள அனைவருக்கும் அரசாங்கத் தொழில் வழங்க முடியாது. ஆதலால் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் தேவை உணர்ந்து, மாகாணத்தில் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்த நிலையிலேயே, அவ்வாறான தொழிற்சாலைகளை உருவாக்க, அரசாங்கம் இணங்கியுள்ளதெனவும் அவர் கூறினார்.

“உரிய பாதுகாப்பின்மை, தொழில் உரிமைகள் மீறப்படுகின்றமை, உணவு - தங்குமிட வசதியின்மை, வன்முறைக்கு உள்ளாகின்றமை, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இன்மை போன்ற பல துன்பங்களுக்கு, எமது மலையக இளைஞர், யுவதிகள் முகங்கொடுக்கின்றனர்” என்று தெரிவித்த செந்தில் தொண்டமான், இவற்றைக் கருத்திற்கொண்டே, கைத்தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

அதேபோல், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத்திரமே இதுவரை காலமும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. அதனை மாற்றியமைத்து, மலையகத்தில் வாக்காளர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைவருக்கும் வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# ‘ரணில் 2023 வரை நீடிப்பார்’

**ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2023 வரை நீடிப்பார். அதற்கு முன்னர் மாற்றம் வேண்டுமெனில், கட்சி சம்மேளனத்தைக்கூட்டி கட்சி யாப்பின் பிரகாரமே மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்**

ஐ.தே.கவின் தலைமைப்பதவியை ஏற்பதற்கு தயாரென, நவீன் திஸாநாயக்க விடுத்திருந்த அறிவிப்புத் தொடர்பில் வஜீர அபேவர்தன கடும் ஆட்சேபனையை வெளியிட்டிருந்தார். இந்நிலையில், நுவரெலியாவில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, இவ்விடயம் தொடர்பில், நவீனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த நவீன் திஸாநாயக்க, “வஜீர அபேவர்தன எனக்கு எதிராகக் கடுமையான முறையில் விமர்சனங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. தனது கருத்தையே அவர் வெளியிட்டிருந்தார். கருத்து வெளியிடும் சுதந்திரம் அனைவருக்கும் உள்ளது. இதுதான் ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள ஜனநாயகப் பண்பாகும்” என்றார்.

“அந்த அடிப்படையிலேயே தலைமைத்துவம் தொடர்பில் நான் கருத்து வெளியிட்டிருந்தேன். அதே உரிமை வஜீர போன்றவர்களுக்கும் இருக்கின்றது.

“அத்துடன், பெரும்பான்மையானோரின் விருப்பத்துடன் ஜனநாயக முறைப்படியே தலைமைத்துவத் தேர்வு இடம்பெற வேண்டும் என்ற விடயத்தையும் நான் குறிப்பிட்டிருந்தேன். எனவே, ரணில் விக்கிரமசிங்க விலகும்போது, இரகசிய வாக்கெடுப்புமூலம் தலைவரைத் தெரிவுசெய்வதே ஏற்புடைய நடவடிக்கையாக அமையும். இதன்போது வஜிரவாலும் போட்டியிடமுடியும்.

“2023ஆம் ஆண்டுவரை, தலைமைப்பதவியில் இருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு, 2019இல் கூடிய எமது கட்சி சம்மேளனம் அனுமதி வழங்கியுள்ளது. அதில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் சம்மேளனத்தை மீண்டும் கூட்ட வேண்டும். சஜித்தையும் பொறுமைக் காக்குமாறு கோரினோம். ஆனால், அவர் சூழ்ச்சியில் சிக்கிவிட்டார்” என்றார்.





# மீண்டும் ஆரம்பம்...

■ எஸ்.கணேசன்

கொவிட்–19 வைரஸ் பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில், தரம் 11,12,13 மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள், நேற்று (27) ஆரம்பமாகின. இதற்கமைவாக, மேற்படி வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்.

# எட்டுக் கடைகள் உடைப்பு; ஒரு கடையில் கொள்ளை

ஒரு வர்த்தக நிலையத்தில், மீள்நிரப்பு அட்டைகளே திருடப்பட்டுள்ளன என்று, பாதிக்கப்பட்ட வர்த்தகர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

முகமூடி அணிந்திருந்த நபரொருவரே, இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் என்றும் மஸ்கெலியா நகரிலுள்ள முஸ்லிம் பள்ளிவாயலில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவியில், மேற்படி நபர் நடமாடித் திரியும் காட்சிகள் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## எசல பெரஹெரவின் பாதுகாப்புக்கு

# 3,000 பொலிஸார் கடமையில்

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹெரவின் பாதுகாப்புக்காக, 3,000 பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று, மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஞ்ஜீவ தர்மரத்ன தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (27) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர், வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த எசல பெரஹெர, இம்முறை கொவிட் 19 வைரஸ் தாக்கம் காரணமாக பார்வையாளர்கள் இல்லாமல் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை எசல பெரஹெரவைப் பார்வையிடுவதற்கு, பக்தர்கள் கண்டி நகருக்கு சமுகமளிக்காமல் வீடுகளில் இருந்து தொலைக்காட்சிமூலம் அதனை கண்டுகளிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இருந்தபோதும் கண்டி எசல பெரஹெர, வழமைபோன்று அனைத்து சம்பிரதாயங்களும் கடைப்பிடித்து நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரஹெர இடம்பெறும் காலங்களில், கண்டி நகரில் விசேட போக்குவரத்துத் திட்டம் ஒன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த பிரதிபொலிஸ் மா அதிபர் டீ.ஆர்.எல்.ரணவீர, கண்டி நகரில் பெரஹெர செல்லும் அனைத்து வீதிகளும், மாலை 3.00 மணி முதல் மூடப்படுவாகவும் பெரஹெர செல்லும் வீதிகளுடன் தொடர்புபடும் ஏனைய வீதிகள் மாலை ஆறு மணி முதல் மூடப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, கண்டி நகருக்கு வராமல் கொழும்பு மாத்தளை, குருநாகல் ஆகிய நகரங்களுக்குச் செல்பவர்கள் பிரத்தியேக வீதிகளைப் பயன்படுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# கடும் மழை; விசேட அறிவிப்பு

மத்திய, சப்ரகமுவ, மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும், இன்றும் (28) நாளையும் கடும் மழை பெய்யக்கூடும் என்று, வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேற்படி நிலையம், நேற்று (27) விடுத்த விசேட அறிவிப்பில், நாட்டில் குறிப்பாக தென்மேற்கு பகுதியில், இன்றும் (28) நாளையும் (29) அதிக மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக, திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதிகளில், 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கக்கூடும் என்றும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஐ.ம.ச ஆதரவாளர்களின் தாக்குதலில்

# இருவர் காயமடைந்துள்ளனர்

■ ரவீந்திரவிராஜ் அபேசிறி

ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று, மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்

மாத்தளை- உக்குவளை, எல்வல பிரதேசத்திலுள்ள விடுதியொன்றில், நேற்று முன்தினம் (26) இரவு, இம்மோதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் விடுதி முற்றாகச் சேதமடைந்துள்ளதாக, மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுடன் தொடர்புடைய நபரை, விடுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவியின் உதவியுடன் கைதுசெய்துள்ள பொலிஸார், மேலும் மூவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.



# 'வேண்டாம் என்று கூறுபவர்களுக்கு வாக்களிப்பது நியாயமா?'

சமூக அக்கறையோடும் தமிழ் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் உறுதியுடனும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பதுளை மாவட்ட மக்கள், சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பதுளை மடுல்சீமைப் பகுதியில், நேற்று முன்தினம் (26) மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், "குறைந்தளவு வாக்காளர்களை வைத்துக்கொண்டு பதுளையில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதைவிட, வெல்லக்கூடியவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்று சிலர் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றனர்.



**இன்று அரசாங்கம் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒதுக்கி அவர்களின் வாக்குகள் தேவை இல்லை என கூறுகின்றது. அப்படியானால் வேண்டாம் எனக் கூறுபவர்களுக்கு வாக்களிப்பது நியாயமாகுமா? நாட்டில் அப்பட்டமான இனவாதம் இடம்பெறுகின்றது**

"எனவே தொழிற்சங்க பேதங்களையும் அரசியல் பேதங்களையும் மறந்து வாக்களிக்க வேண்டும். நான் சுயநலத்துடன் செயற்பட்டது கிடையாது. இன்று அரசாங்கம் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒதுக்கி அவர்களின் வாக்குகள் தேவை இல்லை எனக் கூறுகின்றது. அப்படியானால் வேண்டாம் எனக் கூறுபவர்களுக்கு வாக்களிப்பது நியாயமாகுமா? நாட்டில் அப்பட்டமான இனவாதம் இடம்பெறுகின்றது" என்று அவர் மேலும் கூறினார்.

# 'அபிவிருத்தியை நோக்கி நகர்வோம்'

ரா.கமல்

"அடிமை அரசியலில் இருந்து அபிவிருத்தியை நோக்கி நகர்வோம். நமக்காக நம்மில் ஒருவரைத் தெரிவுசெய்வோம்" என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.

"நாம் காலா காலமாக எமது பொன்னான வாக்குகளை, இதுவரை பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு வழங்கி எமது உரிமைகளை இழந்து வந்திருக்கின்றோம். அதனால் எமக்கான தேவைகள் அவர்களுக்குப் பெரிதாகத் தென்படவில்லை. எனவே, அடிமை அரசியலில் இருந்து விடுபட்டு இனியாவது அபிவிருத்தியை நோக்கி நகரவேண்டும். அதற்கு நம்மிலிருந்து நமக்காக ஒருவரை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும்" என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.

"கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி எமது தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர்,

"ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனுக்கே இன்னொரு தோட்டத் தொழிலாளியின் வாழ்கையைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். எமது தோட்ட மக்கள் சொல்லனா துயரங்களை அனுபவிக்கின்றனர். கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி உட்பட உட்கட்டமைப்பு வசதிகளில் பின்னடைந்திருக்கின்றோம். அதனால் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே இன்று நான் அரசியலுக்குள் வந்திருக்கின்றேன்.

"நான் ஒரு பட்டதாரி ஆசிரியர். ஆனாலும் அரசியல் அங்கிகாரம் என்ற ஒன்று அமைந்தால் மாத்திரமே, எமது உரிமைகளையும் சலுகைகளையும் எமது மக்களுக்கான தேவைகளையும் என்னால் முறையாகப் பெற்றுக்கொடுக்க முடியும்" என்றார்.



ஐக்கிய மக்கள் சகத்தி அரசாங்கத்தில்

# 'பதுளைக்குப் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள்'

பாலித ஆரியவன்ஸ

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில், பதுளை மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்த, அக்கட்சியின் பதுளை மாவட்ட வேட்பாளர் மைத்திரி குணரத்ன, சஜித்தின் அரசாங்கம் அமையும்வரை எமது நாட்டில் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு விடிவு காலம் ஏற்படாதெனவும் தெரிவித்தார்.



எல்ல பிரதேசத்தில், நேற்று முன்தினம் (26) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், தான் ஆளுநராகப் பதவி வகித்த காலத்தில் மத்திய மாகாணம், ஊவாவில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததாகத் தெரிவித்தார்.

இதன்கீழ் 35 வருடங்கள் தீர்க்கப்படாத கழிவுப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் அமையவுள்ள எமது அரசாங்கத்தின் கீழ், பதுளையில் பல மாற்றங்களை முன்னெடுப்பதே தனது நோக்கம் என்றார். விசேடமாக பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்துக்காகப் பாதுகாப்பான திட்டங்களை ஏற்படுத்துவது அவசியம் என்றார். பதுளை மாவட்ட பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தாம் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாகவும் அவர்களது வீட்டுப் பிரச்சினைகள் இதுவரை தீர்த்து வைக்கப்படவில்லை என்றும் அவர்களின் கல்விப் பிரச்சினை, வேலைவாய்ப்புப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது அவசியமாகும் என்றார்.

சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்க

# சுயேச்சை குழுவினர் முயல்வு

எம்.செல்வராஜா

பதுளை மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம், பிரதிநிதித்துவங்களை இல்லாமல் செய்வதற்கு, பேரினவாதிகள் மேற்கொள்ளும் பிரயத்தனங்களைவிட இனவாதிகள் காட்டும் ஆர்வத்தைவிட சிறுபான்மையினரைக் கொண்ட சுயேச்சைக் குழுவினரே கங்கணம் கட்டி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் இதனை எமது உறவுகள் உணர்வதுடன், அக் குழுக்களுக்கு தகுந்த பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றும், ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

**முறையான கொள்கைகளற்ற பல சுயேச்சைக் குழுக்கள், வேட்பாளர்கள் எனும் வடிவில், பதுளை மாவட்டத்துக்குள் தங்களது பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்**

ஹப்புத்தளை, கஹகொல்லை பெருந்தோட்டத்தில், நேற்று முன்தினம் (26) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், "பதுளை மக்களின் சிறுபான்மை வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவும் பதுளை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தை அழிப்பதற்குமான சதித்திட்டங்களே, இந்த சுயேச்சைக் குழுக்களின் ஊடுருவல். முறையான கொள்கைகளற்ற பல சுயேச்சைக் குழுக்கள், வேட்பாளர்கள் எனும் வடிவில், பதுளை மாவட்டத்துக்குள் தங்களது பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

"இவர்களின் இந்தச் செயற்பாடுகள், சிறுபான்மை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் எண்ணக்கருவிலே முன்னெடுக்கப்படுகின்றனவென்பது நிதர்சனமான உண்மையாகும். மலையக மக்களின் அபிவிருத்திக்கும் நலனுக்கும் பாடுபடுபவர்களாயின் 20 வருட காலமாக மலையக மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த அனுபவமிக்க அரசியல்வாதியான என்னோடு கைகோர்த்துச் செயற்பட எத்தணித்திருக்க வேண்டும். அதைவிடுத்து, சில பேரினவாதிகளின் கைக்கூலிகளாகவும் அற்பச் சலுகைகளுக்காகவும் எமது சிறுபான்மை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் இந்தச் செயற்பாடானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்" என்றார்.



வாய்ப்புகளை வழங்காமல்

# 'விமர்சிப்பதில் அர்த்தமில்லை'

வாய்ப்புகளை வழங்காமல் எவரையும் விமர்சிப்பதில் அர்த்தமில்லை என்று, பதுளை மாவட்டத்தில், சுயேச்சை குழு 2இல் போட்டியிடும் சட்டத்தரணி மா.சிறில்ராஜ் தெரிவித்தார்.

நயபெத்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

"இளைஞர்கள் அனுபவமில்லாதவர்கள், புதியவர்கள் ஆளுமையற்றவர்கள், பக்குவமற்றவிதமாகப் பேசக் கூடியவர்கள் என்றெல்லாம் விமர்சனங்கள் எழுகின்றன. இவற்றையெல்லாம் கண்டுகொள்ளத் தேவையில்லை, வாய்ப்புகளை வழங்காமல் எவரையும் விமர்சிப்பதில் அர்த்தமில்லை என்ற பதிலை அவர்களுக்கு வழங்குங்கள்.

"மக்கள் நலனில் அக்கறை இல்லாமல் சுயநலமாகச் செயற்படும் ஒவ்வோர் அரசியல்வாதியும் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நினைவில் கொள்வோம். அதற்கு இதுவே சிறந்த தருணம். "சாதிகள், மதங்கள் என நாட்டில் சில சக்திகள் மக்களைப் பிரித்துக்கொண்டு இருக்கின்றன. அதேசக்திகள், எம்மை கூலிச் சமூகமாகப் பிரித்துக் கொண்டு இருக்கிறார்கள். பேதங்களைப் பேசி நம்மை அணுகுவோருக்கு எதிராக வாக்களிப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்கும்

# 'முஸ்லிம்கள் ஏமாற மாட்டார்கள்'

"முஸ்லிம் மக்கள், ரவூப் ஹக்கீமிடமோ, ரிஷாட்டிடமோ அல்லது வேறு முஸ்லிம் தலைமைகளிடமோ இனிமேலும் ஏமாற மாட்டார்கள். முஸ்லிம் மக்கள் தற்போது சிறந்த மாற்றமொன்றையே விரும்புகின்றார்கள். சிறந்த தலைமைத்துவம் ஒன்றே அவர்களின் எதிர்பார்ப்பாகும்" என்று, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட வேட்பாளர் ஏ.எல்.எம். பாரிஸ் தெரிவித்தார்.

கம்பளையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர்,

"ஜனாதிபதி கோட்டாவின் ஆட்சியில், முஸ்லிம்கள் அச்சங்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கண்டி மாவட்டத்திலும் தற்போது அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன" என்று அவர் மேலும் தெரிவித்தார்.





பாதாள உலகக் கோஷ்டியினரை

# ‘அரசியல்வாதிகள், பொலிஸாரே பாதுகாக்கின்றனர்’



அரசியல்வாதிகளும் பொலிஸாரும், பாதாள உலகக் கோஷ்டியினரைப் பாதுகாப்பதாலேயே, அவர்களை ஒழிக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் பலவீனமாகி உள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பத்தரமுல்ல - நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

> **பாதாள உலகக் கோஷ்டியினரை, அரசியல்வாதிகளும் பொலிஸாரும் பாதுகாப்பதாலேயே, அவர்களை ஒழிக்க முடியாதுள்ளது. பிரதானமாக, நாட்டின் சட்டத்துறையை ஸ்தீரத்தன்மை மிக்கதாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன**

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் ஏற்பட்டிருக்கும் பலவீனங்களாலேயே, பொலிஸாரால் போதைப்பொருள் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

பாதாள உலகக் கோஷ்டினர் நாட்டில் தோன்றுவது, சாதாரணமானதொன்றெனத் தெரிவித்த அவர், அவர்கள் 3 அல்லது 6 மாதங்கள் தொடர்ந்துச் செயற்படுவதாக இருந்தால், அவர்களுக்கு அரசியல்வாதிகளினதோ அல்லது பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளினதோ ஒத்துழைப்பு கிடைக்க வேண்டுமெனவும் கூறினார்.

பாதாள உலகக் கோஷ்டியினரை, அரசியல்வாதிகளும் பொலிஸாரும் பாதுகாப்பதாலேயே, அவர்களை ஒழிக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்த அவர், பிரதானமாக, நாட்டின் சட்டத்துறையை ஸ்தீரத்தன்மை மிக்கதாக்க வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பூஸா சிறைக்கைதிகளுடன்

## 15 அதிகாரிகளுக்குத் தொடர்பு?

### புலனாய்வுப் பிரிவினர் தகவல் திரட்டியுள்ளனர்



பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடையோருடன் நெருங்கியப் பழகியதாகக் கூறப்படும் சந்தேகநபர்களான 15 அதிகாரிகள் குறித்து, புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டியுள்ளனரென, சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிசிடிவி கமெராவை மூலமாகக் கொண்டு, புலனாய்வுப் பிரிவினர் மேற்படி அதிகாரிகள் குறித்த தகவல்களைத் திரட்டியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 15 அதிகாரிகளிடையே, ஜெய்லர்களும் சிறைக்காவலர்கள் சிலரும் அடங்குவதாக அறியமுடிகிறது. அத்துடன், இதற்கு முன்னர் மேற்படி சம்பவம் தொடர்பில் இனங்காணப்பட்ட சிறைக் காவலர்கள் தொடர்பான அறிக்கை, சிறைச்சாலைகள் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேற்படி 15 பேர் குறித்தும் அறிக்கை கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் செயற்படும் பாதாள உலகக் கோஷ்டியினர், போதைப்பொருள் வர்த்தகர்கள் 131 பேர், பூஸா சிறைச்சாலையில் விசேட சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காலி சிறைச்சாலையில்

## 200 கைதிகளுக்கு பிசிஆர் பரிசோதனை



காலி சிறைச்சாலையில் இருந்து சேனபுர தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு கைதிகளில் ஒருவர், கொரோனோ தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டுள்ளதால், காலி சிறைச்சாலையிலுள்ள 200 கைதிகள் மற்றும் 20 அதிகாரிகளுக்கு, நேற்று (27), பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, காலி மாவட்ட சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்ட மேற்படி கைதி, அண்மையில் வெலிக்கடையில் இனங்காணப்பட்ட தொற்றாளருடன் தொடர்புகளைப் பேணியவரெனவும் அவர், காலி சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் சேனபுர தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு 18 தினங்களின் பின்னர், மூன்றாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனை மூலமே, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, காலி சிறைச்சாலையில் உள்ள கைதிகள் மற்றும் அதிகாரிகள் இவ்வாறு பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

CIDஇல் ரவி;

## 5 மணிநேர வாக்குமூலம்



இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில், நேற்று (27) காலை 9.30 மணிக்கு ஆஜராகினார்.

சுமார் 5 மணிநேரமாக அவர் வாக்குமூலம் வழங்கிய பின்னர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

இதற்கு முன்னரும், இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, ரவி கருணாநாயக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ‘சம்பந்தனின் கருத்தை நம்ப முடியாது’



அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கும் கருத்தை நம்ப முடியாதென, ஆளுங்கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், பல வருடங்களாக சம்பந்தனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் வாக்களித்த மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்ன என்பதை, அனைவரும் சிந்திக்க வேண்டுமெனவும் நல்லாட்சி காலத்தில், மக்கள் சார்ந்து செயற்படாத எதிர்க்கட்சியாகவே கூட்டமைப்பு இருந்ததெனவும் கூறினார்.

கடந்த 40, 50 வருடங்களாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன, மதவாதங்களை மக்கள் மத்தியில் தூண்டியே ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றிபெற்றதாகத் தெரிவித்த சுசந்த புஞ்சிநிலமே, இம்முறை அது நடக்குமா என்பது கேள்விக்குறியாகுமெனவும் கூறினார்.

## ‘மின்சார வசதி அற்றோருக்கு சூரிய சக்தி மின் கருவிகள்’



இலங்கையில் மின்சார இணைப்பு இல்லாத வீடுகளுக்காக, பொதுத் தேர்தலின் பின்னர் இலவசமாக சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பிறப்பிக்கக்கூடிய மின் கருவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, போக்குவரத்துச் சேவைகள் மற்றும் மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் மின்சார இணைப்பின்றி, 12,500 குடும்பங்கள் உள்ளன என்றும் இக்குடும்பங்கள், மின் இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக உள்ளபடியால், அவர்களுக்கு இலவசமாக சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பிறப்பிக்கக்கூடிய மின் கருவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களை

## அழைத்துவருமாறு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது

வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்கள், கொரோனா வைரஸ் பரவலால் பாதிப்படைந்துள்ள நிலையில், அவர்களை நாட்டுக்கு அழைத்துவர, அரசாங்கத்துக்கு உத்தரவிடக் கோரி, உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணியாகச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்குவால், இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



இந்த மனுவின் பிரதிவாதிகளாக, ஜனாதிபதி சார்பாக சட்ட மா அதிபர், சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, குடிவரவு, குடியகழ்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த மனு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள நாகானந்த கொடிதுவக்கு, கொரோனா வைரஸால் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளில் வாழும் அதிகளவான இலங்கையர்கள், பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸால், இதுவரையில் 42 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ள நாகானந்த கொடிதுவக்கு, எனவே வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு வழங்கப்பட்ட

## எண்ணெய்த் தாங்கிகளை மீளப்பெற நடவடிக்கை

திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகள் 25, வரி அடிப்படையில் இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

> **திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் கட்டமைப்பை அபிவிருத்திச் செய்யும் பணிகள், இந்தியன் ஒயில் நிறுவனத்தையே சார்ந்துள்ள போதும், அபிவிருத்திகளை மேற்கொள்வதில்லை**



இது தொடர்பில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டதில், சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் கட்டமைப்பை அபிவிருத்திச் செய்யும் பணிகளும், இந்தியன் ஒயில் நிறுவனத்தையே சார்ந்துள்ள போதும், அந்த நிறுவனம், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ‘உரிய பயிற்சியின்மையே விபத்துகளுக்குக் காரணம்’

சாரதி பயிற்சிப் பாடசாலைகளுக்கு முறையான கட்டுப்பாடுகள் இன்மையாலும் முறையாகப் பயிற்சிகள் இல்லாதவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதன் காரணமாகவே, வீதி விபத்துகள் அதிகரிப்பதாக, போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில், 538 சாரதி பயிற்சிப் பாடசாலைகள் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும் குறித்த பயிற்சிப் பாடசாலைகள் முறையான கட்டுப்பாடுகள் இன்றிச் செயற்படுவதாகவும் இதனால், உரிய முறையில் பயற்சிகள் பெறுவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரங்களை வழங்க குறித்த பயிற்சிப் பாடசாலைகள் நடவடிக்கை எடுப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, இந்தப் பயிற்சிப் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆலோசகர்களைத் தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு, தான் மோட்டார் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குறித்த திணைக்களத்தில் உள்ள விசாரணைப் பிரிவைப் பயன்படுத்தி, நாட்டிலுள்ள சகல சாரதி பயிற்சிப் பாடசாலைகளின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் விரிவான வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த எதிர்பார்ப்பதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை சாரதி பயிற்சிப் பாடசாலைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. அதில் பணிபுரியும் ஆலோசகர்களுக்கு போதியளவு பயிற்சி உள்ளதா என்பது தொடர்பில் ஆராயப்படவில்லை. தான் நினைப்பது போல், குறித்த பயிற்சிப் பாடசாலைகளில் உள்ள ஆலோசகர்கள் சிறந்த சாரதிகள், ஓய்வுப்பெற்றவர்களாக இருக்க முடியும். ஆனால், அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான திறன் இருக்க வேண்டும்.

எனவே, இந்த ஆலோசகர்களின் பயிற்சிக்காக வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம். மற்றொரு விடயம் தான் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு புள்ளிகள் வழங்குவதாகும். 2009ஆம் ஆண்டு இத்திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்தாலும் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. எனவே 24 தொடக்கம் 0 வரை சாரதிகளின் குற்றங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். இந்தப் புள்ளி 0ஆகக் குறையும் பட்சத்தில், உடனடியாகச் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். இது சிறந்த முறையாகும். எனவே, இந்த வேலைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளேன் என, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில், நாளுக்கு நாள் விபத்துகள் அதிகரித்துச் செல்கின்றன. அதிகமான விபத்துகள் சாரதியின் கவனயீனத்தால் இடம்பெறுகின்றன. இலங்கையில் முதற்றடவையாக, மேம்பாலமொன்றில் விபத்தொன்று கடந்த வாரம் பதிவாகியுள்ளது. மேம்பாலத்தில் வாகனங்களை முந்திச் செல்லத் தடை. ஆனால் இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி, வீதி சட்டத்திட்டங்களை மதிக்கவில்லை. இறுதியில் இளைஞரொருவரின் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பாடசாலைச் சேவை வாகனங்கள்;

## குத்தகை செலுத்த 6 மாத அவகாசம்

பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கான மாதாந்தக் குத்தகைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு, மேலும் 6 மாதகால அவகாசத்தை வழங்குவதற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைப் பஸ் சேவை வான் உரிமையாளர் சங்கத்தின் வேண்டுகோ ளுக்கு அமையவே,




இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘அடுப்படி சாம்பல் வாசத்தை உணர்ந்தவன்’

ஆ.ரமேஸ்

“போராட்டத்தின் ஊடாக, மலையக பெருந்தோட்ட மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்த, மலையக தன்னெழுச்சி இளைஞர்கள் அமைப்பிலுள்ள அங்கத்தவர்கள், இன்று தொழிலாளர்களின் பிள்ளைகளாக, அரசியல் ரீதியான உரிமைகளை வென்றெடுக்க, நாடாளுமன்றத் தேர்தலில் குதித்துள்ளனர். இதற்காக, மக்களின் ஆணையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்” என்று, நுவரெலியா மாவட்டத்தில், சுயேச்சைக் குழு 2இல் மாம்பழச் சின்னத்தின் கீழ் போட்டியிடும் திருமுடி ரகு தெரிவித்தார்.
தமிழ்மிரருக்கு அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரங்கள் வருமாறு:

**கே: அரசியலுக்குள் நுழையும் உங்களது அறிமுகம்?**

ரகு என்று கூறினால் என்னைப் பலரும் அறிவர். நுவரெலியா-லிந்துலையிலுள்ள மிளகுசேனை பெருந்தோட்டத்தையே நான் பூர்வீகமாகக் கொண்டுள்ளேன். எனது தாய், தந்தை மாத்திரமன்றி, நானும் ஒரு தோட்டத் தொழிலாளியாக இருந்து, படிப்படியாக முன்னேறி, இன்று வர்த்தகராக இருந்து வருகின்றேன்.

> **அரசியல் பலத்துடன் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தமையாலேயே, எந்தவோர் அரசியல் கட்சியின் தயவின்றி, சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளோம்**

**கே: உங்களது அரசியல் பிரவேசம், எங்கிருந்து ஆரம்பமானது?**

நான், பரம்பரை அரசியல்வாதி அல்லன். தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, அவர்களது உரிமைகளை வென்றெடுக்கும் பொருட்டு ஒரு போராட்டவாதியாகவே எனது அரசியல் பிரவேசம் அமைந்தது.

2018ஆம் ஆண்டு, 1,000 ரூபாய் விவகாரத்துக்கு அநீதி இழைக்கப்பட்ட நாள் முதல், எனது போராட்டம் தொடர்ந்து வருகின்றது. அந்தப் போராட்டம், கொழும்பில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மலையக இளைஞர், யுவதிகள் இணைந்து, தொழிலாளர்கள் சமூகத்துக்காக முன்னெடுத்தப் போராட்டமாகும். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால், ஆறு நாள்கள் உண்ணாவிரதம் இருந்தேன். அத்துடன், காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்தில் முக்கியப் புள்ளியாகச் செயற்பட்டேன். அதில், தன்னெழுச்சி இளைஞர் அமைப்பே, பாரிய பங்கு வகித்தது.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்தே, தமிழர்களின் குறிப்பாக மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க, அரசியல் எனும் சக்தியும் அதிகாரமும் வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு, இப்போது அரசியலில் கால் பதித்துள்ளேன்.

**கே: தங்களால் நடத்தப்பட்ட போராட்டத்தில் வெற்றி கண்டீர்களா?**

வெற்றி கிடைக்கும் என்றே போராடினோம். பல்வேறு தரப்பினர், அவர்களது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி, எங்களைப் புறந்தள்ளி, போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, எங்களை மிரட்டினர். போராட்டத்தின் உச்சக்கட்டத்தில், சிலர் உட்புகுந்து, கிடைக்கவேண்டிய உரிமையை இல்லாமல் செய்ய பலத்த முயற்சிகளை மேற்கொண்டனர்.

நாங்கள், காலத்தை எதிர்பார்த்திருந்தோம். அரசியல் பலத்துடன் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தமையாலேயே, தற்போது எந்தவோர் அரசியல் கட்சியின் தயவின்றி, சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளோம்.

> **தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதுமே எமது இலக்கு**

**கே: தேர்தலில் போட்டியிடுவதற்கு இது மட்டும்தான் காரணமா?**

எந்தவோர் உள்நோக்கத்துடனும் போட்டியிடவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதுமே எமது இலக்கு.

**கே: தொழிலாளர்களுக்கு எவ்வாறான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது என்று நினைக்கின்றீர்கள்?**

வாழ்வாதார உரிமைகள், பிள்ளைகளுடைய கல்வி உரிமைகள், தோட்டப் பகுதி இளைஞர்களின் தொழில் மற்றும் தொழில் வாய்ப்பு உரிமைகள், பெருந்தோட்டப் பொருளாதார மற்றும் அடிப்படை வசதிகளுக்கான உரிமைகள் உள்ளிட்ட முக்கியமாக காணி, வீட்டு உரிமைகள் என, அவர்களுக்கு இழக்கப்பட்ட உரிமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

**கே: பெருந்தோட்டத் தொழிலாளர்களை வழிநடத்தும் அரசியல் தலைமைகள், இம்மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவில்லையா?**

உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை என்று கூறவில்லை. முழுமையாகவும் முறையாகவும் பெற்றுக்கொடுக்கவில்லை என்றே கூறுகின்றேன். காலத்துக்குக் காலம், இம்மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். சரியான முறையில் பெறப்பட்டிருந்தால், நம்மைப் போன்றவர்கள் புதிதாக ஏன் தேர்தல் களத்தில் குதிக்கின்றனர்?

80 வருடங்களாக அரசியல், தொழிற்சங்கம் ஊடாக, தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றோம் என்று கூறுகிறார்கள். இந்த 80 வருடத்தில், ஒரு திட்டத்தை முழுமையாக நிறைவேற்றியிருந்தால், மலையகம் இன்று இருந்திருக்கும் நிலையே வேறு. இவர்கள் செய்யத் தவறியதால்தான், எங்களது அமைப்பும் தொடர்ந்து போராடி வருகின்றது. அரசியல் அங்கிகாரம் தேடி, தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது.

**கே: தன்னெழுச்சி இளைஞர்கள் அமைப்பில் இருந்து முக்கியமாக நீங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணம்?**

நான் தன்னெழுச்சி இளைஞர் அமைப்பின் மூத்தவன். எப்போதும் இளைஞர்களின் எழுச்சியை விரும்புகின்றவன். எம்மைப் போன்றவர்களுக்கே, தொழிலாளர்களின் அடுப்படி சாம்பல் வாசம் தெரியும். தோட்டத் தொழிலாளர்களின் அபிலாசைகள், இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் என்னவென்று, அவர்களுக்கு ஆதரவாக இருந்து அது பற்றி நன்கு தெரிந்து கொண்டவன்.

எனது சமூகத்தின் மீது எனக்கு கூடுதல் அக்கறை உள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு என்னென்ன உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பது பற்றி தோட்டத் தொழிலாளியின் மகனாக இருந்து தெரிந்துகொண்டவன். ஆகையால், வீதியில் இறங்கிப் போராடி, முடிவுக்காகக் காத்திருப்பதை விட, தொடரப்படும் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாக வெற்றியைப் பெறுவதற்காகவே நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

**கே: உங்களது சுயேச்சைக் குழு வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உண்டா?**

நிச்சயம் நாம் வெற்றிபெறுவோம். நாங்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள். தொழிலாளர் சமூகத்தின் உரிமைக்காக பல்வேறு வகையில் இன்றும் துணிந்து போராடிவரும், தொழிலாளர்களின் பிள்ளைகள் நாங்கள். பெருந்தோட்ட இளைஞர்களை உள்ளடக்கிய அமைப்பு, எமது வருகையை எதிர்பார்த்து, ஆதரவு வழங்கி வருகின்றது.

பெரும் கட்சிகளைப் போன்று, வசதிகளுடன் வீதியில் இருந்து ஆதரவு தேடாமல், வீடுகளுக்கே செல்கின்றோம். கொள்கைகளையும் உரிமைகளையும் விளக்கி வருகின்றோம். எம்மை, மக்கள் ஏற்றுக்கொண்டு மதிப்பளிக்கின்றனர். மக்கள் மாற்றத்தையே விரும்புகிறார்கள் என்பதால், இம்முறை தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் கட்சிகளை விட, இரண்டு ஆசனங்களையேனும் நுவரெலியா மாவட்டத்தில், தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவுடன் பெறும் வாய்ப்பு உள்ளது.

**கே: வெற்றிபெற்ற பின்னர், உங்களது முதல் பணி என்ன?**

தொழிலாளர்களுக்கான உரிமைகள் தொடர்பில், ஆளுந்தரப்பு அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதுதான் முதல் பணி. உரிமைகளை வென்றெடுக்க, நீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். மக்களின் நேரடி தலையீட்டால், ஒழிவு, மறைவின்றி பேரம் பேசும் சக்தியை உருவாக்கி, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம்.

**கே: தேர்தல் கடமைகளுக்கு யாரேனும் இடையூறு செய்ததுண்டா?**

நுவரெலியா மாவட்டத்தில், அநேகமாக பெருந்தோட்ட மக்களைக் குறிவைத்தே, பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாங்கள் புதுமுகம் என்பதால், சில பிரபல அரசியல் கட்சிகள், அவர்களது ஆதரவாளர்களைத் தூண்டிவிட்டு, சில தோட்டங்களில் பிரசாரங்களை செய்ய விடாது, விரட்டியடிக்க முயல்கின்றனர். எனினும் இதை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, இவ்வாறான தோட்டங்களில் மக்களின் வரவேற்புகள், சாதகமானதாகவே இருக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வோருக்கு எதிராக முறைப்பாடுகளை செய்து, காலத்தை வீணடிப்பதை விட, வாக்கு சேகரிக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றோம்.



**திருமுடி ரகு**
**நுவரெலியா மாவட்டம்**
**சுயேச்சை குழு (02)**
**மாம்பழச் சின்னம்**
**இலக்கம் 8**

# ‘10 ஆண்டு திட்டத்துடனேயே களமிறங்கினேன்’

ஆர். ரமேஸ்

“2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்புத் தருவதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூறியிருந்தது. எனினும் பின்னர் அந்த வாய்ப்புப் புறக்கணிக்கப்பட்டது. அதனால், இம்முறை தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியின் கீழ், நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கியுள்ளேன்” என, ஐக்கிய தேசிய கட்சி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் இலக்கம் 9இல் போட்டியிடும் சண்முகம் திருச்செல்வம் தெரிவித்தார்.

தமிழ்மிரருக்கு அவர் வழங்கிய செவ்வியின் முழுவிவரங்கள் வருமாறு:

**கே: அரசியலுக்கான உங்களது பிரவேசம் குறித்து கூறமுடியுமா?**

நுவரெலியா மாவட்டத்துக்கு உட்பட்ட கொத்மலை தேர்தல் தொகுதியின் வேவண்டன் தோட்டத்திலேயே நான் பிறந்தேன். எனது தாய் தோட்டத் தொழிலாளியாகவும் தந்தை ஒரு சாரதியாகவும் தொழில் புரிந்தவர்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்கு நான் புதிது என்றாலும் அரசியலுக்கு நான் புதியவன் அல்லன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தான், எனது அரசியல், தொழிற்சங்க அனுபவத்துக்குப் பாசறை. அங்கிருந்துதான், எனது அரசியல் பயணத்தை படிப்படியாக ஆரம்பித்துள்ளேன்.

**கே: அரசியலுக்குப் பழையவன் என்றால், அது பற்றிக் கூறுங்கள்?**

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானிடம், 1984ஆம் ஆண்டு சாதாரண சேவகனாகவே இணைந்தேன். பின்னர் அவரின் உதவியாளராகக் கடமையாற்றினேன். பின்னர் எனது திறமையால், ஐயா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயம், அமைச்சுக் காரியாலயம் ஆகியவற்றில் உயர் பதவிகளை எனக்கு வழங்கினார். பின்னர், அமரர் இராமநாதபுரம் தொண்டமானின் செயலாளராகப் பணியாற்றினேன். 1999ஆம் ஆண்டுக்குப் பின்னர், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பிரத்தியேக செயலாளராகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்கப் பிரிவிலும் உயர் பதவிகளையும் வகித்து வந்தேன்.

**கே: எத்தனை வருடங்களாக நீங்கள் இவ்வாறு பணியாற்றியுள்ளீர்கள்?**

சுமார் 25 வருடங்களாக அரசியல், தொழிற்சங்கத்தில் இருந்து வருகின்றேன். இக்காலப்பகுதியில், பல்வேறு நாடுகளுக்கு அரசியல், தொழிற்சங்கத் தலைமைத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள சென்றுள்ளேன். மக்கள் என்னை மதிக்கும் வகையில், மலையகத்துக்கு பல சேவைகளைச் செய்துள்ளேன்.

**கே: ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கான காரணம்?**

இன்றும் நான் காங்கிரஸ் மீது பற்றுள்ளவன். எனது அரசியல் பிரவேசத்துக்கு வித்திட்டது, காங்கிரஸும் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும்தான். அவருடை பாசறையில் அரசியல், தொழிற்சங்க அறிவு பெற்று, அதன்மூலம் சமூகத்துக்கு உரியவகையில் பணியாற்றி இடம்கிடைக்காமல் ஏமாற்ற மடைந்துள்ளேன்.

மலையக மக்களுக்கென, பத்தாண்டு திட்டமொன்றை அபிவிருத்திக்கென வகுத்துள்ள நான், அதைச் செயற்படுத்த அரசியல் அந்தஸ்த்து கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் இருந்தேன். 2015ஆம் ஆண்டு தேர்தலில், இ.தொ.கா சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் சந்தர்ப்பத்தை வழங்குவதாகக் கூறி, பின்னர் இறுதியாக கம்பஹாவில் போட்டியிடும் வாய்ப்பைத் தருவதாகக் கூறினர்.

எனினும், இது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்த பின்னர், எந்தவொரு முன்னெடுப்புகளும் இன்றி, காங்கிரஸில் இருந்து விலகி, என்னால் ஆன சேவைகளை மக்களுக்குச் செய்துவந்தேன். எனது கனவை நனவாக்க, நாட்டின் பலமான தேசிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சி, நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வாய்ப்பை எனக்குத் தந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி வெற்றிபெற்று, மலையக அபிவிருத்திக்கென வகுத்துள்ள திட்டங்களை நிறைவேற்றுவேன்.

**கே: உங்களது 10 ஆண்டு திட்டம் பற்றிக் கூறமுடியுமா?**

முக்கியமானதைக் கூறுகிறேன். மலையகக் கல்வியின் மூலமே மலையகத்தில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் என்பது, அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கனவு. இன்று, தோட்டப்புற பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலைகளாக்கி, 40 வருடங்கள் ஆனபோதிலும், அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் ஆளணிப்பற்றாக்குறைக்கு மத்தியிலேயே, பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இதனால், கல்வி நடவடிக்கைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. ஐயா கண்ட கனவு இன்னும் பூர்த்தியாகவில்லை. நான் காங்கிரஸில் இல்லாவிட்டாலும் அதை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன்.

அரசாங்கத் தொழிலில் ஈடுபடும் பல துறையினருக்கு இன்று சீருடையே காணப்படுகின்றது. அந்தச் சீருடைக்கென, மக்கள் மத்தியில் தனியான மதிப்பு உள்ளது. அதுபோல, மக்கள் மதிக்கும் வகையில், அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படல் வேண்டும். இதன்மூலம் ஆசிரியர்களின் ஆடைகளுக்கான செலவீனங்களைக் குறைக்க முடியும் என்பதோடு, மிகவும் குன்றிய பொருளாதாரத்தில் இருந்து அரசாங்க ஆசிரியராகக் கடமைபுரிய வரும் ஆசிரியர்களுக்கு இது மிகவும் உதவியாக அமையும்

ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பின்னர், நிம்மதியாக இருப்பதற்கு அவர்களுக்கு வீடுகள் இருப்பதில்லை. அந்தவகையில், ஆசிரியர்களுக்குக் காணி உரிமை பெற்றுக்கொடுக்கவேண்டும். ஆசிரியர்கள் மனநிறைவுடன் பாடசாலைக்குச் சென்றால்தான், மாணவர்களின் கல்வியும் சிறப்பாக அமையும்.

அடுத்து, தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழில் பிரச்சினையே காணப்படுகின்றது. அவர்களுக்கான பொருளாதார முன்னேற்றத்துக்கும் திட்டங்களை வகுத்துள்ளேன். இதில், பாதுகாப்பு உள்ளிட்ட நவீன தொழில் முறைகளுக்கும் உரிமைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

தோட்டப் பகுதி இளைஞர்கள், உள்ளூரில் சம்பாதித்து பொருளாதாரத்தை நடத்திச் செல்ல முடியாது என்பதால், வெளிமாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் வேலை தேடிச் செல்கின்றனர். இவ்வாறான இளைஞர்கள், உள்ளூரிலேயே வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் தொழில் முறைகளும் சுயதொழில் அபிவிருத்திகளையும் முன்னெடுக்க, திட்டங்களை வகுத்துள்ளேன்.

இதுபோன்ற பல திட்டத்துடனேயே தேர்தலில் களமிறங்கினேன். அதற்காக மக்களின் ஆணையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

**கே: இ.தொ.காவுக்கும் உங்களுக்கும் முரண்பாடுகள் உண்டா?**

நிச்சயமாக இல்லை. அவ்வாறு முரண்படவும் தேவையில்லை. எனது பாதையில் செல்ல, ஐக்கிய தேசிய கட்சி வாய்ப்பு வழங்கியுள்ளது. அந்தப் பயணத்தை சரியான முறையில் நான் தொடருவேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீது மரியாதையும் மதிப்பும் வைத்துள்ளேன். மக்கள் சேவையை தடையின்றி முன்னெடுப்பேன்.

**கே; உங்களது வெற்றிவாய்ப்பு குறித்து கூறங்கள்?நுவரெலியா மக்கள், எப்போதும் ஐக்கிய தேசிய கட்சி மீது நம்பிக்கை வைத்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில், 3க்கும் குறையாத ஆசனங்களை நாம் கைப்பற்றுவோம். அதில் நானும் நிச்சயமாக வெற்றிபெறுவேன். இம்மாவட்ட மக்கள், கடந்த கால அபிவிருத்தியை மனதில் நிறுத்தி, யானை சின்னத்துக்கு வாக்களிப்பார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு, நுவரெலியாவில் சரிவு இல்லை.**

> **ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பின்னர், அவர்களுக்கு வீடுகள் இருப்பதில்லை. அந்தவகையில், ஆசிரியர்களுக்குக் காணி உரிமை பெற்றுக்கொடுக்கவேண்டும். ஆசிரியர்கள் மனநிறைவுடன் பாடசாலைக்குச் சென்றால்தான், மாணவர்களின் கல்வியும் சிறப்பாக அமையும்**

> **எனது பாதையில் செல்ல, ஐக்கிய தேசிய கட்சி வாய்ப்பு வழங்கியுள்ளது. அந்தப் பயணத்தை சரியான முறையில் நான் தொடருவேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீது மரியாதையும் மதிப்பும் வைத்துள்ளேன்**



**சண்முகம் திருச்செல்வம்**
**நுவரெலியா மாவட்டம்**
**இலக்கம் 9**
**யானைச் சின்னம்**

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 28 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

JULY 28, 2020
TUESDAY
VOL: 006/057
RS. 10.00
LATE CITY★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror







### ரிஷாட்டிடம்
## 5 மணிநேரம் விசாரணை

■ க. அகரன்

கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்கவின் கட்டளைக்கு அமைவாக, வவுனியா - ஈரற்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள



தொடர்ச்சி P2

### படையினரைப் பாதுகாக்க
## ‘பலத்தை தாருங்கள்’

தமது நாட்டுப் படையினருக்கு எதிராக, சர்வதேச சக்திகளால் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவெனத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ,

தொடர்ச்சி P2

### 21/4 தாக்குதல்கள்;
# மைத்திரி, ரணில் உட்பட 14 பேருக்கு நோட்டீஸ்

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறுதினத்தன்று, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சாட்சியமளிக்க முன்னிலையாகுமாறு, முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 14 பேருக்கு,



தொடர்ச்சி P2

## ‘1997, 1917க்கு அழைக்கவும்’

■ மகேஸ்வரி விஜயனந்தன்

போதைப்பொருள் வர்த்தகம், பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் தொடர்பில், இரகசியத் தகவல்களை வழங்குவதற்காக பொலிஸ் தலைமையகம்,

தொடர்ச்சி P2

## ‘தலைமைத்துவம் சரியான நேரத்தில் தேர்வாகும்’

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக யார் நியமிக்கப்பட வேண்டும் என்பதை, சரியானதொரு நேரத்தில் கட்சியே தீர்மானிக்கும் என்று, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், சரியான நேரத்தில் தலைமை தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் இந்தத் தீர்மானம் எடுக்கப்படும் போது, ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த தீர்மானத்தில்

தொடர்ச்சி P2




### வடக்கு, கிழக்கு, தமிழ், முஸ்லிம் மக்களே
## ‘வட்டியில் சிக்கினர்’

■ மகேஸ்வரி விஜயனந்தன்

நிவாரண வட்டி வீதத்தின் கீழ் கடன் பெற்றுத் தருவதாக, இணையங்கள் ஊடாக மிகவும் சூட்சுமமான முறையில் பலரும் ஏமாற்றப்பட்டு ள்ளனரெனத் தெரிவித்த பிரதி



தொடர்ச்சி P2



## ‘நடமாடும் வாக்களிப்பு சாத்தியமில்லை’

கொரோனா வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நபர்கள் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், ஜூலை 31ஆம் திகதியன்று, நடமாடும் வாக்களிப்பு

தொடர்ச்சி P2












PAGE 1 தொடர்ச்சிகள்

## 5 மணிநேரம் விசாரணை

குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு, நேற்று (27) சென்றிருந்த ரிஷாட் பதியூதீனிடம், சுமார் 5 மணிநேரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று (27) காலை 10 மணிக்கு வருகைதந்த ரிஷாட் பதியூதீன், மாலை 3 மணியளவில் அங்கிருந்து வெளியேறினார். அவரிடம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலேயே வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

தனது தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் விசாரணைக்கு அழைப்புகள் விடுக்கப்படுகின்றன. தனக்கெதிரான விசாரணைகளை தேர்தல் நிறைவடையும் வரையிலும் இடைநிறுத்துமாறு, தேர்தல் ஆணைக்குழுவிடம், ரிஷாட் பதியூதீன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அது தொடர்பில், பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குத் தேர்தல் ஆணைக்குழு கொண்டுவந்திருந்தது. எனினும், நீதிமன்ற கட்டளையின் பிரகாரம், ரிஷாட்டுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும், ரிஷாட் பதியூதீன் சார்பில், ஜூலை 24ஆம் திகதியன்று கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, தன்னுடைய தரப்பைச் சேர்ந்தவர், இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஆவார். ஆகையால், வாக்குமூலங்களை அளிப்பதற்காக, தேர்தலுக்குப் பின்னர் பிறிதொரு திகதியை வழங்குமாறு கோரிநின்றார்.

இதையடுத்து, விசாரணைகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில், நீதிமன்றம் வழங்கியிருக்கும் கட்டளையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்க, அன்று (ஜூலை 24) கட்டளையை பிறப்பித்திருந்தார்.

அதனடிப்படையிலேயே, நேற்றையதினம் அழைக்கப்பட்டு, அவரிடம் 5 மணிநேரம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

## 'பலத்தைத் தாருங்கள்'

அந்தச் சக்திகளிடமிருந்து, படையினரைப் பாதுகாப்பதற்குத் தங்களுக்குப் பலத்தைத் தருமாறு கோரிநின்றார்.

தொடம்கஸ்லந்த - ரிதிகம, வாராந்த சந்தையில், நேற்று (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு கோரிநின்றார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், "யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், படையினருக்கு எதிராக, சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் அழுத்தங்களுக்குக் கடந்த அரசாங்கம் தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லையெனவும் ஆகையால், சர்வதேச சக்திகளின் சூழ்ச்சிகள் வளர்ச்சிக்கண்டுள்ளனவெனவும் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியிலிருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் அழுத்தம் கடுமையாக இருந்ததாகத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவ்வாறான சந்தர்ப்பங்களில், சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்தே, ஐ.தே.க அரசாங்கம், அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கியதெனவும் கூறினார்.

தங்களுயிர்களைத் துச்சமாக நினைத்து, உயிர்த்துறந்து, நாட்டை மீட்டெடுத்தமையால், இந்நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமையொன்று தப்போது ஏற்பட்டுள்ளதாகவும் தாங்கள் முன்வைத்திருந்த ஒவ்வோர் அடிகளும் பல அடிதூரத்துக்குப் பின்னால் வைக்கப்பட்டுள்ளனவெனவும், அவர் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும், போதைப்பொருள் வர்த்தகம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதெனத் தெரிவித்த அவர், "கடந்த அரசாங்கத்தின் பலவீனங்களால், பயங்கரவாதம் தலைதூக்கியது, பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் அதிகரித்தன" எனவும் கூறினார்.

## 'நடமாடும் வாக்களிப்பு...

அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போதைக்கு இல்லையெனவும் கூறினார்.

அந்த வாக்காளர்களுக்காக, தபால்மூல வாக்களிப்பு போன்ற வாக்களிப்பை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது எனத் தெரிவித்த அவர், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில், நேற்று (27) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, sமேற்கண்ட தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, "மக்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்ட பகுதிகளில், நடமாடும் வாக்குச் சாவடிகள் பயன்படுத்துவதற்கு ஆணைக்குழு இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்ற பின்னரே, நடமாடும் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் தேர்தல் செயலகப் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

"தனிமைப்படுத்தலில் இருக்கும்போது வாக்காளர்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்படும்" எனவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்போருக்கு, ஒகஸ்ட் 5ஆம் திகதியன்று மாலை 5 மணிமுதல் 5.30 வரையிலும் வாக்களிப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுப்பதற்கான விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என, ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

## 'தலைமைத்துவம் சரியான நேரத்தில் தேர்வாகும்'

இருக்க வேண்டும் என்பதே, தனது ஒரேயொரு நிபந்தனை என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளரும் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான நவீன் திஸாநாயக்க, சமீபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம், 26 வருடங்களாக மாற்றப்படாமல் உள்ளமையால், அதை மாற்றவேண்டிய தேவை உள்ளது என்றும் அந்த இடத்துக்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் தான் கொண்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மைத்திரி, ரணில் உட்பட 14 பேருக்கு நோட்டீஸ்

குறித்த தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்களான ஹேமசிறி பெர்னான்டோ, கபில வைத்தியரத்ன, கருணாரத்ன ஹெட்டியாரச்சி, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிற மெண்டிஸ் உள்ளிட்ட 14 பேருக்கே, இவ்வாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணையில், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான தற்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிலந்த ஜயவர்தன சாட்சியமளித்த பின்னரே, இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## நீதியரசர் விலகினார்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்யும் குழுவிலிருந்து, நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, தனது சுயவிருப்பத்தின் பேரில், நேற்று (27) விலகிக்கொண்டார்.

உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில், ஏதோவொரு காரணத்தை முன்வைத்து அல்லது வேறேதாவது பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி, போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, தன்னைக் கைதுசெய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எனவே, அதனை தடுத்து, இடைகால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரியே, ரிஷாட் பதியூதீன் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, அக்குழுவிலிருந்து விலகிக்கொண்டமையால், நீதியரசர்கள் அடங்கிய மற்றுமொரு குழாம் முன்னிலையில், அந்த மனுவை, ஒகஸ்ட் 7ஆம் திகதியன்று ஆராய்வதற்கு, உயர்நீதிமன்றம் நேற்று (27) தீர்மானித்தது.

இந்த அடிப்படை உரிமை மனு, எல்.டீ.பீ தெஹிதெனிய, யசந்த கோதாகொட, பிரியந்த ஜயவர்தன ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில், நேற்று (27) அழைக்கப்பட்டது.

இதன்போது, "தனிப்பட்ட காரணங்களுக்காக, இந்த நீதியரசர் குழாமிலிருந்து நான் விலகிக்கொள்கின்றேன்" என திறந்த நீதிமன்றத்துக்கு அறிவித்த நீதியசர் பிரியந்த ஜயவர்தன, பிறிதொரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், அந்த மனுவை ஆராயுமாறும் அறிவித்தார்.

இதையடுத்தே, அந்த மனு மீதான மேலதிக ஆராய்வுக்காக, விசாரணைகள் ஒகஸ்ட் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

## 'வட்டியில் சிக்கினர்'

பொலிஸ்மா அதிபரும் மக்கள் தொடர்பு, தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அதிகாரியுமான லால் செனவிரத்ன, இந்த மோசடியில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களே அதிகளவில் சிக்கிக்கொண்டுள்ளனர் என்றார்.

பொலிஸ் தலைமையகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், அவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட ஐவர், போலியான ஆவணங்கள், உபகரணங்களுடன் கொழும்பு-5, கிருலப்பனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனரென்றார்.

வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் ஊடாகவே, இவ்வாறான ஏமாற்று வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், சந்தேகநபர்களுடன், இந்த வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக, பயன்படுத்தப்பட்ட வான், மடிகணினிகள் - 11, லெமினெட் இயந்திரங்கள் - 2, வாகன அனுமதிப் பத்திரத்துக்கு முத்திரைக்காகக் பயன்படுத்தப்படும் - 925 அட்டைகள், இறப்பர் முத்திரைகள், போலியான வாகன அனுமதிப் பத்திரங்கள் - 61, சர்வதேச வாகன அனுமதிப்பத்திரங்கள் ஆகியன பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

கொரோனா வைரஸ் காரணமாக, 2.7 சதவீத நிவாரண வட்டி வீதத்தில், கடன் பெற்றுக்கொடுக்கப்படுமென, ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் கடித தலைப்பைப் பயன்படுத்தி, அதற்கான ஆவணங்களைத் தயாரித்து, பேஸ்புக் ஊடாக அவற்றைப் பதிவேற்றம் செய்தே, இவ்வாறான மோசடிகளில் மேற்படி நபர்கள் ஈடுபட்டுள்ளனர் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளதெனத் தெரிவித்த அவர், மேலதிக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றார்.

## '1997, 1917க்கு அழைக்கவும்'

1997, 1917 ஆகிய புதிய தொலைபேசி இலக்கங்கள் இரண்டை அறிமுகப்படுத்தியுள்ளதெனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனாரத்ன, இன்றிலிருந்து (28), பொதுமக்கள், இந்தப் புதிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, தகவல்களை வழங்க முடியுமெனவும் கூறினார். பொலிஸ் தலைமையகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், 1997 எனும் இலக்கத்தின் ஊடாக, விஷப் போதைப்பொருள் வர்த்தகம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்படல், பாதாளக்குழுக்களின் செயற்பாடு, பாரிய மோசடி, கப்பம் பெறுதல், மக்களின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துதல் போன்றவை தொடர்பான தகவல்களை வழங்க முடியுமென்றார்.

அதேபோல், 1917 என்ற இலக்கத்தின் ஊடாக, சட்டவிரோத சொத்து சேகரிப்பு, பாதாளக்குழுக்களின் உறுப்பினர்கள், சட்டவிரோத பணம் சேகரிப்பு என்பவை தொடர்பிலும் அறிவிக்க முடியுமெனவும், ஜாலிய கூறினார்.

இந்தத் தகவல்கள் குற்றப்புலனாய்வு விசாரணை திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பிரிவு மூலம் நிர்வகிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## 'அநுர, ஷானியை...

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஷானி அபேசேக, அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக்க பண்டார ஆகியோரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்து, விசாரணை நிறைவடையும் வரையிலும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் தேடியறிவதற்காக, நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைக்கமாட்டோமென, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது. மூவரினாலும் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட்- மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், நேற்று (27) ஆராயப்பட்டது. அதன்போதே, ஆணைக்குழு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

நெல் விலை வீழ்ச்சிக்கு

## 'அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயமே காரணம்'

அரிசிக்கான கட்டுப்பாடு விலையை நிர்ணயித்தமையே, நெல் விலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளதென, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் நேற்று (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், "இன்று நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன,



அரிசி ஆலை மாஃபியா என, கடந்த காலங்களில் ஒரு குழுவினர் சத்தம் போட்டனர். அவர்கள் யார் என்று நினைவிருக்கிறதா?" எனக் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு சத்தம் போட்டதால், அரசாங்கத்தால் அரசிக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க வேண்டியேற்பட்டது. அரசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்ததைத் தொடர்ந்து, நெல்லின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்கு, அரசி ஆலை மாஃபியாக்கள் என சத்தம் போட்டவர்களே பொறுப்புக்கூற வேண்டும்.

அரசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதால், நெல்லின் விலை வீழ்ச்சியடையும் இதுவே உண்மையான நிலை. இப்போது நாடு முழுவதும் அறுவடை நேரம். ஆனால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது" எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு

## '2023வரை ரணிலே தலைவர்: சூழ்ச்சியில் சிக்கினார் சஜித்'

■ எஸ்.கணேசன்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2023 வரை நீடிப்பார் என்றும் அதற்கு முன்னர் மாற்றம் வேண்டுமெனில், கட்சி சம்மேளனத்தைக்கூட்டி கட்சி யாப்பின் பிரகாரமே மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென, ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமைப்பதவியை ஏற்பதற்கு தயாரென, நவீன் திஸாநாயக்க விடுத்திருந்த அறிவிப்புத் தொடர்பில் வஜீர அபேவர்தன கடும் ஆட்சேபனையை வெளியிட்டிருந்தார். இந்நிலையில், நுவரெலியாவில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, இவ்விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த நவீன் திஸாநாயக்க, "வஜிர அபேவர்தன எனக்கு எதிராகக் கடுமையான முறையில் விமர்சனங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. தனது கருத்தையே அவர் வெளியிட்டிருந்தார். கருத்து வெளியிடும் சுதந்திரம் அனைவருக்கும் இருக்கின்றது என்றார். இதுதான் ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள ஜனநாயகப் பண்பாகும்" என்றார்.



ஜனாதிபதி கோட்டாபயவின் தலைமையில்;

# ‘தசாப்த ஆட்சி நடத்துவோம்’

‘நல்லாட்சி அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தங்கள், முன்னுக்குப் பின் முரணானவையெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்ச, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன், ஒரு தசாப்த ஆட்சியை நடத்துவோம்’ என்றார்.



கம்பஹா - பியகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், “நல்லாட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தமானது, ஜனாதிபதிக்கு காட்சட்டை இருக்கும்போது; அதற்குரிய மேலாடையை பிரதமருக்கு வழங்கியது போலாகும் என்றார்.

எனவே, திருத்தம் என்ற பெயரில் அரசமைப்பானது திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், இவ்வாறான நிலைமையை மாற்றியமைத்து, நாட்டைச் சகல துறைகளிலும் வலுவாக்கவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

மக்கள் ஆணையால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படும்போது, மத்திய வங்கியின் நிதிச் சபைக்கான உறுப்பினர்களைக்கூட அவரால் தெரிவுசெய்ய முடியாமல் இருப்பது வேடிக்கையானது. இவ்வாறு, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்துவிட்டு, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்க முயன்றனர் என்றார்.

இதேவேளை, ‘நாட்டில் சமஷ்டி முறை அமல்படுத்தப்பட்டிருந்தால், கொரோனா அச்சுறுத்தல் காலத்தில், நாட்டில் கொரோனா ஒழிப்பு முறைகள் வடக்கு, கிழக்கில் ஒரு முறையிலும் தெற்கில் வேறொரு முறையிலும் முன்னெடுக்கப்பட்டிருக்கும்’ என்றார்.

கொரோனா வைரஸ் காரணமாக, இலங்கையில் உயிழந்தோரின் சதவீதம் குறைவாகவே காணப்படுகிறது. பாலூட்டும் தாய்மார்களின் சதவீதம் அதிகம் என்பதால், பிள்ளைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி வலுவான நிலையில் உள்ளதெனத் தெரிவித்த அவர், வலுவான சமுதாயத்தைக் கொண்ட நாட்டை, வெளிநாட்டு பால்மா வகைகளைக் கொண்டு வலுவிழக்கச் செய்ய முயல்வதாகக் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான முயற்சிகளை முறியடித்து, நாட்டைப் பலப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் பலத்தை வழங்க வேண்டும் என்றார்.

மக்களுக்கு என்னவானாலும் பரவாயில்லை;

# ‘அரசாங்கத்துக்கு தேர்தலே தேவை’

## ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

இஸட். ஷாஜஹான்



‘மீண்டும் கொரோனா வைரஸ் தலைதூக்க ஆரம்பித்துள்ள நிலையில், அரசாங்கம் மூன்று தினங்களுக்கான தேர்தல் பிரசாங்களை நிறுத்தியதை மாத்திரமே செய்ததென, ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சாடினார்.

நீர்கொழும்பு - பெரியமுல்ல, ரஹ்மானாபாத் பிரதேசத்தில், நேற்று முன்தினம் (26) நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், மொட்டுக் கட்சியின் ஆதரவாளர்கள் மாத்திரம் காப்பாற்றப்பட்டால் போதும்; ஏனைய இரண்டு கோடியே 20 இலட்சம் மக்களுக்கு என்னவானாலும் பரவாயில்லை என்றே அரசாங்கம் கருதுகின்றது என்றார். “திருடர்களைப் பிடிப்பதற்காகவே புதிய அரசாங்கத்தை அமைத்தோம். ஆயினும், ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க, அர்ஜுன மஹேந்திரன் உள்ளிட்ட குழுவினர், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டனர். இதன்காரணமாக, தொடர்ச்சியாக நடைபெற்ற எல்லாத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்தது. இதற்கு, ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக் கூறவேண்டும்” என்றார். அத்துடன், நல்லாட்சி அரசாங்கத்தின் போது எமது ஆதரவாளர்களுக்கு நன்மைகள் கிடைக்கவில்லை. 17 இலட்சம் வாக்காளர்களைக்கொண்ட கம்பஹா மாவட்டத்தின் பெறுமதியை, ரணில் அறியவில்லை என்று கூறிய பொன்சேகா, கம்பஹா மாவட்டத்தை வெற்றிகொள்ளாமல், தேர்தலில் தேசிய வெற்றியை அடைய முடியாது என்றார்.

மீண்டும் கொரோனா தலைதூக்க ஆரம்பித்துள்ள நிலையில், படையினர், சுகாதாரத் துறையினர் ஆகியோர், கொரோனாவிலிருந்து மக்களைப் பாதுகாக்கக் கடுமையாக உழைக்கின்றனர். ஆயினும், அரசாங்கத்துக்கு தேர்தலே தேவையாகவுள்ளது என்றும் அவர் கூறினார்.

# ‘கொரோனா இரண்டாவது அலைக்கு சாத்தியமில்லை’



நாட்டில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்படுவதற்கான சாத்தியமில்லை எனத் தெரிவித்த தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய அதிகாரி சுதத் சமரவீர, எனினும், கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுடைய முதலாவது நோயாளி இனங்காணப்பட்டவுடன், அவருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவித்த அவர், அவர்கள் சுய தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவுடன், மீண்டும் அவர்களது வீடுகளில் மேலும் சில தினங்களுக்கு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டவுடன், தொற்றாளர்களை வைத்தியசாலையில் அனுமதித்து அவர்கள் முழுமையாகக் குணமடையும் வரை சிகிச்சையளித்து வருவதாகத் தெரிவித்த அவர், தொற்றாளர்களிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாடுகளில் இவ்வாறான முறை பின்பற்றப்படுவதில்லை எனத் தெரிவித்த அவர், நூற்றுக்கு நூறு சதவீதம் கொரோனா பரவல் முடிவுக்குக் கொண்டுவரப்படாமல், வெளிநாடுகளில் மக்கள் நடமாடுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதனாலேயே, கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பதாகவும் கூறினார்.

இராஜசபை மண்டபம் இடிப்பு;

# பொலிஸ் மா அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு



குருநாகலில் அமைந்துள்ள புவனேகபாஹு மன்னன் காலத்துக்குரிய இராஜசபை மண்டபம் இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில், வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கை, பதில் பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில், இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் பற்றிய விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், அந்த விவகாரம் தொடர்பான விசாரணைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கட்டடம் தகர்க்கப்பட்டமை தொடர்பில், குருநாகல் நகரசபைத் தவிசாளர் உள்ளிட்ட சுமார் 20 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன், மேலும் சிலரிடம் வாக்குமூலம் பெறுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து, எதிர்வரும் 30ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதுடன், நீதிமன்ற உத்தரவு காரணமாக, மேற்படி கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் தாமதமாகியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

# அராலி பிரச்சினைக்கு பிரதமரால் தீர்வு

யாழ்ப்பாணம்- அராலி, ஓடைக்கரைக்குளம் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நிதியை விடுவிக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். - வட்டுக்கோட்டை கமக்காரர் அமைப்பினர், பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே, அவரால் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஓடைக்கரைக்குளம் தடுப்புச் சுவர் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்குமாறு கோரி, பிரதமருக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. இதனைப் பரிசீலனை செய்த பிரதமர், மேற்படி பணிக்கான நிதியை விடுவிக்குமாறு, சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் கோரிக்கைக்கு அமைய, அராலி ஓடைக்கரை குளத்துக்குத் தடுப்புச் சுவர் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 6.705 மில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

தடுப்புச் சுவர் நிர்மாணப் பணிகளை, ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

‘நாடாளுமன்ற வித்தி’

# செய்திமடல் வெளியீடு



நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள், நடைமுறைகள், சம்பிரதாயங்கள் பற்றிய செய்திமடல் ஒன்று, நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று (27) வெளியிடப்பட்டது.

மேற்படி செய்தி மடலை, டிஜிட்டல் முறையில் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தலைமையில் நடைபெற்றதுடன், ‘நாடாளுமன்ற வித்தி’ என்ற பெயரில் இந்தச் செய்தி மடல் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாள் தொகுதியின் பிரதானியுமான நீல் இத்தவல கலந்துகொண்டார். நாடாளுமன்ற நூலகத்திலுள்ள 10 இலட்சத்து மூன்று ஆவணங்கள், டிஜிட்டல் முறையில் வடிவமைக்கப்பட்டு, மேற்படி மடலில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், நாடாளுமன்றக் குழுக்களின் கூட்டங்களை டிஜிட்டல் தொழில்நுட்பம் வாயிலாக நடத்துவதும் 8ஆவது நாடாளுமன்றத்தின் விசேட அமர்வுகள் பற்றிய குறிப்புகளும், இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், செங்கோலின் சிறப்புத்தன்மை, நாடாளுமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றும் முறைமை, ஹன்சாட் குறிப்புகள் பற்றிய தெரிவுகள் என்பனவும், மேற்படி செய்தி மடலில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஐ.தே.கவில் இணைவதற்கு எதிர்பார்க்க வேண்டாம்’



‘நாட்டில் இரண்டு ஐக்கிய தேசிய கட்சிகள் இல்லை என்று தெரிவித்துள்ள அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவுக்கு எதிராக வாக்களித்துவிட்டு, மீண்டும் ஐ.தே.கவில் இணைவதற்கு எதிர்பார்க்க வேண்டாமெனவும் தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில, நேற்று முன்தினம் (26) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், நாட்டில் ஒரேயொரு ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே இருப்பதாக, நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. ஐ.தே.கவுக்கு வாக்களிப்பதென்றால், எமக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் என்றார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரானவர்களே, எமக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க அல்லாத ஏனைய அரசியல் அணிகள் அனைத்தும், ஐ.தே.கவுக்கு எதிரானவை. எனவே, ஐ.தே.கவுக்கு எதிராக வாக்களித்துவிட்டு, மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் தெரிவித்தார்.



# அமீர் அலியுடன் இணைவு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.பதுர்தீன், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலியுடன் இணைந்துகொண்டார்.

வாழைச்சேனை - செம்மண்ணோடை பகுதியில், நேற்று முன்தினம் (26) இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்தே, பிரதேச சபை உறுப்பினர் அமீர் அலிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்துகொண்டார்.

இவர், கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக, சுயேச்சைக் குழுவில் மீராவோடை மேற்கு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானின் விளக்கமறியல் ஒக்டோபர் 19 வரை நீடிப்பு

■ வா.கிருஸ்ணா, ரீ.எல்.ஜவ்பர்கான்

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) விளக்கமறியல், தொடர்ந்தும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில், பிள்ளையான் உள்ளிட்ட சந்தேகநபர்கள், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று (27) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி வரையில் இவ்வழக்கை ஒத்திவைப்பதாக, நீதிபதி அறிவித்தார்.

2005.12.25 திகதியன்று, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக, பிள்ளையான் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிவநேசதுரை சந்திரகாந்தன், ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் படகுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் வேட்பாளரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இணையத்தில் பண மோசடி; ஐவர் கைது

இணையத்தின் ஊடாக, வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்களுக்குச் சலுகை வட்டி வீதத்தின் ஊடாகக் கடன் வழங்குவதாகக் கூறிப் பண மோசடியில் ஈடுபட்ட 5 பேர், கிருலப்பனை பொலிஸாரால், நேற்று (27) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிட்டபத்தர, நாரஹேன்பிட்டி, வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30, 39, 38, 46 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடன் வழங்குவது தொடர்பில், வெளிநாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு தொலைபேசியூடாக அறிவித்து, அவர்களுடைய வங்கி விவரங்களைப் பெற்று, அதனூடாக ஒருவரின் கணக்கில் இருந்து 5 இலட்சம் ரூபாய் வீதம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய வங்கிக் கணக்கில் இருந்து பணம் மோசடி செய்யப்பட்டதாக, பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே, குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

> **சந்தேகநபர்களிடம் இருந்து மடிகணினி, வங்கி அட்டைகள், லெமினேட் இயந்திரம், போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 61, சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 5 என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன**

இதன்போது, சந்தேகநபர்களிடம் இருந்து மடிகணினி, வங்கி அட்டைகள், லெமினேட் இயந்திரம், போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 61, சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 5 என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், சந்தேகநபர்கள் பயன்படுத்திய கார், வேனும், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கிருலப்பனை பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

# நாட்டின் சில பகுதிகளில் இன்று முதல் மழை?

நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில், இன்று (28) மாலையிலிருந்து அடுத்த சில நாள்களுக்கு, மழையுடனான வானிலை சற்று அதிகரிக்குமென, வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று (27) எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், மத்திய மாகாணங்களில், பல தடவைகள் மழை பெய்யும் எனவும் வடமேல் மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யுமெனவும், திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஊவா மாகாணத்திலும் திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும், சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனவும், வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

> **கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள், இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்**

இதேவேளை, இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள், இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நடத்தவிருந்த போராட்டம் தடுத்து நிறுத்தம்

■ பேரின்பராஜா சபேஷ்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பினர், மட்டக்களப்பு - செங்கலடியில் நேற்று (27) காலை நடத்தவிருந்த போராட்டம், நீதிமன்றத் தடையுத்தரவால், பொலிஸார் தடுத்து நிறுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பினர் இணைந்து, செங்கலடியில் நேற்றுக் காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

யாழப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவிருந்தன.

தற்போது தேர்தலுக்கான களநிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், தமிழ்த் தேசியத்துக்கும் தமிழர்களின் பிரச்சினைக்கு ஆதரவாகவும் செயற்படுவோரைத் தெரிவுசெய்யவும், காணாமல்ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை சர்வதேசச் சமூகத்தின் கவனத்துக்குத் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லும் வகையிலும், இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவிருந்தன.

இதற்காக, வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களில் இருந்து வருகைதந்த காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஒன்றுகூடிய நிலையில், அங்குவந்த பொலிஸார், குறித்த போராட்டத்தை நடத்தமுடியாது எனத் தெரிவித்தனர். அத்துடன், ஏறாவூர் நீதவான் நீதிமன்றம் ஊடாகப் பெறப்பட்ட தடையுத்தரவைக் காட்டிய ஏறாவூர் பொலிஸார், போராட்டத்தை நடத்த முடியாதென்றனர்.

இருப்பினும், போராட்டம் நடத்துவது தொடரில், சில தினங்களுக்கு முன்பாகவே சுகாதாரப் பிரிவினருக்கும் பொலிஸாருக்கும் தாம், இது தொடர்பில் அறிவித்திருந்ததாகவும் ஆனால், பொலிஸார் திட்டமிட்டுத் தமது போராட்டத்தை முடக்கியுள்ளதாகவும், காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

## என் மீதான விசாரணைகள்
# ‘அப்பட்டமான அரசியல் பழிவாங்கல்கள்’



உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் தன்னைச் சம்பந்தப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் அனைத்தும், அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் என்று, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களக் கிளையில், நேற்று (27) நடைபெற்ற விசாரணையின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “விமல் வீரவன்ச போன்ற இனவாதிகளும் மதவாதிகளும், சஹ்ரானின் தாக்குதலுடன் என்னைத் தொடர்புபடுத்தி, எப்படியாவது கூண்டிலடைக்க வேண்டுமெனச் சதி செய்து வருகின்றனர்” என்றார்.

“கடந்த அரசாங்கத்தின் போதா இந்தத் தாக்குதலுடன் என்னைச் சம்பந்தப்படுத்திக் குற்றச்சாட்டுகள் எழுந்தபோது, தற்போதிருக்கும் பொலிஸ் மா அதிபரே, பொலிஸ் விசேட குழுவொன்றை நியமித்து, இது தொடர்பில் விசாரிக்குமாறு தனது அதிகாரிகளைப் பணித்திருந்தார். இது தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கும் அவகாசம் வழங்கி, பகிரங்க அழைப்பொன்றையும் விடுத்தார்.

“ரிஷாட் பதியுதீன் தொடர்பில் ஏதாவது குற்றச்சாட்டுகள் இருந்தால், பொலிஸில் முறையிடுங்கள் என்று, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஊடாக, 07 நாள்கள் வரையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

“அதன் பிறகு, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, அதுரலியே ரத்தன தேரர், எஸ்.பீ.திஸாநாயக்க உட்பட பலர், என் மீதான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அனைத்துக் குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்பட்டன. பின்னர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும், இப்போதிருக்கும் அதே பொலிஸ் மா அதிபரே, எழுத்துமூல விசாரணை அறிக்கையை அனுப்பி வைத்தார். ரிஷாட்டுக்கு, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடனோ வேறு எந்தப் பயங்கரவாதச் சம்பவத்துடனோ, எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என அதில் அறிவித்திருந்தார். அது நாடாளுமன்றத்தில் அறிக்கையாகவும் வெளிவந்தது.

“அவ்வாறிருந்தும், 15 மாதங்களின் பின்னர், தேர்தல் நெருங்குகின்றவேளை, என்னை இலக்கு வைத்து விசாரணைக்கு அழைத்தனர். எனக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இல்லையென, அனைவருக்கும் நன்கு தெரியும்” என்றார்.

# ‘எம்சிசி ஒப்பந்தம் கைசாத்திடப்படாது’



எம்சிசி ஒப்பந்தம் தொடர்பான கருத்தாடல்களை, நாட்டிலிருந்து முழுமையாக நீக்கிவிட நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரன, அந்த ஒப்பதந்தத்தில் அரசாங்கம் ஒருபோதும் கைசாத்திடப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அம்பலாங்கொடை ஹேமாலி ஹோட்டலில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், எம்சிசி ஒப்பந்தம் தொடர்பாக ஆராய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் விசேட நிபுணர் குழுவொன்று நிறுவப்பட்டிருந்தெனவும் அந்தக் குழுவால், மேற்படி ஒப்பந்தம் நாட்டுக்குப் பாதகமானதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அந்த ஒப்பதந்தத்தில் அரசாங்கம் ஒருபோதும் கைசாத்திடாதெனவும் தெரிவித்தார்.

அதன்படி, விரைவில் அது தொடர்பான யோசனையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அந்தப் பேச்சுக்களை நாட்டிலிருந்து முழுமையாக இல்லாது செய்வதாகவும் எதிர்க்கட்சிகளும் ஜே.வி.பியினரும், தங்களுக்கு வேறு காரணங்கள் இல்லாததாலேயே எம்சிசி ஒப்பந்தத்தை முதன்மைப்படுத்தி பேசுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

காலியில் 9 தேர்தல் தொகுதிகளில், 7 தொகுதிகளை பொதுஜன பெரமுனவே வெற்றிகொள்ளுமெனத் தெரிவித்த அவர், காலியிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள், மொட்டுக்கு வாக்களிக்கத் தீர்மானித்து உள்ளதால், ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்டதை விட அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்வோம் என்றும் தெரிவித்தார்.

## நட்டஈடு கோரி
# சுமந்திரனுக்கு எதிராக வழக்குத் தொடுக்க ஆயத்தம்

■ என்.ராஜ்

சைவ சமயத்தவர்கள் யாரும், சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாமெனத் தெரிவித்த மறவன்புலவு சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தன், 1,000 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி, சுமந்திரனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறினார்.

மறவன்புலவு பகுதியில், சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்ததினால் அமைக்கப்பட்டுவரும் புதிய கோவிலின் கருவறைக்குள், சுமந்திரனின் சுவரொட்டிகள் நேற்று முன்தினம் இரவு ஒட்டப்பட்டிருந்தன.

தேர்தல் விதிமுறைகளை மீறி, கோவிலின் கருவறைக்குள் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமை தொடர்பில், மறவன்புலவு சச்சிதானந்ததால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.



இதன் அடிப்படையில், சாவகச்சேரி பொலிஸாரால், சுவரொட்டிகள் அகற்றப்பட்டன.

இந்நிலையில், இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சைவசமயத்தை இழிவுபடுத்தும் செயற்பாட்டில் சுமந்திரன் ஈடுபடுகின்றாரெனவும் சைவக் கோவில்களுக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் முகமாக, அவருடைய தேர்தல் சுவரொட்டிகளைச் சைவக் கோவில்களின் கருவறைக்குள் ஒட்டியிருக்கின்றாரெனவும், கருவறை என்பது, சைவர்களுடைய நம்பிக்கைக்குரிய இடமெனவும் கூறினார்.

“தேர்தல் விதிமுறைகளையும் மீறி, மக்களுடைய நம்பிக்கையையும் உடைத்து, மேலாதிக்கத்தை உயர்த்தும் முகமாகவே கோவில் கருவறையிலேயே தேர்தல் சுவரொட்டிகளை 26ஆம் திகதி இரவு ஒட்டியிருக்கிறார். இதை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவரிடம் 1,000 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன்” எனவும், அவர் கூறினார். அத்துடன், இந்த வீட்டுக்குப் பொறுப்பான கட்சித் தலைவருக்கு எதிராகவும் சாவகச்சேரி தொகுதி வீட்டுக்குப் பொறுப்பானவருக்கு எதிராகவும் வழக்கு பதிவு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் இரு பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன், கே.எல்.ரி.யுதாஜித்

மட்டக்களப்பில், இம்முறை பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன என்று, மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலாளருமான கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இதற்கமைவாக, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியன, பிரதான வாக்கெண்ணும் நிலையங்களாக அமையப்பெறவுள்ளன.

# பணம், கஞ்சாவுடன் இருவர் கைது

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி - செல்வாநகர் பகுதியில், மூன்று இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் ஒரு கிலோகிராம் கேரள கஞ்சாவுடன், நேற்று (27) முற்பகல் 11 மணியளவில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையச் செயற்பட்ட பொலிஸார், செல்வாநகரை சேர்ந்த ஒருவர் உட்பட இருவரைக் கைது செய்துள்ளனர்.





# ‘கொழும்பில் மனோவின் சூத்திரமே வெற்றிபெறும்’

■ பா.நிரோஸ்

தமிழ் பேசும் மக்களின் நாடாளுமன்றமாகப் புதிய நாடாளுமன்றம் அமைய வேண்டுமெனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி ஜனகன், கொழும்பு மாவட்டத்தில், தமிழ்ப் பிரதிநித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முன்னாள் அமைச்சர் மனோ கணேசனின் சூத்திரம் வெற்றி பெறுமெனவும் தெரிவித்தார்.

வெள்ளவத்தையில் நேற்று (27) நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் தமிழ் மக்கள் பல அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் அதற்குத் தயாராக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ள அவர், கொழும்பு மாவட்டத்தில் 44 கட்சிகளைச் சேர்ந்த 928 வேட்பாளர்கள் களமிறங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பெரும்பாலும், சிங்கள மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படலாம் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, கொழும்பில் தமிழ் வேட்பாளர்களுக்கு வாய்ப்பை வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பில் தமிழர் ஒருவர் தேசியப் பட்டியலூடாகத் தெரிவு செய்யப்படுவாரென பிரதமர் தெரிவித்திருப்பதாகவும் கூறிய அவர், தமிழ் மக்களால் வாக்களித்துத் தெரிவு செய்யப்படக்கூடிய உரிமையை மொட்டுக் கட்சியினர் பறித்துள்ளனர் என்றும் குற்றஞ்சுமத்தினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் கொழும்பில் களமிறக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் ஒப்பந்தக்காரர்களெனவும் தெரிவித்த அவர், கொழும்பில் உள்ள சிங்களவர்கள், மனோ கணேசனுக்கு வாக்களிப்பார்கள் எனவும் கூறினார்.

கொழும்பில்

# ‘தமிழ்ப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்’

■ பா.நிரோஸ்

கொழும்பு மாவட்டத் தமிழர்கள், அறிவாகவும் தெளிவாகவும் சிந்தித்து வாக்களித்து, கொழும்பில் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதோடு, அதனை அதிகரிக்கவும் செய்யவேண்டுமெனத் தெரிவித்த முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோ கணேசன், தமிழ் மக்களின் ஹீரோ தானெனவும் தெரிவித்தார்.

வெள்ளவத்தையில் நேற்று (27) இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், தமிழ் மக்களின் ஏகோபித்த தெரிவாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி தற்போது இல்லை எனவும் இம்முறை யானைச் சின்னத்தை காணவில்லை என்றும் கூறியதோடு, யானைக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகவும் கேலி செய்தார்.



ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கரமசிங்கவோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவோ, தனக்குத் தலைவர்கள் இல்லை எனவும் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தி என்கிற பெயரைத்தானே அந்தக் கட்சிக்கு வைத்ததாகவும் கூறினார். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் எல்லாம் மகாத்மா காந்தியோ புத்தரோ அல்லது நெல்சன் மண்டேலாவே அல்ல எனவும் கூறிய மனோ, எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானெவும் கூறினார்.

கொழும்பு மாவட்டத்தில், இரண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் வரவேண்டுமெனவும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, தன்னை அழிக்க முயற்சித்தாரெனவும் ஆனால், அது அவருக்குப் பயனளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளிலும் பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றை எல்லாம் விட்டு, எனது கட்சியில் ஏற்பட்டிருக்கும் பிளவுகளை மாத்திரமே பேசுவதாகவும், தமிழ் மக்களின் நிஜ கதாநாயகன் தானெனவும் தெரிவித்தார்.

# இராஜாங்கனைக்கு நாளை தபால்மூல வாக்களிப்பு

கொவிட் தொற்றுநோய்ப் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ராஜாங்களை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கான தபால்மூல வாக்களிப்பு, நாளை (29) இடம்பெறவுள்ளதென, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, இராஜாங்களை பிரதேசத்துக்கு விதிக்கப்பட்டிருந்த உல்லாசப் பயணத்தடை, நேற்று (27) மாலை முதல் நீக்கப்பட்டுள்ளதென, இராஜாங்கனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளது.

இம்மாதம் 12ஆம் திகதி முதல், இராஜாங்களை பிரதேசத்துக்கு உல்லாசப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 22 கொரோனா தொற்று நோயாளிகள் கண்டுபிடிப்பு

நேற்றைய தினத்தில் (27) மாத்திரம், 22 கொரோனா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவர்களில் 17 பேர், சேனபுர புனர்வாழ்வு மத்திய நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனைய ஐவர், கட்டார் நாட்டிலிருந்து நாட்டுக்கு வந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை, 2,804ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2,121 நோயாளிகள், இதுவரை குணமடைந்த நிலையில் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் மேலும் 472 பேர், தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

# ரூ. 50 படி நெல் கொள்வனவு

இம்முறை பெரும்போக விவசாயத்தின் போது, ஒரு கிலோகிராம் நெல்லை, 50 ரூபாய்ப்படி கொள்வனவு செய்ய, அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில், 2 இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய, அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்குத் தேவையான 10,400 மில்லியன் ரூபாயை நிதி ஒதுக்கீட்டை, அரச திறைசேறி ஒதுக்கீடு செய்துள்ளதென, நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

புவனேகபாகு கட்டடத்தை

# மீண்டும் நிர்மாணிக்க ரூ. இலட்சம் தேவை இலட்சம் தேவை

தொல்பொருள் இடமாகக் கருதப்படும் குருநாகல் புகனேகபாகு ஹோட்டல் கட்டடத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கு 90 இலட்சம் ரூபாய் தேவையென்று, புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சு மதிப்பாய்வு செய்துள்ளது.

இந்தப் பணம், குருநாகல் மாநகரசபை, வடமேல் மாகாண சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் என, அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக

# ‘4 வருடங்களில் 47,000 புகார்கள்’



2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம், இலங்கையில் 47,177 சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவென, பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து, நேற்று (27) பாதுகாப்பு அமைச்சில் ஏற்பாடு செய்திருந்த விஷேட கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், போதைப்பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, பாடசாலை மட்டத்தில் விஷேட விழிப்புணர்வு குழுக்கள் ஏஉருவாக்கப்பட்டுள்ளன என்றார்.

துரதிர்ஷ்டவசமாக, போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை, அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளில் சிலர், இச்செயற்பாடுகளில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தமை அனைவரும் அறிந்த உண்மையாகும் என்றும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்ட 17 அதிகாரிகள், இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கான அபராதங்கள், தண்டனைகளைக் கடுமையானதாக மாற்றியமைக்கும் வகையில், மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் தற்போது அமலிலுள்ள சட்டங்கள் மிகவும் மென்மையானதாகக் காணப்படுவதால், குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு நியாயமான தண்டனைகள் வழங்க முடியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அவசர தொலைபேசி இலக்கமான 1929க்கு வருடாந்தம் சராசரியாக 550,000 முறைப்பாடுகள் கிடைக்கபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

போதைப்பொருள் வியாபாரம் குறித்து

# ‘பெயர் குறிப்படாமல் கடிதம் எழுதுங்கள்’

தங்களது பிரதேசங்களில் நடைபெறும் போதைப்பொருள் வியாபாரங்கள் தொடர்பாக, பெயர் குறிப்பிடாது ஜனாதிபதி அலுவலகத்துக்குக் கடிதம் அனுப்பி வைக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில், பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில், குருநாகல் - குளியாபிட்டிய கூட்டுறவு விளையாட்டரங்கில் நேற்று (27) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு, மக்கள் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதேவேளை, நாட்டிலுள்ள அனைத்துக் குளங்களையும் புனர்நிர்மாணம் செய்வதற்கு, தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மண்பாண்டக் கைத்தொழில்சார் சுயதொழிலில் ஈடுபடுகின்ற சிலர், தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதிக்குத் தெரிவித்த நிலையில், அவர்கள் சுதந்திரமாகத் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கு இடமளிக்குமாறு, ஜனாதிபதி, அவ்விடத்திலேயே பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஸ்ரீ லங்கா ப்ரீமியர் லீக் இருபதுக்கு 20

# ஒகஸ்ட் 20 முதல் செப். 20 வரை நடத்தத் தீர்மானம்

ஸ்ரீ லங்கா ப்ரீமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியை, ஒகஸ்ட் 28 முதல் செப்டெம்பர் 20ஆம் திகதி வரை நடத்துவதற்கு, நேற்று (27) கூடிய இலங்கைக் கிரிக்கெட் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, 23 போட்டிகள் அடங்கிய இந்தத் தொடரை, உள்நாட்டிலுள்ள 5 சர்வதேசக் கிரிக்கெட் மைதானங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம், ரங்கிரி தம்புளை மைதானம், பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானம், சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில், இப்போட்டித் தொடர் நடத்தப்படவுள்ளது.

இதில், ஐந்து குழுக்கள் கலந்துகொள்ளவுள்ளதோடு அவை, கொழும்பு, தம்புளை, கண்டி, காலி, யாழ்ப்பாணம் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

இந்த ஸ்ரீ லங்கா ப்ரீமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில், இலங்கையின் கிரிக்கெட் வீரர்களுடன், சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் 70க்கும் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர் என்று, இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



# போராட்ட வீரர்களைத் தூற்றும் ‘சிவி’ கூட்டணி...

தமிழ் மக்களின் அரசியலில் தமிழீழ விடுதலைப் போராட்டமும், அப்போராட்டத்துக்காய்க் களமாடிய வீரர்களின் தியாகமும் இரண்டறக் கலந்திருப்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் வாக்குக் கேட்டுப்போகும் அரசியல்வாதிகளுக்கும் இது தெரியும். அதனால்தான், தமிழீழப் போராட்டத்தை எப்படியாவது தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்கிக்கொள்கின்றனர். நிலைமை இப்படியிருக்கையில், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், முன்னாள் போராளிகள் கட்சியைக் கடுமையாக விமர்சித்திருப்பது கண்டிக்கத்தக்கது. “கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வெற்றிபெற வைப்பதற்காக ஆட்சியாளர்களால் எந்தவித நிபந்தனைகளும் இன்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் தயவில் வெளிப்படையாகவே இயங்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியானது, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் வெளிப்படையாகக் கைகோர்த்திருப்பதென்பது, தேர்தல் முடிவடைந்த பின்னர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது மஹிந்த - கோட்டா அரசில் இணைவதற்காக, முன்கூட்டியே உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டிருப்பதையே கட்டியம் கூறி நிற்கிறது” என, சி.வி. விக்னேஸ்வரன் சாடியிருக்கிறார். தமிழீழப் போராட்டத்தையும் அவ்வமைப்பின் வீரர்களையும் வைத்து வாக்குப் பிச்சைகேட்டுக் கொண்டிருக்கும் சிவாஜிலிங்கமும் அனந்தியும் இருந்த மேடையில், அதே போராட்ட வீரர்களைக் கொச்சைப்படுத்திப் பேசும்போது, சிரித்துக்கொண்டு அவர்கள் இருந்தமையை எவ்வாறு நியாயப்படுத்த முடியும். தங்களுடன் இருந்தால் அவர்கள் போராளிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இருந்தால் அவர்கள் துரோகிகள். இதுதான் விக்னேஸ்வரன் கூட்டணியின் கையாலாகாத்தனம்.

இதே ஜனநாயகப் போராளிகள் கட்சி, வன்னியில் இயங்கிக்கொண்டிருக்கையில் ஏறெடுத்தும் பார்க்காத விக்னேஸ்வரன் கூட்டணி உறுப்பினர்கள், இப்போது அப்போராளிகள் பற்றிப் பேசுவதற்கு எதுவித அருகதையுமற்றவர்கள். போராட்டத்தையும் போராட்ட வீரர்களையும் தம் வாக்கு வேட்டைக்காக மாத்திரம் பயன்படுத்துவதில் காட்டும் அக்கறையை, அப்போராளிகளின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிச் சிந்திப்பதிலும் காட்ட வேண்டும். அதைவிடுத்து, அப்போராளிகளைத் ‘துரோகி’ முத்திரை குத்துவது மிகக் கேவலமானது. இத்தகைய கேவலங்கெட்டதனத்துக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர். இத்தகைய இழிசெயலுக்கு ஒத்தூதுபவர்களையும் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். இனிமேலாவது, போராளிகளின் தியாகங்களைக் கொச்சைப்படுத்தாமல், தம் அரசியலைச் செய்வதை ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

தமிழ் Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk







# அறிந்தவன், தெரிந்தவன், ஊரவன் பார்ப்பது அறிவீனம்

**காரை துர்க்கா**

பொதுவாக ஒரு தொழிலை, ஒருவர் மேற்கொள்வதாயின் அது தொடர்பிலான கல்வி அறிவு, ஆளுமை போன்றவை முதன்மையானவை. உதாரணமாக, மருத்துவராகப் பணியாற்றுவதாயின் அது தொடர்பிலான மருத்துவக் கற்கை நெறியைப் பயின்று பூர்த்தி செய்திருப்பதுடன் நோயாளிகள், தாதியருடன் நீடித்த சுமூக உறவைப் பேணும் வகையிலான ஆளுமையைக் கொண்டிருக்க வேண்டும்.

அண்ணளவாக 40 ஆண்டுகளுக்கு முன்பு, சட்டவல்லுநர்களே நமதுநாட்டில் அரசியல் செய்தார்கள். ஆனால் இன்று, கல்வித் துறை சார்ந்த புலமை இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, எல்லோரும் செய்யக் கூடிய தொழிலாக அரசியல் மாறி விட்டது.

இலங்கை நாடாளுமன்றில் உள்ள மொத்த ஆசனங்களில் 196 ஆசனங்களே, மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்காக உள்ளன. மிகுதியாக உள்ள 29 ஆசனங்கள், துறை சார்ந்த வல்லுநர்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டவை. ஆனால் இன்று, இந்த 29 ஆசனங்களில் கணிசமானவை கூட, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பங்கீடு செய்யப்படுகின்ற நிலைவரங்கள் உள்ளன.

இந்நிலையில், வழமைக்கு மாறாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிக கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியில் உள்ளன. இந்த நாடாளுமன்றப் பதவிகளால், நாடு ஆள முடியாது என்றே, 80களில் தமிழினம் ஆயுதம் ஏந்தியது; அல்லது, ஆயுதம் ஏந்துவதற்கு உந்தப்பட்டது.

ஆனால், ஆயுத பலம் மௌனிக்கப்பட்டு விட்ட இன்றைய சூழலில், தெற்கில் எந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும், இனப்பிணக்குத் தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கட்டாயம் தேவைப்படுகின்றது. ஆனாலும், அந்தப் பதவி, தமிழ் மக்களுக்கு கூட்டாகத் தேவையே தவிர, தனியன்களாக அல்ல என்பதைத் தமிழ்க் கட்சிகள் உணராமையே, தமிழ் மக்களது ஆதங்கம் ஆகும்.

கொடும் போர், தமிழ் மக்களது பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் குடும்பங்களையும் மனங்களையும் சீரழித்து விட்டது. இவ்வாறாகத் தமிழ்க் கட்சிகளிடையே பொதுநோக்கம் கருதிய ஒற்றுமை, சீரழிந்தும் சிதைந்தும் போக, சிங்களப் பெருந்தேசியக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் தேர்தல் கடை விரித்துள்ளன.

1948ஆம் ஆண்டு தொடக்கம், ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் மாறிமாறி, தமிழ் மக்களுக்கு நெருக்கடி கொடுத்து வந்திருந்தன. தமிழ் மக்களுக்குக் கூடுதல் நெருக்கடி யார் கொடுக்கின்றார்களோ, அவர்களைச் சிங்கள மக்கள் தெரிவு செய்து, ஆட்சி பீடத்துக்கு அனுப்பி அழகு பார்த்தார்கள்.

அதனது தொடர்ச்சியாக, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சியினதும் ராஜபக்ஷக்கள் தலைமையிலான பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினதும் நிழல்கட்சிகளே ஆகும்.

எவர் எதைச் சொன்னாலும், தமிழ் மக்கள் இன்று அனுபவித்து வருகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும், இன்றுவரை ஆட்சியில் இருந்த பேரினவாதக் கட்சிகளே காரணம் ஆகும். அவர்கள், ஒற்றையாட்சியும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையும் என்ற மேலாண்மையிலிருந்து ஒருபோதும் படி இறங்கி வரப்போவதில்லை.

இதற்கிடையே, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கடந்த வாரம் வெளியிட்டது. அதில் கூட, பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு உள்ளது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பது, ஏனைய மதங்களுக்கு இரண்டாம் நிலை என்பதையே சுட்டி நிற்கின்றது.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியோ, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியோ, ராஜபக்ஷக்கள் தலைமையிலான பொதுஜன பெரமுனவோ, சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோ, ஒற்றை ஆட்சியையும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்ற நிலையிலிருந்து, அவர்களாக விரும்பினாலும் விலக முடியாத நிலைவரமே ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

பேரினவாதக் கட்சிகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அபிவிருத்தியையே பேசுபொருளாகப் பேசுகின்றனர். ஏனெனில், அவர்கள் தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பில் கதைப்பது, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல. வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் போருக்குப் பின்னரான கடந்த 11 ஆண்டுகளில் கண்ட அபிவிருத்தி என்பது கடுகளவே.

ஆனால், அந்த அபிவிருத்தி ஏற்படாமைக்குக் கூட, கூட்டமைப்பே காரணம் எனக் கூச்சல் கூக்குரல் இடுவதே கண்டனத்துக்கு உரியது ஆகும். கூட்டமைப்பு, தமிழ் மக்களது உரிமை சார்ந்த விடயங்களுக்கே, அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டு வந்துள்ளது; வருகின்றது. ஆனால், அதற்காக அபிவிருத்திக்குக் குறுக்கே நிற்க வேண்டிய தேவை, கூட்டமைப்புக்கு ஒருபோதும் இல்லை.

ஆயுதப் போராட்டம், 2009ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை, அமைச்சராக, பிரதி அமைச்சராக, இராஜாங்க அமைச்சராக வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பேரினவாதம், தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பலர் பதவி வகித்து உள்ளனர். ஆனால், அவர்களால் அபிவிருத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடிந்ததா, பெயர் குறிப்பிட்டுக் கூறும்படியாக, தொழிற்சாலைகளை நிர்மாணிக்க முடிந்ததா, ஏன், முன்னர் இயங்கு நிலையிலிருந்த தொழிற்சாலைகளை, மீள இயங்க வைக்க முடிந்தா?

தமிழர் பிரதேசங்களில், தமிழ் மக்களது கடற்றொழிலுக்குத் தடையாக இருக்கின்ற சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையின மீனவர்களை வெளியேற்ற முடிந்ததா?

தமிழர் பிரதேசங்களில், தமிழ் மக்களது பூர்வீகக் காணிகளைக் கபளீகரம் செய்து, அவர்களது கண் முன்னே நெல்மணிளை அறுவடை செய்து, தங்களது பொருளாதாரத்தை உயர்த்துகின்ற பெரும்பான்மையின விவசாயிகளிடமிருந்து எம் காணிகளை மீட்க முடிந்ததா? இப்படியே பட்டியலை நீட்டிக் கொண்டு போகலாம்.

ஒரு தேசிய இனத்தை அழிக்க வேண்டுமெனின், அதனது நிலம், மொழி, பொருளாதாரம், பண்பாடு என்பவற்றைச் சிதைக்க வேண்டும். அந்தவகையில், தமிழ் மக்களது பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து தன்னிறைவு நோக்கி நகருவதை, எக்காலத்திலும் பேரினவாதம் விரும்பப் போவதில்லை.

விடுதலைக்காகப் போராடும் இனம், வாய்க்கும் வயிற்றுக்கும் நேரத்தைச் செலவிட்டால், அடுத்த விடயங்கள் தொடர்பில் சிந்திக்க மாட்டார்கள் என்ற சித்தாந்தம், அடக்குமுறையாளர்களிடம் எப்போதும் உண்டு. அது பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கும் பொருந்தும்.

இந்நிலையில், உரிமையுடன் கூடிய அபிவிருத்தி, அபிவிருத்தியுடன் கூடிய உரிமை என்ற அழ(மு)கிய கோசங்களுடன் பல பேரினவாதக் கட்சிகளின் தமிழ் வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கில் பவனி வருகின்றார்கள்.

இது ஒருவிதத்தில் சரி எனப்பட்டாலும், எங்களது உரிமைகள் கிடைக்கின்ற போது, எங்களது பொருளாதாரம் தொடர்பில் நாங்களே திட்டமிடலாம் அல்லவா, நாங்களே செயற்படுத்தலாம் அல்லவா?

எனவே, பேரினவாதக் கட்சிகளில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போட்டியிடுபவர்கள் அங்குள்ள தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களைக் காட்டிலும் வல்லவர்களாக இருக்கலாம்; நல்லவர்களாக இருக்கலாம்; எங்களது ஊரைச் சேர்ந்தவராக இருக்கலாம்; எங்களுக்குத் தெரிந்தவராக இருக்கலாம்; எங்களை அறிந்தவராக இருக்கலாம்.

ஆனால், அதற்காக அவருக்கு வாக்களிக்க முன், ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டும். ஏனெனில், அவர்களுக்குத் தமிழ் மக்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்காலும் அவர் தெரிவு செய்யப்படாது விட்டாலும், இது, அவர்களது கட்சி, தேசிய ரீதியில் பெறும் ஒட்டு மொத்த வாக்கையும் அதிகரிக்க உதவும். இது அந்தக் கட்சியினது தேசியப் பட்டியல் அங்கத்தவர்களை அதிகரிக்கும்.


அடுத்து, தேசியக் கட்சிகள் தங்களது நலன் சார்ந்து, தேசிய ரீதியில் நாடாளுமன்றில் முடிவுகள் எடுக்கின்ற வேளையில், அதில் இருக்கின்ற நம்மவர், அதற்கு மனதளவில் உடன்படாவிட்டாலும், தான் சார்ந்த கட்சி என்ற அடிப்படையில் உடன்பட வேண்டி வரும்.

இதற்கு மேலதிகமாக, தமிழினத்துடன் இன்றுவரை வீணே, தேவையற்று மல்லுக்கட்டி வருகின்ற கட்சியில், நாம் இதுவரை இருந்து சாதித்தது என்ன, இனிச் சாதிக்கப் போவது என்ன, சாதிக்க விரும்பினாலும் பேரினவாதம் சற்றேனும் அனுமதிக்குமா?

இது வரையிலான காலமும், அரசியல் தீர்வுத்திட்டங்கள் தோல்வி அடைவதற்குக் காரணம், தமிழ்க் கட்சிகள் அல்ல. மாறாக, தமிழர்களது உரிமைகளை இம்மியளவேனும் தரமறுக்கும், சிங்களப் பேரினவாதக் கட்சிகளே ஆகும்.

ஆனால், இனிவரும் காலங்களிலும் தமிழர் தரப்பும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தீர்வு காணும் பொருட்டு, அவர்களுடனேயே பேச்சுகளில் ஈடுபட வேண்டும். இதுவே யதார்த்தம்; இதுவே களநிலைவரம்.

அதற்கு நாம் எம்மை வளப்படுத்த வேண்டும்; வலுப்படுத்த வேண்டும். மாறாக, எமக்குத் துன்பம் தந்தவர்களையே நாம் வலுப்படுத்தலாமா? சற்றுச் சிந்திப்போம்; சலிக்காமல் எம்மவர்களுக்கு வாக்களிப்போம்.



## வாழ்வியல் தரிசனம்

பூக்கள் தோறும் துடிப்புடன் பறந்து, தேன் எனும் மதுவைத் தேடும் தேனீக்கள் மூலம் பல்லாயிரம் விருட்சங்கள் பரவிவளர்கின்றன. மகரந்தச் சேர்க்கையால் பூக்களூடாக மரங்கள் பரந்து நிற்கின்றன.

மனிதா! நீவிர் எத்தனை மரங்களை நாட்டினீர்? அவைகள் உருவாக, உங்கள் பங்கு என்ன? அவைகளை அழித்து, காசுசேர்க்கச் சட்டவிரோதமாகச் செயற்படும் கும்பல்கள் பல இருக்கின்றன.

காடுகளில் தீ பரவுவதற்குப் பல காரணங்கள் இருப்பினும் சிகரெட்டைப் பற்றிவிட்டு, வீசும் அடிக்கட்டைகூட, தீ பரவலுக்குக் காரணமாகி விடுகின்றது. அதுமட்டுமல்ல, காடுகளின் அருகில் வாழும் மனிதர்கள், வழிப்போக்கர்களால் எரிக்கப்படும் குப்பைகள், காய்ந்த வயலில் தீ மூட்டப்படுவதால் விபரீதமாகி விடுகின்றன. பகுத்தறிவை மறைக்கும் அடாவடித்தனங்களால் உலகம் உருகிக்கொண்டிருக்கிறது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட மூதூர் மூன்றாம் கட்டை மலையடிவாரத்திலிருந்து கிண்ணியா சூரங்கல் வரை செல்கின்ற பிரதான உள்ளக இணைப்பு வீதியைப் புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் உரிய பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால், மிகமோசமாகச் சேதமடைந்து, வீதி நெடுகிலும் பள்ளமும் படுகுழிகளுமாக, வீதி சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால், இவ்வீதியூடாகச் சென்றுவரும் பொதுமக்களும் வாகன ஓட்டுநர்களும் பெரிதும் சிரமப்படுகின்றனர். அத்துடன், விபத்துகள் நேர்ந்துவிடுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம் காணப்படுகின்றன.

மாரிகாலத்தில் இவ்வீதி சேறும் சகதியுமாக மாறுகின்றது. இதனால், அக்காலங்களில் இந்தவீதி ஊடாகப் பயணிக்கவே முடியாத அவலநிலை தொடர்கின்றது. இவ்வீதியில் பதினைந்தாம் வாய்க்கால் வரை, நெல் வயலுக்குச் சென்றுவர வேண்டிய விவசாயிகளும் தமது விவசாய உபகரணங்களை எடுத்துவருவதற்கும் விளைபொருள்களை எடுத்துச் செல்வதற்கும் வீதி சேதமடைந்து காணப்படுவதால் சிரமப்படுகின்றனர்.

அத்துடன் வீதியூடாகவே அதிக கனரக வாகனங்கள் மண் ஏற்றிக்கொண்டு பயணிப்பதால், இந்தவீதி பயன்பாட்டுக்கு உதவாதவகையில் மேலும் சேதமடைந்து சென்றுகொண்டிருக்கின்றது. இத்தகைய இடர்களைக் கருத்திற்கொண்டு இவ்வீதியைப் புனரமைக்க வேண்டுமென்பதே பொதுமக்களின் கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

-எஸ்.எல். நௌபர்



பாதாள உலகக் கோஷ்டியினரை

# ‘அரசியல்வாதிகள், பொலிஸாரே பாதுகாக்கின்றனர்’



அரசியல்வாதிகளும் பொலிஸாரும், பாதாள உலகக் கோஷ்டியினரைப் பாதுகாப்பதாலேயே, அவர்களை ஒழிக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் பலவீனமாகி உள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பத்தரமுல்ல - நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**“ பாதாள உலகக் கோஷ்டியினரை, அரசியல்வாதிகளும் பொலிஸாரும் பாதுகாப்பதாலேயே, அவர்களை ஒழிக்க முடியாதுள்ளது. பிரதானமாக, நாட்டின் சட்டத்துறையை ஸ்தீரத்தன்மை மிக்கதாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன**

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் ஏற்பட்டிருக்கும் பலவீனங்களாலேயே, பொலிஸாரால் போதைப்பொருள் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

பாதாள உலகக் கோஷ்டினர் நாட்டில் தோன்றுவது, சாதாரணமானதொன்றெனத் தெரிவித்த அவர், அவர்கள் 3 அல்லது 6 மாதங்கள் தொடர்ந்துச் செயற்படுவதாக இருந்தால், அவர்களுக்கு அரசியல்வாதிகளினதோ அல்லது பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளினதோ ஒத்துழைப்பு கிடைக்க வேண்டுமெனவும் கூறினார்.

பாதாள உலகக் கோஷ்டியினரை, அரசியல்வாதிகளும் பொலிஸாரும் பாதுகாப்பதாலேயே, அவர்களை ஒழிக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்த அவர், பிரதானமாக, நாட்டின் சட்டத்துறையை ஸ்தீரத்தன்மை மிக்கதாக்க வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பூஸா சிறைக்கைதிகளுடன்

## 15 அதிகாரிகளுக்குத் தொடர்பு?

### புலனாய்வுப் பிரிவினர் தகவல் திரட்டியுள்ளனர்



பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடையோருடன் நெருங்கியப் பழகியதாகக் கூறப்படும் சந்தேகநபர்களான 15 அதிகாரிகள் குறித்து, புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டியுள்ளனரென, சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிசிடிவி கமெராவை மூலமாகக் கொண்டு, புலனாய்வுப் பிரிவினர் மேற்படி அதிகாரிகள் குறித்த தகவல்களைத் திரட்டியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 15 அதிகாரிகளிடையே, ஜெய்லர்களும் சிறைக்காவலர்கள் சிலரும் அடங்குவதாக அறியமுடிகிறது. அத்துடன், இதற்கு முன்னர் மேற்படி சம்பவம் தொடர்பில் இனங்காணப்பட்ட சிறைக் காவலர்கள் தொடர்பான அறிக்கை, சிறைச்சாலைகள் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேற்படி 15 பேர் குறித்தும் அறிக்கை கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் செயற்படும் பாதாள உலகக் கோஷ்டியினர், போதைப்பொருள் வர்த்தகர்கள் 131 பேர், பூஸா சிறைச்சாலையில் விசேட சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காலி சிறைச்சாலையில்

## 200 கைதிகளுக்கு பிசிஆர் பரிசோதனை



காலி சிறைச்சாலையில் இருந்து சேனபுர தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு கைதிகளில் ஒருவர், கொரோனோ தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டுள்ளதால், காலி சிறைச்சாலையிலுள்ள 200 கைதிகள் மற்றும் 20 அதிகாரிகளுக்கு, நேற்று (27), பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, காலி மாவட்ட சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்ட மேற்படி கைதி, அண்மையில் வெலிக்கடையில் இனங்காணப்பட்ட தொற்றாளருடன் தொடர்புகளைப் பேணியவரெனவும் அவர், காலி சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் சேனபுர தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு 18 தினங்களின் பின்னர், மூன்றாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனை மூலமே, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, காலி சிறைச்சாலையில் உள்ள கைதிகள் மற்றும் அதிகாரிகள் இவ்வாறு பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

CIDஇல் ரவி;

## 5 மணிநேர வாக்குமூலம்



இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில், நேற்று (27) காலை 9.30 மணிக்கு ஆஜராகினார்.

சுமார் 5 மணிநேரமாக அவர் வாக்குமூலம் வழங்கிய பின்னர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

இதற்கு முன்னரும், இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, ரவி கருணாநாயக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ‘சம்பந்தனின் கருத்தை நம்ப முடியாது’



அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கும் கருத்தை நம்ப முடியாதென, ஆளுங்கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், பல வருடங்களாக சம்பந்தனுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் வாக்களித்த மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்ன என்பதை, அனைவரும் சிந்திக்க வேண்டுமெனவும் நல்லாட்சி காலத்தில், மக்கள் சார்ந்து செயற்படாத எதிர்க்கட்சியாகவே கூட்டமைப்பு இருந்ததெனவும் கூறினார்.

கடந்த 40, 50 வருடங்களாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன, மதவாதங்களை மக்கள் மத்தியில் தூண்டியே ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றிபெற்றதாகத் தெரிவித்த சுசந்த புஞ்சிநிலமே, இம்முறை அது நடக்குமா என்பது கேள்விக்குறியாகுமெனவும் கூறினார்.

## ‘மின்சார வசதி அற்றோருக்கு சூரிய சக்தி மின் கருவிகள்’



இலங்கையில் மின்சார இணைப்பு இல்லாத வீடுகளுக்காக, பொதுத் தேர்தலின் பின்னர் இலவசமாக சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பிறப்பிக்கக்கூடிய மின் கருவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, போக்குவரத்துச் சேவைகள் மற்றும் மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் மின்சார இணைப்பின்றி, 12,500 குடும்பங்கள் உள்ளன என்றும் இக்குடும்பங்கள், மின் இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக உள்ளபடியால், அவர்களுக்கு இலவசமாக சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பிறப்பிக்கக்கூடிய மின் கருவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களை

## அழைத்துவருமாறு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது



வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்கள், கொரோனா வைரஸ் பரவலால் பாதிப்படைந்துள்ள நிலையில், அவர்களை நாட்டுக்கு அழைத்துவர, அரசாங்கத்துக்கு உத்தரவிடக் கோரி, உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணியாகச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்குவால், இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக, ஜனாதிபதி சார்பாக சட்ட மா அதிபர், சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, குடிவரவு, குடியகழ்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த மனு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள நாகானந்த கொடிதுவக்கு, கொரோனா வைரஸால் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளில் வாழும் அதிகளவான இலங்கையர்கள், பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸால், இதுவரையில் 42 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ள நாகானந்த கொடிதுவக்கு, எனவே வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு வழங்கப்பட்ட

## எண்ணெய்த் தாங்கிகளை மீளப்பெற நடவடிக்கை

திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகள் 25, வரி அடிப்படையில் இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

**“ திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் கட்டமைப்பை அபிவிருத்திச் செய்யும் பணிகள், இந்தியன் ஒயில் நிறுவனத்தையே சார்ந்துள்ள போதும், அபிவிருத்திகளை மேற்கொள்வதில்லை**



இது தொடர்பில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டதில், சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் கட்டமைப்பை அபிவிருத்திச் செய்யும் பணிகளும், இந்தியன் ஒயில் நிறுவனத்தையே சார்ந்துள்ள போதும், அந்த நிறுவனம், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ‘உரிய பயிற்சியின்மையே விபத்துகளுக்குக் காரணம்’

சாரதி பயிற்சிப் பாடசாலைகளுக்கு முறையான கட்டுப்பாடுகள் இன்மையாலும் முறையாகப் பயிற்சிகள் இல்லாதவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதன் காரணமாகவே, வீதி விபத்துகள் அதிகரிப்பதாக, போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில், 538 சாரதி பயிற்சிப் பாடசாலைகள் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும் குறித்த பயிற்சிப் பாடசாலைகள் முறையான கட்டுப்பாடுகள் இன்றிச் செயற்படுவதாகவும் இதனால், உரிய முறையில் பயற்சிகள் பெறுவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரங்களை வழங்க குறித்த பயிற்சிப் பாடசாலைகள் நடவடிக்கை எடுப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, இந்தப் பயிற்சிப் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆலோசகர்களைத் தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு, தான் மோட்டார் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குறித்த திணைக்களத்தில் உள்ள விசாரணைப் பிரிவைப் பயன்படுத்தி, நாட்டிலுள்ள சகல சாரதி பயிற்சிப் பாடசாலைகளின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் விரிவான வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த எதிர்பார்ப்பதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை சாரதி பயிற்சிப் பாடசாலைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. அதில் பணிபுரியும் ஆலோசகர்களுக்கு போதியளவு பயிற்சி உள்ளதா என்பது தொடர்பில் ஆராயப்படவில்லை. தான் நினைப்பது போல், குறித்த பயிற்சிப் பாடசாலைகளில் உள்ள ஆலோசகர்கள் சிறந்த சாரதிகள், ஓய்வுப்பெற்றவர்களாக இருக்க முடியும். ஆனால், அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான திறன் இருக்க வேண்டும்.

எனவே, இந்த ஆலோசகர்களின் பயிற்சிக்காக வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம். மற்றொரு விடயம் தான் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு புள்ளிகள் வழங்குவதாகும். 2009ஆம் ஆண்டு இத்திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்தாலும் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. எனவே 24 தொடக்கம் 0 வரை சாரதிகளின் குற்றங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். இந்தப் புள்ளி 0ஆகக் குறையும் பட்சத்தில், உடனடியாகச் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். இது சிறந்த முறையாகும். எனவே, இந்த வேலைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளேன் என, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில், நாளுக்கு நாள் விபத்துகள் அதிகரித்துச் செல்கின்றன. அதிகமான விபத்துகள் சாரதியின் கவனயீனத்தால் இடம்பெறுகின்றன. இலங்கையில் முதற்றடவையாக, மேம்பாலமொன்றில் விபத்தொன்று கடந்த வாரம் பதிவாகியுள்ளது. மேம்பாலத்தில் வாகனங்களை முந்திச் செல்லத் தடை. ஆனால் இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி, வீதி சட்டத்திட்டங்களை மதிக்கவில்லை. இறுதியில் இளைஞரொருவரின் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பாடசாலைச் சேவை வாகனங்கள்;

## குத்தகை செலுத்த 6 மாத அவகாசம்

பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கான மாதாந்தக் குத்தகைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு, மேலும் 6 மாதகால அவகாசத்தை வழங்குவதற்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைப் பஸ் சேவை வான் உரிமையாளர் சங்கத்தின் வேண்டுகோ ளுக்கு அமையவே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மைத்திரியாலேயே

# ‘தேசிய பாதுகாப்பு தளர்வடைந்தது’



கணேசன் கமலநாதன்

“நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், தேசிய பாதுகாப்புத் தளர்வடைந்தமைக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக் கூற வேண்டும். அரசமைப்புச் சூழ்ச்சியைத் தோற்றுவித்து, 52 நாள்கள் அரசாங்கத்தை உருவாக்கிய காரணத்தாலேயே, நாட்டின் தேசிய பாதுகாப்புத் தளர்வடைந்தது. அதனால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்பே அறிந்திருக்கவில்லை என்பதை நான் நம்பப்போவதில்லை” என முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான ருவன் விஜேவர்தன தெரிவித்தார். தமிழ் மிரருக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியின் முழு விவரம் வருமாறு.

**கே: நாட்டின் தற்போதைய ஆட்சி, ஆளும் தரப்புப் பற்றிய உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. கொரோனா அச்சுறுத்தலால் நாட்டு மக்கள் உயிர் அச்சத்தில் இருக்கும் போதும் அரசாங்கத்தின் தேவை தேர்தலை நடத்துவதாக மாத்திரமே அமைந்துள்ளது. அதனால் துரதிர்ஷ்டவசமாக நாமும் இந்தத் தேர்தலில் பங்குகொள்ள வேண்டிய அவசியம் வந்துள்ளது. இருப்பினும் நாட்டு மக்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி மீது நம்பிக்கை இருப்பதால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை ஐக்கிய தேசிய கட்சியால் வெற்றிகொள்ள முடியும். நாட்டு மக்கள் தற்போது எதிர்பார்க்கும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமும் ஐக்கிய தேசிய கட்சியிடம் உள்ளதால் தேர்தலை வெற்றிகொள்ள முடியுமென உறுதியான நம்பிக்கை உள்ளது.

**கே: இந்த நிலைமையில் ஐக்கிய தேசிய கட்சியின் பயணம் எவ்வாறாக உள்ளது?**

ஐக்கிய தேசிய கட்சியின் பிளவு காரணமாக வாக்குகளும் பிளவடையும் என்ற நிலைமை காணப்படுகிறது. இருப்பினும் ஐக்கிய தேசிய கட்சியின் மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்களின் ஆதரவு நிச்சயமாகவே கிடைக்கும்.

**கே: ஐக்கிய தேசிய கட்சியால் இம்முறை எத்தனை ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்?**

இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் அசாதாரணமான சூழலுக்கு மத்தியிலேயே இடம்பெறப் போகிறது, அதனால் மக்கள் தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு அச்சப்படும் நிலைமையும் காணப்படுகிறது. அந்த நிலைமையை அண்மையில் நடைபெற்ற தபால் மூல வாக்குப் பதிவுகளின் போதும் கண்டுகொள்ள முடிந்துள்ளது. அதன்படி பார்க்கின்றபோது எந்தவொரு கட்சியும் தாம் பெற்றுக்கொள்ளப் போகும் ஆசனங்கள் தொடர்பான மதிப்பீடொன்றைச் செய்ய முடியாத நிலையிலேயே இருக்கின்றன.

**கே: ஐக்கிய தேசிய கட்சி முகம்கொடுத்துள்ள நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீளப் போகிறது?**

ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுவது இது முதல் தடவை அல்ல. அவ்வாறு பிளவுகள் ஏற்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஐக்கிய தேசிய கட்சி அழிந்துவிடவில்லை. குறிப்பாக டீ.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாஸவின் காலங்களிலும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இவ்வாறான பிளவுகள் வந்துள்ளன. ஆனால், எந்த ஒரு சந்தர்ப்பதிலும் ஐக்கிய தேசிய கட்சி அழிந்துவிடவில்லை. காமினி திசாநாயக்க போன்றவர்கள் புதிய கட்சி அமைத்த போதும் ஐக்கிய தேசிய கட்சி சரிவைச் சந்திக்காமல் மீண்டு வந்ததைப் போலதே, பண்டாரநாயக்க சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்த காலத்திலும் கூட ஐக்கிய தேசிய கட்சியை முடக்கிவிட முடியாமல் போனது என்பதைக் கருத்தில் கொள்ளும் போது ஐக்கிய தேசிய கட்சி என்பது மிகப்பெரிய சக்தி என்பதை உணர வேண்டும்.

**கே: ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை ஏற்கும் எண்ணம் உங்களுக்கும் உள்ளதா?**

ஐக்கிய தேசிய கட்சிக்குள் தலைவர்களுக்குப் பஞ்சமில்லை. அதனால் சரியானதொரு தலைவரைக் கட்சிக்குத் தெரிவு செய்வோம். ஐக்கிய தேசிய கட்சி இறுதியாக நடத்திய மாநாட்டில் கட்சியின் தலைவராக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க சஜித் பிரேமதாஸவும் இணக்கம் தெரிவித்தார். அதன்படி அடுத்த ஆறு வருடங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவே கட்சியின் தலைமைத்துவத்தை வகிப்பார். அவருக்குப் பின்னர் புதிய தலைவர்கள் உருவாகும் போதும் உரிய சந்தர்ப்பத்தில் அந்தத் தலைமைத்துவத்திடம் கட்சியைக் கையளித்துவிடுவார்.

**கே: ஐக்கிய மக்கள் சக்தியின் தோற்றம் அரசாங்கத்துக்கு வாய்ப்பாகும் அல்லவா?**

ஐக்கிய மக்கள் சக்தியின் தோற்றம் என்பதை விடவும், ஐக்கிய தேசிய கட்சியின் பிளவு தற்போதைய அரசாங்கத்துக்குப் பெரும் பலமாக அமைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாட் போன்றவர்களின் கட்சிகள் ஆளும் தரப்புக்குப் பெரும்பான்மை அமைப்பதற்கு அவசியப்படும் போதும் அதனுடன் சார்ந்துகொள்வர். அதனால் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சென்றவர்கள் மீண்டும் கட்சிக்கே திரும்ப நேரிடும்.

**கே: திரும்பி வருவோரை ஐக்கிய தேசிய கட்சி ஏற்றுக்கொள்ளுமா?**

திரும்பி வருவோர் ஏற்றுக்கொள்ளப்படுவர். ஆனால், ஐக்கிய தேசிய கட்சிக்கு அவசியமான வர்களே ஏற்றுக்கொள்ளப்படுவர்.

**கே: சஜித் தொடர்பான பிரதமர் மஹிந்தவின் சர்ச்சைக்குரிய உரை தொடர்பாக ஐ.தே.க வாய்திறக்கவில்லையே?**

அரசியல் களத்தில் இவ்வாறான உரைகளை நிகழ்த்துவதை அடிமட்ட அரசியல் செயற்பாடுகள் என்றுதான் கூறுவேன். ஒரு நபருடைய தனிப்பட்ட விடயங்களை அரசியலுக்குள் புகுத்திக்கொண்டு அதனை விமர்சிப்பது சரியான அரசியல் கலாசாரம் அல்ல. அதனால், மஹிந்தவின் உரையைக் கண்டிப்பதோடு, அவ்வாறான உரைகளை அரசியல் களத்தில் நிகழ்த்துகிறார்கள் என்பது கவலைக்கிடமாகவே உள்ளது.

**கே: அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்தியமைப்போம் என மஹிந்த அணி கூறுகிறதே?**

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் அநாவசியமான திருத்தங்களை மேற்கொள்ளவும், அதனை நீக்கிவிடவும் ஆளும் தரப்பினரால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அதேபோல் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவும் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொண்ட பின்னர் 19ஆவது திருத்தம் தொடர்பாக பேசப்போவதில்லை. அதனால் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கிவிடுவோம் என்பது வெறுமனே தேர்தல் குண்டாக மாத்திரமே இருக்கும் என்பதே உண்மையாகும். நாட்டின் ஜனநாயக அம்சங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியால் சமர்ப்பிக்கப்பட்டு மஹிந்த அணி உட்பட சகல அரசியல் கட்சிகளினதும் ஆதரவுடன் நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தத்தை ஒழிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு ஐக்கிய தேசிய கட்சி கடுமையான எதிர்ப்பை வெளியிடும்.

**கே: 19ஐ காப்பாற்றிக்கொள்ள ஐ.தே.க முன்னெடுக்கும் முயற்சிகள் வலுவானதாக இல்லையே?**

எம்மால் கொண்டு வரப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தைப் பாதுகாக்கும் கடமையை நாங்கள் செய்வோம். அநாவசியமாக அந்தத் திருத்தத்தை நீக்கிவிட முடியாது. எமது வலுவான எதிர்ப்பை அவசியமான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துவோம்.

**கே: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் 19ஐ நீக்க வேண்டும் என்கிறாரே?**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பவர் அவரின் நலன் பற்றி மட்டுமே சிந்திக்கின்ற ஒரு நபர். அதனால் அவருக்கு நாட்டின் நலன் பற்றிச் சிறிதும் அக்கறையில்லை. அதனால் அவர் எந்த நேரத்திலும் மாறக்கூடியவர். எந்தவோர் அணியிலும் உடனடியாகச் சார்ந்துகொள்வார். அதனால் அவரை நாட்டு மக்களும் நிராகரித்துள்ளனர்.

**கே: நல்லாட்சி அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்புச் சிதைந்து போனதெனக் கூறப்படுகிறது. அந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நீங்கள்?**

அந்த நேரத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்ற பதவி எனக்கு வழங்கப்பட்டிருந்தாலும், பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகள் 4 மாத்திரமே எனக்கு வழங்கப்பட்டிருந்தன. அதனைத் தவிர ஏனைய அனைத்துத் துறைகளும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழேயே இருந்ததுடன் தேசிய பாதுகாப்பின் வீழ்ச்சிக்கும் அவரே பொறுப்புக் கூற வேண்டும், குறிப்பாக 52 நாள்கள் அரசாங்கத்தின் காலத்தில் அவரே எவருக்கும் சொல்லாமல் மஹிந்தவைப் பிரதமராக்கியிருந்தார். அந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே தேசிய பாதுகாப்புத் தளர்வடைந்தது. ஆனால், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறியவர்கள் இன்று மைத்திரியைத் தமது அணிக்குத் தலைவராக்கிக் கொண்டுள்ளனர். அதனால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மைத்திரி முன்பே அறிந்திருக்கவில்லை என்று கூறினாலும் அதனை நம்ப முடியாது. அவருக்கு அந்தத் தாக்குதல் தொடர்பில் முன்பே தெரிந்திருக்கும்.

**கே: நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஆளும் தரப்புடன் இணைந்து செயற்பட உள்ளதாகக் கூறப்படுகிறதே?**

ஐக்கிய மக்கள் சக்தியினர் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நாம் ஆளும் தரப்புடன் இணைந்துகொண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப் போவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இருப்பினும் அவ்வாறானதோர் அவசியம் ஐக்கிய தேசிய கட்சிக்கு இல்லை. ஐ.தே.க ஆட்சியொன்றை அமைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். நாட்டு மக்களுக்கும் நெருக்கடியான நிலைமைகள் வரும்போது ஐக்கிய தேசிய கட்சியாலேயே நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று நம்புகின்றனர். எனவே அவசியமான சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்கள் அதிகாரத்தை வழங்குவர். அந்த நேரத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக்கொடுக்கும்.

**கே: நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஐ.தே.கவால் எவ்வாறான தீர்வை வழங்க முடியும்?**

எனது மாமனாரான டீ.எஸ்.சேனநாயக்கவின் காலத்திலிருந்து தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கிய தேசிய கட்சி மீதே நம்பிக்கை கொண்டிருந்தனர். அதன்படி இன்றும் அந்த நம்பிக்கையில் மாற்றமில்லை. அதனால் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கவும் ஐக்கிய தேசிய கட்சியினாலேயே முடியும். எனவே, சகல இனத்தவரும் இந்நாட்டு மக்கள் என்ற அந்தஸ்த்தை நாம் பெற்றுக்கொடுப்போம்.

**கே: வாக்காளர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சகலரும் வாக்களிப்பது அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் வாக்களிக்கத் தவறும் பட்சத்தில் தற்போதைய ஆளும் தரப்பினர் மீண்டும் ஆட்சியைப் பிடித்துக்கொள்வர். அதனால், நாட்டு மக்கள் நெருக்கடிகளுக்கு ஆளாகுவர். எனவே, ஆளும் தரப்பினர் கோருகின்ற 2/3 அதிகாரத்தை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்காமல் பாதுகாக்கும் பொறுப்பை உணர்ந்துகொண்டு, ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் வாக்களிக்க வேண்டியது அவசியம். கொரோனா அச்சுறுத்தல் காரணமாகவே மக்கள் வாக்களிக்கச் செல்ல முடியாது என்ற அச்சம் இருந்தாலும், பாதுகாப்பான முறையில் வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டியது அவசியம்.



> “ ஐக்கிய மக்கள் சக்தியின் தோற்றம் என்பதை விடவும், ஐக்கிய தேசிய கட்சியின் பிளவு தற்போதைய அரசாங்கத்துக்குப் பெரும் பலமாக அமைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை

> “ முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பவர் அவரின் நலன் பற்றி மட்டுமே சிந்திக்கின்ற ஒரு நபர். அதனால் அவருக்கு நாட்டின் நலன் பற்றிச் சிறிதும் அக்கறையில்லை

> “ பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவும் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொண்ட பின்னர் 19ஆவது திருத்தம் தொடர்பாக பேசப்போவதில்லை. அதனால் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கிவிடுவோம் என்பது வெறுமனே தேர்தல் குண்டாக மாத்திரமே இருக்கும் என்பதே உண்மையாகும்

> “ தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறியவர்கள் இன்று மைத்திரியைத் தமது அணிக்குத் தலைவராக்கிக் கொண்டுள்ளனர். அதனால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மைத்திரி முன்பே அறிந்திருக்கவில்லை என்று கூறினாலும் அதனை நம்ப முடியாது

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 28 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.